# நெடுந்தீவு மகாவித்தியாலயம்
# வெள்ளி விழா மலர். 1972

University of Jaffna
373
NED
250012(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

University of Jaffna
250012
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு

மகாவித்தியாலயம்

# வெள்ளி விழா மலர்

**1946 – 1972**

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

**DELFT**

**MAHAVIDYALAYA**

# SILVER JUBILEE SOUVENIR

373
NET

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

373
NET

நெடுந்தீவு

# மகாவித்தியாலயம்

# வெள்ளி விழா மலர்

## 1972

★

250012
250012

பதிப்பு :
ஆசீர்வாதம் அச்சகம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர் உள்ளே.........


நெடுந்தீவு மாவித்தியாலயக் கீதம்
வாழ்த்துரைகள்
ஆசிரியர் குறிப்பு
அதிபரின் அறிக்கை
அறிவூட்டிய ஆசான்
பல்லாண்டு பகர்கின்றேன்
நெடுந்தீவின் கல்வி வளர்ச்சி
விஞ்ஞானமும் சமயமும்
வாழ்க பல்லாண்டு
நெடுந்தீவு – ஒருபுவியியல் நோக்கு
கொடையுள்ளம்
கல்வியும் சமூக மாற்றமும்
மற்றொரு கச்சதீவாய் மாறுமோ
நெடுந்தீவின் பொருளாதார அபிவிருத்தி
தொழிற் கல்வி
உல்லாச புரியாக ....
பார்வை விரிவு
நெடுந்தீவின் புவிச்சரித வியல்பும் நீரும்
பெரியபுராணம் பெரும் காப்பியமா
சிற்பியும் சிலையும்
விருந்தோம்பும் நெடுந்தீவு
ஞாயிறு தோன்றினன் அன்றொரு நாள்
கோரப்புளுதியின் கொடூர வேதனை
வாழ்க நம் கலாசாலை
கூட்டுறவு காட்டியவர்
வர்த்தகக் கல்வியின் முக்கியத்துவம்
கச்சதீவு நெடுந்தீவுக்கே சொந்தம்
வெள்ளிமலரே உயரப்பற

Editor Speaks
My Reflections
A person who served us most
Co-operation "The Key To Human Progress',
Rome was not built in a day
Delft and Development
Religion and man
Our Hero of the space - age
மாணவர் பகுதி
கழக அறிக்கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு மாவித்தியாலயக் கீதம்

(ஆக்கியவர் : இயல் இசைவாரிதி பிரம்ம ஸ்ரீ நா. வீரமணிஐயர்)

''ரகுபதி ராகவ ராஜா ராம்'' என்ற மெட்டு

1. நெடுந்தீவு மகாவித்தி யால யம்
நெஞ்சினில் உறைகலை யால யம்
அருங்கலை வளர்கலா சாலை யாம்
அவள்பதம் சூட்டுதமிழ் மாலை யாம்

2. அன்னைஇ லங்கையின் சிரோன்மணி யாய்
அவனியில் மிளிர்வது நெடுந்தீ வு
மின்னுஞ் சிரோன்மணி வைரம தாய்
மிளிருமகா வித்தி யால யம்

3. செந்தமிழ் ஆங்கிலம் செழுங்கலை கள்
சிறப்புடன் நல்குவாய் எம்அன்னை
பைந்தமிழ் பாடியே பதம்போற் றி
பாரினி லேநிதம் துதிப்போ மே

4. கல்வியுங் கலைகளும் வர்த்தக மும்
கவினுறு தொழிற்கலை விஞ்ஞா னம்
பல்வித அறிவெனுந் தீபமேற் றி
பகுத்தறி வெனும்ஞான ஒளிதருவாள்

5. சாதிம தபேத மெதுவுமின் றி
சமரச உணர்வையே தருமன் னை
மேதினி புகழ் பழம் பண்பினி லே
மேவுநம் தீவகம் வாழிய வே

6. ஆழ்கடல் திரையவள் புகழ்போற் ற
அன்னை கலைமகள் ஆசிநல் க
சூழ்கஇவ் வையகம் இன்பமெ னச்
சொரியும்வித் யாலயம் வாழிய வே

7. ஆன்மீக நெறிகாத்து அறிவுத ரும்
அதிபரா சிரியரும் வாழிய வே
வான்மேவும் புகழ்பெறும் நெடுந்தீ வு
மகாவித்தி யாலயம் வாழிய வே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவித்தியாலய
# வெள்ளி விழா மலர்

மலராசிரியர் :

திரு. சு. சிவநாயகமூர்த்தி

உதவி :

திரு. யோ. கொன்ஸ்ரன்ஸ்

திரு. T. சிறீ விசாகராசா

படப்பிடிப்பும் வார்ப்பும் :

ஞானம்ஸ் ஸ்ருடியோ, யாழ்ப்பாணம்.

ஆலோசகர் குழு :

திரு. இரா. சின்னத்தம்பி — அதிபர்

திரு. P. M. J. அன்ரனி

திரு. சோ. ஞானராசா

திரு. A. சுப்பிரமணியம்

திருமதி S. திருநாவுக்கரசு

Mahavidyalaya
# Silver Jubilee Magazine

*Editor :*

**Mr. S. Sivanayagamoorthy**

*Assistants :*

**Mr. J. Constance**

**,, T. Sri. Vijagarajah**

*Photographers and Block Makers :*

**Gnanams Studio, Jaffna.**

*Advisory Board :*

**Mr. R. Sinnathamby** (Principal)

**,, P. M. J. Antony**

**,, S. Gnanarajah**

**,, A. Subramaniam**

**Mrs. S. Thirunavukarasu**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வண. பிதா. தனிநாயகம்

அடிகளாரின்

# ஆசி உரை

1946ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி தனது கால் நூற்றுண்டுக் கால கட்டத்திற்குள்ளாகத் துரித முற்றேற்றமடைந்துள்ளமை பாராட்டுதற்குரியது. இங்குள்ள மாணவர்கள் வேறிடங்கட்குச் சென்று தம் கல்வி அறிவைப் பெறவேண்டிய இக்கட்டான நிலையை நீக்கி அவர்களது இன்னல்களைப் போக்குவதை இட்டுப் பெருமைப்படும் அதே வேளையில் உயர்தரக் கல்வியிலும் இங்குள்ள மாணவர்கள் பயிற்சிபெற வழிவகைகள் மேற்கொள்ளப் படவேண்டியமை இன்றியமையாதது. அலை கடலால் சூழப்பட்டு இத்தீவுமட்டும் தனித்தன்மை பெற்றுத் தனித்துவமாக விளங்கிறல் போதாது. இங்குள்ள மாணவர்கள் யாபேரும் கல்வியில் சிறப்படைந்து தனித் தன்மை கொண்டவர்களாக சிறப்புற்றுத் திகழவேண்டும் என்பது என் ஆசி.

இக்கல்லூரியில் பயிற்சிபெற்ற மாணவர் நெடுந்தீவும், நெடுந்தீவு மக்களும் முன்னேறுவதற்கானதும் வளம் பெறுவதற்கானதுமான தம்மாலியன்ற உதவியைச் செய்ய வேண்டுமென்று என் மனமார வாழ்த்துகின்றேன்.

12-7-72

சே. தனிநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from Dr. Badiudin Mahmud,

## *Minister of Education on the occasion of the*

## Silver Jubilee-J/Delft Maha Vidyalaya

I am pleased to send this message to the Jubilee Souvenir on the occasion of the celebrations of the Silver Jubilee of your school. I am glad to know that this school, which is situated in remote Delft had contributed a great deal towards the education of the children of Delft and to the development of that area. Though your location is remote, I am told that quite a few of your students have done very well and have earned a name for your school.

I am aware of the interest people in your area show towards the education of your children, and I hope your school will develop further and serve the needs of your area.

With best wishes.

**Dr. Badiudin Mahmud,**

Colombo.
15-7-72

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவற்றுறைத் தேசியப் பேரவை உறுப்பினர்

## உயர்திரு. கா. பொ. இரத்தினம் அவர்களின்

# வாழ்த்துரை

நெடுந்தீவு மாவித்தியாலயம் வெள்ளி விழாக் கொண்டாடுவது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது. சென்ற 25 ஆண்டுகளாக நெடுந்தீவு மக்களுக்கு இந்த வித்தியாலயம் பல துறைகளில் தொண்டாற்றி வந்துள்ளது. இன்னும் இது மேலும் பல துறைகளில் தொண்டாற்றுவதற்கு முயல வேண்டும்.

போக்குவரவு வாய்ப்புக்கள் குறைந்த இத் தீவிலுள்ள ஒரேயொரு மாவித்தியாலயத்துக்கு வேண்டிய வாய்ப்புக்களையும் வசதிகளையும் அரசாங்கம் கொடுத்து உதவுதல் இன்றியமையாதது. இந்த மாவித்தியாலயத்தை முன்னேற்றமடையச் செய்வதற்குப் பெற்றோர்களும் பழைய மாணவர்களும் தங்களாலியன்ற தொண்டுகளைத் தொடர்ந்து செய்தல் வேண்டும்.

இம் மாவித்தியாலயத்தை எல்லாத் துறைகளிலும் நிறைவான ஒரு மாவித்தியாலயமாக ஆக்குவதற்கு எல்லோரும் அயராமல் உழைப்போமாக !

இப்பொழுது இம்மாவித்தியாலயத்தில் கடமையாற்றும் அதிபரும் ஆசிரியர்களும் இம்மாவித்தியாலயத்தை முன்னேற்றமடையச் செய்வதற்காக ஒற்றுமையுடன் பணியாற்றுவது பாராட்டத்தக்கது. இம் மாவித்தியாலயத்தின் உழைப்பிலேயே இத் தீவின் வாழ்வும் வளமும் பெரிதும் தங்கியுளதென்பதை எல்லோரும் என்றும் மறவாமல் பணிபுரிவோமாக! வாழ்க மாவித்தியாலயம் !

கா. பொ. இரத்தினம்

வேலணை.
15-7-72

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Regional Director of Education

Education Department,
Jaffna.
28th July 1972

I have great pleasure in sending this message on the occasion of the Silver Jubilee Celebrations of Delft Maha Vidyalaya.

Delft is one of the furtherest off-shore Islands and has in the past been isolated from the mainstream of social activity of our country. It is therefore not surprising that this part of the country remained backward in the field of education. With the introduction of the Free Education Scheme and the establishment of Government Schools in backward areas to provide equal educational facilities for all children, the long felt educational needs of Delft was satisfied when a Junior Government school was established in January 1946.

From a small beginning with 23 children, this school has now flowered in the fullness of time into a Maha Vidyalaya with as many as 550 children and having classes in Arts, Commerce, Handicrafts and Science streams presenting students for Advanced Level Examinations.

The school could now proudly count a number of its old students in various professions and in other walks of life, who will no doubt gratefully acknowledge what their Alma Mater has done for them. This achievement was possible because of the devotion and dedication to the cause of education by the Principals and Staff-past and present- and the cooperation extended to the Department and the school by the parents and well-wishers.

At a time when we have introduced far reaching reforms in the school curricula to transform the education imparted to be more meaningful and to suit the economic and social needs of the country, I have no doubt that this school will be in the forefront in implementing the new programme and the fruits of this scheme will be fully enjoyed by the people of the area.

I wish the celebrations all success and assure all support and assistance of the Department for the school to fulfil its cherished goal.

*E. V. Abayasekara*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு மாவித்தியாலய வெள்ளி விழா

அன்பையும் பண்பையுமே தமது அரும்பெருஞ் செல்வங்களாகப் பேணிக் காத்து ஆயிரமாயிரம் ஆண்டுகளாக எளிமையும் தூய்மையும் வாய்ந்த மனிதப் பண்பாட்டுடன் இரண்டறக் கலந்து வாழ்ந்து வரும் பல்லாயிரம் மக்களைக் கொண்ட தொன்மையான தீவகம் நெடுந்தீவு. பூரணப் பொலிவுடைய தூய பசும்பாலும், அருமருந்தான பொற்சீந்திலும் இயற்கையின் அமைவாகக் கொண்டமையால் வலிவும் வனப்பும் வாய்ந்த மக்கள் பலர் பல்லாண்டு காலம் தேக சுகத்துடனும் புத்தி தீட்சணியத்துடனும் சுகவாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளனர். இவர்கள் நேர்த்தியான விவேகமும், கூர்த்த மதியும் இயற்கையின் வரப்பிரசாதமாகப் பெற்றிருந்தும் இத்தீவகம் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து கடலாற் பிரிக்கப்பட்டிருந்தமையால் அந்நியர் ஆட்சிக்காலத்திலே யாழ்ப்பாணக் குடநாட்டு மக்கள் பெற்றிருந்த உயர் கல்வி, ஆங்கிலக் கல்வி பெறும் வாய்ப்பினை இழந்து பின்தங்கிய நிலையில் பலகாலம் விடப்பட்டிருந்தது. வசதிகள் குறைந்த இடத்து மக்தள் செய்த தவப்பயனாக இந்நாட்டின் கற்பகதருவென உதித்த கல்வி மந்திரி கௌரவ கன்னங்கரா அவக்கள் 1946 ஆம் ஆண்டு இத்தீவதகத்துக்கு வருகை தந்து இந்த மாவித்தியாலயத்தை ஆரம்பித்து வைத்தார்கள். அதனால் கடந்த ஒரு தலைமுறை காலமான இருபத்தைந்து ஆண்டுகளாக உயர்கல்வி வாய்ப்பினை இத்தீவக மக்கள் பெற்று வாழ்ந்து வருகின்றனர். செய் நன்றி பாராட்டும் தொன்மையான மரபும் பண்பாடும் கொண்ட மக்கள் இலவச உயர்கல்வி வசதியினால் பெற்ற நற்பயனை அநுபவித்து அதனை நினைவு கூர்ந்து எடுக்கும் இந்த வெள்ளி விழாவின் ஞாபக மலரிலே எனது இதய பூர்வமான நல்வாழ்த்துக்களையும் சேர்த்துக் கொள்வதில் நான் பெரு மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைகிறேன். இன்னும் பல்லாண்டு இந்த மாவித்தியாலயம் வளர்ந்து பூரண பொலிவுடன் பிரகாசிக்கப் பிரார்த்திக்கிறேன்.

ஊர்காவற்றுறை.
1-8-1972

அ. சி. நல்லையா
வட்டாரக் கல்வி அதிகாரி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல்லூரியின் ஆரம்பகால அதிபர்

## திரு. C. V. E. நவரத்தினசிங்கம் அவர்களின்

# ஆசிச்செய்தி

நெடுந்தீவு மாவித்தியாலய வெள்ளி விழா மலருக்குச் செய்தி அனுப்புவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ''பாடசாலையைத் திற, சிறைச்சாலையை மூடு'' என்னும் பொன்மொழிக்கொப்ப கால் நூற்றுண்டு காலத்தில் இப்பாடசாலையின் சேவை சமூக வாழ்வில் பல துறைகளிலும் பற்பல மாற்றங்களை ஏற்படுத்தியது.

கல்வியின் அடிப்படை நோக்கம் மனிதருக்கு நல்வாழ்வு தருவதே, நல்வாழ்வு அவனது நடத்தையில் ஏற்படுவதே விரும்பத்தக்கது. இத்துறையில் நெடுந்தீவின் மத்தியில் நடுவூர் நற்கனி மரம் போன்று தீவின் சகலருக்கும் பயன்படும் வகையில் இம் மாவித்தியாலயம் கடந்த கால்நூற்றுண்டாக வளர்ச்சியடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலையின் வரலாற்றோடு தொடக்க காலம் முதல் பதினெட்டரை வருடங்கள் தொடர்புடையவன் என்பதால் சிறிது பெருமை அடைகிறேன். ஆரம்ப காலச் சூழ்நிலை பாடசாலையின் முன்னேற்றத்துக்கு வேண்டிய செயல்களை மேற்கொள்ளச் சாதகமாயிருந்திராது. அச்சூழ்நிலையில் எடுத்துக்கொண்ட நடபடிக்கைகள் யாவும் யாவராலும் அங்கீகரிக்கப்பட்டும் இருக்காது. எனினும்,

''தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதில்லை'' என்னும் துணிவினுல் நன் நோக்கத்தோடு சில நடபடிக்கைகள் எடுக்கப்பட்டன, காலமும் சூழலும் கருத்திற்கொண்டு,

> ''பொய்ம்மையும் வாய்மையிடத்துப் புரைதீர்ந்த
> நன்மை பயக்கும் எனின்''

என்ற துணிவினுல் செய்யப்பட்டவற்றை நடுநின்று சீர்தூக்கிக் காண்பது அறிவுடைமையாகும்.

இத்தருணத்தில் பாடசாலையின் தொடர்பான வளர்ச்சிக்குப் பலவகையில் உறுதுணையாயிருந்த சகலருக்கும் நன்றி கூறுவதோடு, தொடர்ந்து இக்கலாசாலை கலங்கரை விளக்கம் போன்று நெடுந்தீவு மக்களுக்குப் பயன் தந்து நிற்கப் புதிய பரம்பரையினர் தொடர்ந்து ஒத்துழைப்பார்களென நம்புகிறேன்.

பண்டத்தரிப்பு.
18-7-72

C. V. E. நவரத்தினசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைப்பாறிய கிராம விதானையார்

## திரு. சு. நாகேந்திரர், அவர்களின்

# ஆசிச்செய்தி

நமது மகாவித்தியாலயத்தின் 25ஆவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப் படும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குமாறு விழாச்சபையினர் என்னைக் கேட்டுள்ளனர்.

ஒரு நாட்டின் சிறப்பு அந்நாட்டில் உள்ள கல்விக் கூடங்களின் பணியைப் பொறுத்ததே. திறமையும் உழைப்பும் மிக்க எமது மாணவர்கள் உலக மொழியான ஆங்கிலத்தில் போதிய ஆற்றல் பெறுவதன்மூலம் நெடுந்தீவின் எதிர்காலம் சுபீட்ச மடையும் என்பதை 25 ஆண்டுகளுக்கு முன்னர் உணர்ந்து கொண்டதன் பயனாக இங்கு ஓர் ஆங்கிலக் கல்லூரியை நிறுவுமாறு அப்போதைய சபாநாயகரும் நாடாளு மன்ற உறுப்பினருமான சேர். வை. துரைச்சாமி அவர்களையும் அரசாங்கத்தையும் வற்புறுத்தி இக்கல்லூரியைத் தொடக்கி வைத்தவன் என்ற முறையில் இன்றைய அதன் 25ஆவது ஆண்டு நிறைவு விழாவின்போது அது நெடுந்தீவுக்காற்றிய உயரிய பணிகளையிட்டு மற்றெல்லோரிலும் பார்க்கப் பெருமகிழ்ச்சியுறுபவன் நானே என்பதை யிட்டுப் பெருமையடைகின்றேன்.

கடமையுணர்ச்சி மிக்க அதிபர், ஆசிரியர்களின் நிருவாகத்தில் அறிவு விளக்க மும், தொழிற் பயிற்சிகளும், ஆன்மீக ஒழுக்கமும் பொலியச் செய்து சிறந்த சமூ கத்தை உருவாக்கும் உயர்ந்த இலட்சியத்தின் வழி நின்று நெடுந்தீவிற்குத் தொண் டாற்றிய இக்கல்லூரியின் ஆரம்பத்துடன் எனது நினைவுகளும் ஒருங்கிணைந்தது என்ப தனால் எமது கல்விக்கூடம் மென்மேலும் வளர்ந்து தீவகத்திற்கு ஒளியூட்ட வேண் டும் என மகிழ்ச்சியுடன் இறைவனை இறைஞ்சி ஆசிக்கின்றேன்.

சு. நாகேந்திரர் ஜே. பி.

நெடுந்தீவு.
16-7-72.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. ச. தலைவர்

## திரு. அ. த. அம்பலம், ஜே. பி. அவர்களின்

# வாழ்த்துரை

நெடுந்தீவு அரசினர் சிரேஷ்ட மாவித்தியாலயம் அதன் வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறது. இதனால் கல்வி மனித வாழ்வுக்கு இன்றியமையாததொன்றென்பது உணர்த்தப்படும்.

இக்கல்லூரியை மிகவும் உயர்ந்த கல்லூரியாக மிளிரச் செய்ய வேண்டியது இத்தீவக மனிதர் ஒவ்வொருவருடைய பொறுப்பும் கடமையுமாகும்.

இதில் நிறைவேறுதிருக்கும் விஞ்ஞானப் பகுதி-கலைப்பகுதி-நுண்கலைப் பகுதி-கணிதப் பகுதி இன்னோரன்ன அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டு சீரும் சிறப்பும் பெற அரசினரும் - பொது மனிதர்களும் கவனம் செலுத்தவேண்டுமென பணிவன்போடு வேண்டுகிறேன்.

இக்கல்லூரிக்கு தொண்டு செய்த பாராளுமன்ற அங்கத்தவர்கள், உள்ளூராட்சித் தலைவர்கள், கல்விப்பகுதி அரசாங்க உத்தியோகஸ்தர்கள்-இதன் அதிபர்கள்-உதவி ஆசிரியர்கள்-இப்போது இவ்விழாவினை நடத்த ஊக்கம் கொடுத்து முன்னின்று நடத்தும் அதிபர் - உடன் ஆசிரியர்கள் - பொதுமக்கள் - மாணவர்கள் யாபேர்க்கும் நன்றியுடையவர்களாக இத்தீவு மக்கள் இருப்பார்களென்பதில் ஐயமில்லை.

இக்கலாசாலை ஒரு முதற்தரமான கல்லூரியாக வளரவேண்டுமெனவும் - இவ்விழா மிகவும் சிறப்பாக நடைபெற வேண்டுமெனவும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

வாழ்க நெடுந்தீவு - வளர்க தமிழினம்!!

கிராம சபை
நெடுந்தீவு
2-8-72

அ. த. அம்பலம் ஜே. பி.
கி. ச. தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dedication

to

Mr. C. V. Edward Navaratnasingham

the founder Principal

of

Delft Mahavidyalaya

on the occasion

of the Silver Jubilee

celebration of the

School.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OUR FOUNDER PRINCIPAL



**C. V. EDWARD NAVARATNASINGHAM Esqr.**
**17-1-1946—31-7-1964**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் குறிப்பு

**அன்புள்ள வாசக நேயர்களே!**

இன்று எமது வித்தியாலய வரலாற்றில் ஒரு பொன்னுளாகும். 25 ஆண்டுகள் பூர்த்தியாகி வெள்ளிவிழாக் கொண்டாடுகின்றேம். இதையிட்டு எம் தீவக மக்களெல்லாம் பெருமைப்பட வேண்டியவர்களே. பொருளாதார வசதியின்றிக் கல்வி வசதியின்றிப் பின் தங்கியவர்களாக விருந்த எம் மாணவர்க்கு 1946 ஆம் ஆண்டு இலவசக் கல்வியின் தந்தையான C. W. W. கன்னங்கரா அவர்களின் திட்டத்தின் கீழ் ஒரு இலவச ஆங்கிலப் பாடசாலை நிறுவப்பட்டது இருண்டவானில் கதிரவன் தோன்றியது போலாகும்.

இக் கல்லூரியின் ஆரம்ப காலத்தையும் இன்றைய நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இதன் சாதனைகளையும், பணியாற்றிய ஆசிரியப் பெருந்தகைகளையும் நாம் போற்றக் கடமைப்பட்டவர்களாவோம். விசேடமாக இதன் முதல் அதிபர் திரு. C. V. E. நவரட்ணசிங்கம் இக்கல்லூரியின் வளர்ச்சியில் காட்டிய அக்கறையும் மாணவரின் கல்வி வளர்ச்சிக்காக எடுத்த நடவடிக்கைகளுமே இன்றைய கல்லூரியின் கவினுறு தோற்றத்திற்கும் பல துறைகளிலும் பல இடங்களிலும், ஏன் வெளி நாடுகளிலும் நம் மாணவர் சிறப்புடன் உயர் உத்தியோகங்கள் பார்ப்பதற்கும் வழிகோலியவர் என்றுல் மிகையாகாது.

இவருடன் அக்கால ஆசிரியர்கள் செய்த சேவைகள் அளப்பில. அன்னுரின் ஒத்துழைப்பாலேயே கல்வியில் முன்னேற்றமடையக் கூடியதாகவிருந்தது.

எமது நாட்டின் கல்வி வளர்ச்சிக்காக உழைத்த நம்மூர்ப் பெரியார்கள் பலர். அவர்களில் இப் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு, தமது காணியையும் தற்காலிகமாகக் கொடுத்துதவியர் முன்னுள் தலைமைக்காரர் திரு. க. நாகேந்திரர் அவர்களாவர்.

இத்துணை வளர்ச்சியடைவதற்கு பாடசாலை அதிபர்களோடு எம் பெற்றுரும் பழையமாணவரும், நல்லெண்ணமுள்ள பெரியோர்களும் சிறந்தமுறையில் ஒத்துழைப்பு நல்கிவந்தார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. பொருளாதாரம் குறைந்த பெற்றேரெனினும் பாடசாலை வளர்ச்சிக்குத் தம்மாலானதைச் செய்ய என்றுமே பின்னிற்கவில்லை.

இம்மலரின் முகப்பை அழகு செய்யும் படத்தில் தெய்வாம்சம் பெற்ற கற்பகத்தருவாம் பனையும், அன்புக்கும் சாந்தத்துக்கும் உறைவிடமாய் மக்களுக்குப் பெரும் பயன் கொடுக்கும் பசுவும் காணப்படுகின்றன. இவையிரண்டும் நம் தீவுக்கு அணி செய்வன. எம்நாட்டு மக்களின் குன்ருச் செல்வங்களான இவை; தம்மையடைந்தார்க்கு சிறப்புச் செய்வார்போல், பச்சோலை ஆரவாரித்து ஓங்கிநிற்கின்றது பனை. அதன்சிறு நிழலையும் பெரிதெனமதிக்கும் நன்றியுள்ளத்தோடு அதன்கீழ் தான் கற்றவற்றை மீட்கும் நல்மாணவனைப் போல் படுத்திருக்கிறது பசு. அட்டையில் காணப்படும் பச்சை, மஞ்சள், சிவப்பாகிய, மூன்று இல்லங்களின் வர்ணங்களும் அன்பு, தூய்மை, பரந்தநோக்கு என்பவற்றை வெளிப்படுத்துகின்றன.

''தெய்வத்தா லாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்''

என்று வள்ளுவர் கூறியபடி முயற்சிவிதியையும் வெல்லும் என்ற மந்திரவாக்கு எம் கலாசாலையின் இலட்சியத்தைக் காட்டுகிறது.

மலரின் உள்ளே கல்விமான்களின் வாழ்த்துரைகளும், இனிய பல்துறைக் கவிதைகளும். அறிஞர்களின் சிந்தனையில் அரும்பி வழிந்த கட்டுரைகளும் இன்பந் தருகின்றன. இளம் மாணவர்கள் தமது கவிதைகளாலும், கட்டுரைகளாலும் தங்கள் ஆற்றலை அறிஞர் உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளனர்.

250012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின், விளையாட்டுப் போட்டிச் சம்பவங்கள், மாணவர் வகுப்பறைகளில் படிக்கும் செய்முறைப் பாடங்களின் காட்சிகள், அதிபர்கள் ஆசிரியர்கள் இல்ல மாணவர்கள், பாடசாலையுடன் சம்பந்தப்பட்ட பெரியார்கள் ஆகியோரின் படங்கள் ஆங்காங்கே இடம் பெற்று அழகு செய்கின்றன.

எங்கள் மலர் மணம் பெற விழைந்து கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதி உதவிய அறிஞர்க்கும் பழையமாணவர்க்கும், எம்மாணவர்க்கும் நன்றியுடையோம். எல்லோரின் கட்டுரைகளையும் கவிதைகளையும் பிரசுரிக்க இச்சிறுமலர் இடந்தராமைக்கு வருந்துகின்றோம். அறிஞர்சிலரின் கட்டுரைகள் காலந் தாழ்த்தி வந்தமையால் மலரில் இடம் பெறாமை மிக வருத்தம் தருவதாகும். அவர்களின் மன்னிப்பையும் வேண்டுகின்றோம் இம்மலருக்கு நல்லன கொண்டு அல்லனவிலக்கும் நல்லறிஞர்களின் அரவணைப்பும் நல்லாசிகளும் கிடைக்குமென்பது எம்துணிபு. இம்மலர் பூரணப் பொலிவுற எமது அதிபரும் சகஆசிரியர்களும் எடுத்த முயற்சிகள் அளப்பல. இம்மலர் வெளியிடப் பொருளுதவி யளித்த பெற்றோருக்கும், பழையமாணவர்க்கும், நல்லெண்ணப் பெரியார்கட்கும் நாம் நன்றியுடையோம். எமக்கு வாழ்த்துரைகள் அனுப்பிய பெரியார்களுக்கும், விளம்பரங்கள் தந்துதவிய ஸ்தாபன உரிமையாளர்களுக்கும் படப்பிடிப்பு, வார்ப்பு என்பனவற்றைச் செய்துதவிய ஞானம் ஸ்ரூடியோ ஸ்தாபனத்தாருக்கும், குறுகிய காலத்தில் அச்சிறப்பதித்துதவிய ஆசீர்வாதம் அழுத்தகத்தாருக்கும் எம் நன்றி.


சகல நோய்களுக்கும் சிறந்த சிகிச்சை பெறுவதற்கும்

உங்களுக்குத் தேவையான எவ்வித மருந்துவகைகளுக்கும்

ஏற்ற இடம்

**மரகதம் மருந்துச்சாலையும்**

**சிகிச்சை நிலையமும்**

டாக்டர் க. மருது

10, மேல்மாடி — நவீன சந்தை

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

**MARAHATHAM PHARMACY AND CLINIC**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OUR PRINCIPAL



**Mr. R. SINNATHAMBY,** *B. A., Dip. in Edu.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் அறிக்கை

எமது மதிப்பிற்குரிய கல்வி அமைச்சின் செயலாளர்
டாக்டர் பிரேமதாச உடகம அவர்களே!

எமது அன்பிற்குரிய பிரதிக் கல்வி மாஅதிபதி
டாக்டர் ரஞ்சித்ருபேரு அவர்களே !!

எமது தேசிய அரச சபை உறுப்பினர் அவர்களே !!!

எமது கல்வித்திணைக்கள அதிகாரிகளே !!!!

இவ்விழாவிற்கு வருகைதந்திருக்கும் பெற்றோர்களே !

ஆசிரியப் பெருமக்களே ! பெரியோர்களே !

பழையமாணவர்களே ! தாய்மார்களே ! மாணவர்களே !

இன்று இவ்வேளையில் எமது அழைப்பை ஏற்று இம் மாவித்தியாலயத்திற்கும், எம் தீவகத்திற்கும் வருகை தந்துள்ள, எமது கல்வி அமைச்சின் மிக உயர் அதிகாரிகளும், இலங்கையின் மிகச் சிறந்த கல்விமான்களுமான இவர்கள் இங்கு வருகை தந்துள்ளது உண்மையிலேயே எமக்கு மகிழ்ச்சியையும், ஊக்கத்தையும் தந்துள்ளது. தவிரவும் யாழ் மாவட்டத்தில் பின் தங்கிய பிரதேசத்தில் ஒன்றான இத்தீவகத்திற்கு சேட்டமாத்திரத்தே வருவதாக ஒப்புக்கொண்டமை பின்தங்கிய இடங்களின் கல்வி முன்னேற்றத்தில் எத்துணைதூரம் அக்கறைகொண்டுள்ளனர் என்பதைக் காட்டுகின்றது. மேலும் இலங்கைக் கல்வி அமைச்சின் செயலாளர் ஒருவர் இத்தீவகத்திற்கு வருகைதந்தது இதுவே முதற் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் வெள்ளிவிழா அறிக்கையை இவ் வேளையில் சமர்ப்பிக்கும் வாய்ப்பு இப் பாடசாலையின் பழைய மாணவனாகிய எனக்குக் கிடைத்தமைபற்றி உண்மையாகவே பெருமை அடைகின்றேன்.

## பாடசாலை ஆரம்பமும் வளர்ச்சியும் :

ஜோண் கென்னடி அவர்கள் கூறியது போல் ஒரு நாட்டின் குழந்தைகள் அந் நாட்டின் மிக உயர்ந்த இயற்கை வளங்களாகும். அவர்கள் அந்நாட்டிற்காகவும், அவரவர்களின் தனித்துவத்திற்காகவும் முன்னேற்றப்பட வேண்டியவர்கள். இதனால் கல்வியின் குறிக்கோள் ''மனிதனுக்கு, மனிதனாகவும், மனிதனாக எப்படி வாழ வேண்டும் என்றும், கற்றுக்கொடு'' என்ற ஆங்கிலக் கவிஞன் வோட்ஸ்வோர்த்தின் கருத்துப்படி அமையவேண்டியுள்ளது. கல்விக் கூடங்களில் நாம் கற்பிப்பவை எல்லாம் பாடசாலையில் படிக்கும் பிள்ளையானது வளர்ந்து பெரியவனாகி சமூகத்தில் இணைந்து வாழவைப்பதற்கேயாகும். பெரிய சமூகத்தில் ஒருவன் எவ்விதம் சமூகம், நாடு ஆகியவற்றிற்காகவும், தனக்காகவும் வாழத்தெரிவதோடு அச்சமூகத்தில் அதற்கியைய எவ்விதம் தன்னை வைத்துக்கொள்கின்றானோ அவனே உண்மைக் கல்வியைப் பெற்றவனாவான்.

இவ்விதமாக இத்தீவக இளைஞர்களை உருவாக்கும் நோக்குடன் இம் மாவித்தியாலயம் 1946 ஆம் ஆண்டு தைத்திங்கள் 17 ஆம் நாள் 23 மாணவருடன் ஓர் கனிட்ட பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. இத்தீவகத்தில் ஏற்கனவே தமிழ் மொழிப்பாடசாலைகள் இருந்தும் ஆங்கில மொழி கற்பதற்கு முதல் ஒளிவிளக்காக இப்பாடசாலை, இலவசக் கல்வித் திட்டத்துடன் அப்பொழுது எமது அரசகழக உறுப்பினரும் சபாநாயகருமாயிருந்த சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியாலும் இலவசக் கல்வியின் தந்தை சேர். C. W. W. கன்னங்கரா அவர்களாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது இந்த இடத்தில் அமைவதற்கு அரசினருக்கும், ஆரம்பகால அதிபருக்கும் உறுதுணையாயிருந்து உதவிய எமது தீவகப் பெரியார்களில் முன்னுள் கிராமசபைத் தலைவர் திரு. சு. நாகேந்திரர் J. P. அவர்கள் குறிப்பிடப்படவேண்டியவராவர்.

இப்பாடசாலை ஆரம்பித்த நாளிலிருந்து பதினெட்டரை வருடங்கள் தொடர்ச்சியாக இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய திரு. C. V. E. நவரத்தினசிங்கம் அவர்கள் இத்தீவகக் கல்வி வளர்ச்சி வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றவராகும்.

''எந் நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச் செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' என்ற பொய்யாமொழிக்கு இணங்க அன்னுர் ஆற்றிய சேவையை இவ்வேளையில் நன்றிப் பெருக்கோடு இத்தீவக மக்கள் அனைவரும் நினைவுகூரக் கடமைப் பட்டுள்ளோம். 1946-ல் இருந்து 1954-ம் ஆண்டுவரை இப்பாடசாலை தற்காலிக கொட்டில்களில் இடம்விட்டு இடமாக மாற்றப்பட்டது. 1954-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17-ம் திகதிக்குப்பின்தான் இப் பாடசாலை அதன் புதியகட்டிடமாகிய தற்போதைய பாடசாலையில் நிலையாக அமைந்தது. 1-1-1958-ல் இப்பாடசாலை சிரேட்ட பாடசாலையாகத் தரம்உயர்த் தப்பட்டது. அதன்பின் படிப்படியாக, மண்டபம், தொழிற்கூடம் ஆராதனை மண்டபங்கள், விஞ்ஞானகூடம் ஆகியவை அனைத்தும் எமது முதல் அதிபரான திரு. C. V. E. நவரத்தினசிங்கம் அவர்களின் முயற்சியாலும், தியாகத்தாலும், அரசின் உதவியாலும் இப்பாடசாலை பெற்றது. சுருங்கக்கூறின் 1964-ம் ஆண்டுவரையும் ஏறத்தாழ 1000 பேர் வரையில் பலதரப்பட்ட அரசாங்க ஊழியராக ஆக்கியதோடு இப்பாடசாலை அமைப்பிலும், அழகிலும், கல்வியிலும் பெற்ற முன்னேற்றமனைத்தும் அம்முதல் அதிபரையும் அவரின் அன்றைய சகாக்களையுமே சாரும்.

இதன்பின் 1964-ம் ஆண்டு ஆவணி 1-ம் திகதியிலிருந்து 1965-ம் ஆண்டு வைகாசி மாதம் 31-ம் திகதி வரையிலும் பண்டிதர் க. யோ. ஆசிநாதன் அவர்களும் அதன்பின் 1972-ம் ஆண்டு தைமாதம் 3-ம் திகதிவரை திரு. நா. குருநாதன் அவர்களும் அதிபராகக் கடமையாற்றினர். பண்டிதர் க. யோ. ஆசிநாதன் அவர்கள் பத்து மாதங்கள் மட்டுமே இருந்ததினுல் குறிப்பிடக்கூடிய சம்பவங்கள் இவர்காலத்தில் இல்லாமலிருப்பது இயற்கையே. திரு. நா. குருநாதன் காலத்தில் முன்னுள் கல்வி அமைச்சின் பிரதிக் கல்வி மா அதிபதி திரு. W. A. வர்ணசூரியா அவர்கள் நெடுந்தீவுக்கு வருகைதந்ததினுல் எமது மாவித்தியாலயம் ஒரு நவீன விஞ்ஞர்ன ஆய்வு அறையைப் பெற்றது. இதற்கு உறுதுணையாக நின்று உதவிய காலஞ்சென்ற ஊர்காவற்றுறை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. M. J. சீமான்பிள்ளை அவர்கள் எமது நன்றிக்குரியவராவர். தவிர, இவ்வாய்வு அறைக்கு உபகரணங்கள் பெறுவதற்கு உதவிய எமது முன்னுள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. V. நவரத்தினம் அவர்களும், முன்னுள் கிராமசபைத் தலைவர் திரு. M. கணபதிப்பிள்ளை அவர்களும் எமது நனறிக்குரியவர்களே. திரு. நா. குருநாதன் காலத்திலேயே திரு. சு. சிவநாயகமூர்த்தி அவர்களின் முயற்சியுடன் வர்த்தகப்பிரிவும் ஆரம்பமானது. 1952-ல் இருந்து எடுக்க முயற்சிக்கப்பட்ட விளையாட்டுமைதானமும் இவர்காலத்தில் பாடசாலைக்கு கையளிக்கப்பட்டது. அத்துடன் 1971-ம் ஆண்டு தைமாதத்தில் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையும் மாவித்தியாலயத்துடன் கனிட்டபிரிவாக இணைந்தது.

''பிறப்பால் எல்லோரும் சமம்; ஆனுல் அவரவருக்கு கொடுக்கும் சந்தர்ப்பத்திலேயே அவரவரின் திறமை தெளிவாகும்'' என்ற உயரிய தத்துவத்தின் அடிப்படையிலேயே இலவசக் கல்வித்திட்டத்தை உருவாக்கினுர், அதன் தந்தை சேர் C.W.W. கன்னங்கரா. இப்பாடசாலை இங்கு ஆரம்பிக்கப்பட்டபின் பல்துறைகளிலும் திறமைமிக்க வீரர்கள் உருவாகி, இந்நாட்டிற்காக உழைக்கின்ருர்கள் எண்பதைக் குறிப்பிடும்பொழுது உண்மையிலேயே நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைப்படுகின்றேன். இத்தினக மாண வர்கள் எக்கல்லூரிகளில் படித்திருப்பினும் அவர்களின் புத்திக்கூர்மையை அவரவரின் ஆசிரியர்கள் போற்றுமல் இருக்கவில்லை. இவ்வித ஆற்றல்மிக்க இளைஞர்களுக்கு இப்பாடசாலை இன்னும் 25 ஆண்டுகட்கு முன்பு தோன்றியிருந்தால் இத்தினகம் இன்னுமொரு வட்டுக்கோட்டையாகவும் இருந்திருக்கக்கூடும்.

## பாடசாலையின் கல்வி நிலையும் புற வேலைகளும் :

விஞ்ஞானப் பிரிவிலும், கலைப் பிரி விலுமாக பல்வேறு மாணவர்கள் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பிற்குத் தராதர மிருந்தும் இப் பாடசாலையில் அவ்வகுப் புக்கள் இல்லாதிருந்ததினால் க. பொ. த. ப (சா. த) வகுப்புடனேயே படிப்பை நிறுத் திக்கொண்டனர். சில வசதியுள்ள மாண வர்கள் மட்டுமே யாழ் நகரிலுள்ள கல்லூ ரிகளிற் சேர்ந்து படிக்கமுடிந்தது. இல வசக்கல்வியின் முழுப் பயனையும் இவர்கள் அனுபவிக்கவில்லையே என்பதனால் 1960 இல் கலைத்துறைப் பல்கலைக்கழகப் புகுமுகவகுப்பு ஏற்படுத்தப்பட்டது. இன்று இப்பாடசாலையிலிருந்து சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்ற வர்கள் மட்டும் பன்னிரண்டுபேர் உள்ள னர். ஆனால் இந்தவாய்ப்பு விஞ்ஞானத் துறையிலும் ஏற்பட்டால் இக்கல்லூரியும் முழுவாய்ப்பை மாணவருக்கு அளிக்கும் ஓர் கல்விக்கூடமாக அமையும். தகுதியான மாணவர்கள் விஞ்ஞானத்துறையில் இருந் தனர் என்பதை பின்வரும் புள்ளிவிபரத் தால் காட்டலாம்.

| ஆண்டு | சித்தியடைந்தோர் | தகுதியானவர் |
|---|---|---|
| 1967 | 20 | 9 |
| 1968 | 22 | 8 |
| 1969 | 25 | 10 |
| 1970 | 34 | 12 |
| 1971 | 32 | 9 |

தவிர, இக்கல்லூரி சரித்திரம், குடியி யல், புவியியல், இரசாயனம், பௌதிகம் போன்ற பாடங்களைப் போதிப்பதோடு நின்றுவிடவில்லை. இங்கு தொழிற்பாடங் களான நெசவு, மரவேலை, விவசாயம், தையல் போன்ற பாடங்களையும் படிப்பிக் கின்றோம். இதன் முக்கியத்துவத்தை பல பழைய மாணவர்கள் இதனால் பிரயோசன மடைந்ததிலிருந்து அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. மேலும் இப் பாட சாலையில் சமரச மனப்பாங்கு, சமத்துவப் பயிற்சி, சனநாயகப்பண்பு ஆகியவற்றை ஒருங்கே மாணவர் பழகவும், அவற்றைத் தமதியல்பாகக் கொள்ளவும் வாய்ப்புக்கள் அளிக்கப்படுகின்றன. இங்கு இந்து மாண வர்களும், றோமன் கத்தோலிக்க மாணவர் களும், றோ. க. அல்லாத கிறிஸ்தவ மாண வர்களும் பரஸ்பர நல்லெண்ணத்துடன் பயில்கின்றனர். இம் மாணவர்கள் வெள் ளிக்கிழமைகளில் தத்தமது ஆராதனை மண்டபங்களுக்கும், கோயில்களுக்கும் சென்று பிரார்த்தனை செய்வர். அத் துடன் மாதத்தில் ஒருமுறை அவ்வச் சம யக் கழகக்கூட்டங்கள் நடைபெறுகின்றன. இந்துக்கள் நவராத்திரி பூசையையும். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துராசா பெருநாளை யும் கோலாகலமாகக் கொண்டாடுகின்ற னர். இதைத்தவிர இந்துக்கள் அவ்வப்போது குருபூசைகள் நடாத்துதல், சமய தீட்சை வைப்பித்தல், சிரேட்ட இந்து மாணவர் கள் உள்ளூர் கோவில்களில் தொண்டர்க ளாக பணியாற்றுதல் ஆகிய சமயப்பணி களில் ஈடுபடுகின்றனர். அதேபோல் கத் தோலிக்க மாணவர்களும் உள்ளூர் தேவா லய சமயக்கிரியைகளில் பங்குபற்றியும், தொண்டாற்றியும் வருகின்றனர்.

எமது பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டு போட்டிகளை நடாத்துவதோடு அமையாது ஊர்காவற்றுறை வட்டாரப் போட்டிகளிலும், யாழ். மாவட்டப் போட்டிகளிலும் பங்குபற்றிப் பரிசில்களும் பெற்றுள்ளது. கல்வித் திணைக்களத்தினால் காலத்திற்குக் காலம் நடாத்தப்படும் பொருட்காட்சிகளுக்கு காட்சிப் பொருட் களை ஆக்கிக்கொடுத்துப் பாராட்டையும் பெற்றுள்ளோம்.

## யான் இவ்வாண்டு ஆரம்பத்தில் பொறுப்பேற்ற பொழுது

யான் இவ்வாண்டு தைமாதம் 3-ம் திகதியில் இங்கு அதிபராகக் கடமை ஏற் றேன். அப்பொழுது 21 ஆசிரியர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

550 மாணவர்களும் இப்பாடசாலையில் இருந்தனர். ஆசிரியர்கள் ஏற்கனவே எனக்குப் பல வழிகளிலும் நன்கு தெரிந்தவர்களாக இருந்ததினுல் எனது கடமையைச் செய்வதற்கு ஓரளவு உதவியாக அமைந்தது.

ஆனுல் முன்பு நடத்தப்பட்டுவந்த கலைத்துறைக் க. பொ. த. ப. (உயர்தர) வகுப்பு இல்லாதிருந்தது. இதற்கு அத்தியாவசியமாக ஓர் புவியியற் பட்டதாரியும் தேவைப்பட்டது. இத்தேவையை வடபிராந்தியக் கல்வித் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியபோது அவர்கள் அதை உணர்ந்து உடனடியாகவே வகுப்புத் தொடங்க ஆவன செய்தனர். இதில் பின்தங்கிய இடமென அக்கறைகாட்டி ஆவன செய்த எமது வடமாநில மேலதிகக் கல்வியதிபதி திரு. K. கனகசபாபதி அவர்களுக்கு நாம் கடமைப்பட்டவர்கள். அத்துடன் இது விடயமாக முயற்சிகள் எடுத்த எமது தேசிய அரசசபை உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கட்கும் எமது கடமைப்பாடு உரியதாகும். மேலும் பல ஆண்டுகளாக க. பொ. த. ப. (சா. த) நெசவு பாடத்திற்குரிய செய்முறைப் பரீட்சை யாழ்ப்பாணப் பாடசாலைகளிலேயே நடந்தது. இதனுல் இப்பகுதிப் பிள்ளைகட்கு ஏற்படும் கஷ்டத்தை உணர்த்திய பொழுது அதை உணர்ந்த எமது கைவினைத் துறை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. M. கனகசபை அவர்கள் இந்த ஆண்டில் இருந்து இப்பாடசாலையிலேயே இப்பரீட்சையைவைக்க நடவடிக்கை எடுத்துள்ளார். இங்கு தேவைப்பட்டசில ஆசிரியர்கள் வேறு பாடசாலைக்கு மாற்றப்பட்டபோது அவர்கள் இப்பாடசாலையில் இருக்கவேண்டிய அவசியத்தைக் கல்விப் பகுதியினருக்கு எடுத்துரைத்தபொழுது அம்மாற்றங்களை இரத்துச் செய்தனர்.

இப்பாடசாலையின் செயற்பாட்டை பெற்றுர் ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகிய இரு சங்கங்களைக் கொண்டே உருட்டவேண்டும் என்பது எனது எண்ணம். இதில் பெற்றுர் ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டத்தை மாசிமாதம் 23-ம் திகதி கூட்டியபோது பெற்றுரில் 80%மானேர் வருகைதந்து ஊக்குவித்தனர். இது சென்ற 25 ஆண்டுகளிலும் நடைபெருத சம்பவம் என்பதில் நான் பெருமை அடைகின்றேன். இவ் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் பெற்றுர் ஆசிரியர் சங்கத்தின் விருப்பமேயாகும். பெற்றுரின் பிரதிநிதிகள் தேவைப்பட்டபொழுதெல்லாம் வருகைதந்து பாடசாலைக்கு உரிய ஆலோசனைகளையும் உதவிகளையும் செய்துள்ளனர். இவ் வெள்ளிவிழாவிலிருந்து ஆண்டு தோறும் மாணவருக்குப் பரிசளித்தல் நடைபெற வேண்டுமென்பது எமது எண்ணம். அதன் தொடக்கமாக இன்று ஒவ்வொரு வகுப்பிலும் மிகத்திறமையான மாணவருக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

## புதிய கல்வித் திட்டம் :

இலங்கை சுதந்திரம் அடைந்து 1970 வரை எமது நாட்டிற்குத் தேவையான தொரு கல்விமுறை ஏற்படவில்லை. இந்த நாட்டிற்குத் தேவையான மனித சக்தியின் தன்மைகளை பலகாலும் உணர்ந்தபொழுதும் அதை உருவாக்கும் ஓர் கல்வி முறையை ஏதோ காரணத்தால் கைக்கொள்ளாதிருந்தனர். இதனுல் படித்து வேலையில்லாதவர்களின் தொகை கூடியதேயொழிய நாட்டின் தேவைக்குரியதாகப் படித்தவர்கள் இல்லாதிருந்தனர். இது நாம் பிரித்தானியர்களிடம் கண்மூடித்தனமாகக் கற்றுக்கொண்ட பாடங்களில் ஒன்று. இதனுல் உடனடித்தேவைக்கு உதவாத சில பாடங்களை உருப்போடத் தெரிந்துகொண்டோமேயொழிய நமக்கு வாழ வழிகாட்டும் தொழிற்பாடங்களான, நெசவு, மரவேலை, விவசாயம், தையல் போன்ற பாடங்களை முற்றுக வெறுத்தும், ஒதுக்கியும் வாழ்ந்தோம். ஆனுல் 1970 க்கு பின் ஏற்பட்ட கல்வித்திட்டத்தின்படி தற்பொழுது 6 ஆம் வகுப்பிற் பயிலும் மாணவரின் எதிர்காலம் முன் எப்பொழுதும் இல்லாதவாறு அமையும் எனக் கல்விமான்கள் அனைவருமே எதிர்பார்க்கின்றனர். தவிரவும் இது படித்த வேலையில்லாப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்பதும் உறுதி. இதுகாறும் கலைத்துறை, விஞ்ஞானத்துறை என மாணவர்கள் பிரிக்கப்படும் பொழுது விஞ்ஞானத்துறை மாணவர்கள் தாம் மற்றவர்களைவிடத் தரத்திற் கூடியவர்கள் என்ற எண்ணம் ஏற்பட்டுக் கொண்டே வந்துள்ளது. இது உளநூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களின் கொள்கைப்படி கல்விக் கு ந்த தன்மையன்று. ஆனால் புதிய கல்வித்திட்டத்தின்படி துறையாசப்பிரிக்கும் தன்மை முற்றுகவே ஒழிக்கப்படுவதனுல் மாணவரிடையே தாழ்வு மனப்பான்மைக்கு இடமே இல்லை. இத்திட்டம் பின்தங்கிய இடங்களில் நல்ல வரவேற்பைப் பெறும் என்பது எமது துணிபு.

## எமது முக்கிய தேவைகள் :

இப்பாடசாலை மேற்கொண்டு வளருவதற்கு சில தேவைகள் உண்டு. இவற்றில் மிக முக்கியமானது ஒரு நூல் நிலையமாகும். இத்தீவகத்தில் பொது நூல் நிலையம் ஒன்றுமே இல்லை. இதனுல் பொதுவாக இத்தீவக மக்களினதும், குறிப்பாக இப்பாடசாலை மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் அறிவுப் பசியைத் தணிக்க இது மிக அவசியமாகின்றது. எனவே தங்களின் வருகையினதும், வெள்ளி விழாவினதும் ஞாபகமாக எமக்கு ஒரு நூல் நிலையத்தை அளிக்குமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகின்றேன்.

இரண்டாவதாக இத்தீவகம் தனித்திருப்பதனுல் இங்குள்ள பிள்ளைகள் இப்பாடசாலையைத்தவிர வேறு பாடசாலைக்குப் போக முடியாத நிலையில் இருப்பதனுல், இப்பாடசாலையை ஒரு மத்திய மாவித்தியாலயமாக தரமுயர்த்தித் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன். வேலணை மத்திய மாவித்தியாலயத்தில் ஏனைய தீவகப்பிள்ளைகள் படிக்க முடியும்போது, இயற்கையினுல் ஏற்பட்ட பிரிப்பினுல் எம் தீவகப்பிள்ளைகள் மட்டும் அப்பாடசாலையின் சேவையைப் பிரயோசனப்படுத்த முடியாததனுல் இக்கோரிக்கையைத் தங்கள் முன் வைக்கிறேன். தற்போது 550 வரையில் இருக்கும் மாணவர் தொகை அடுத்த ஆண்டில் மேலும் 200 மாணவரால் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கிறேன். அந்நிலையில் 6 ஆந் தரத்துக்கு மேற்பட்ட மாணவர்களின் தொகை 500 வரையில் அமையலாம். ஆகவே இம்மாணவத்தொகையின் அடிப்படையில், இத்தீவகத்தின் தூரத்தையும், வசதியீனத்தையும் கொண்டு தங்களிடம் சமர்ப்பிக்கும் இக்கோரிக்கை தங்களின் முக்கிய கவனத்தை ஈர்க்கும் என நினைக்கின்றேன்.

இவ்வறிக்கையில் முற்பகுதியில் குறிப்பிட்டபடி க.பொ.த.ப. (சா.த) விஞ்ஞான வகுப்பில் போதிய தகைமைகள் இருந்தும் க. பொ. த. ப. (உயர்தர) வகுப்புப்படிக்க முடியாதவர்களாகப் படிப்பையே நிறுத்திக் கொள்கின்றனர். ஆகவே இவ்விதமான வசதியற்ற ஆனுல் திறமைமிக்க பிள்ளைகளும் படித்து முன்னேறத்தக்க முறையில் எமது விஞ்ஞானப்பகுதியில் க. பொ. த. ப. (உயர்தர) வகுப்பை வைப்பதற்கும் அதற்குரிய ஆய்வுகூட, ஆசிரிய வசதிகளையும் ஆக்கித்தரவேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் தேவைகள் பலவிருப்பினும் முக்கியமாகத் தங்களால் ஆகவேண்டிய பெரிய உதவிகளையே தங்கள்முன் வைத்துள்ளேன்.

## முடிவுரை :

மதிப்பிற்குரிய பெரியோர்களே !

இத்தீவகத்தின் நிலை ஏனைய இடங்களிலும் வித்தியாசமாக அமைந்ததனுல் இதன் பிரச்சினைகளும் வித்தியாசமாகவே அமையும் என்பது தெளிவு. இதனுல் இத்தீவகக் கல்விப் பிரச்சினைகளும் தனித்தன்மையாகவே ஆராயப்படவேண்டியதாகும். இத்தீவகத்தில் இருக்கும் 13 பாடசாலைகளின் நிலையை ஆராயுங்கால் இவற்றில் பலவற்றில் ஆசிரியர் பற்றுக்குறை இருக்கின்றது. சில பாடசாலைகளில் சில விசேடபாடங்கட்கு ஆசிரியர்களே இல்லை. தவிரவும் வெளியூரிலிருந்து இங்கு வந்துபடிப்பிக்க ஆசிரியர்களும் அதிகமாக விரும்புவதில்லை. இந்நிலையுல் இத்தீவகக்கல்வி சீராகவும் சிறப்பாகவும் மிளிரவேண்டுமானுல் இங்கிலாந்தில் 1967-ல் சிபார்சு செய்யப்பட்ட "பிளௌடன் அறிக்கை" யில் குறிப்பிட்டபடி நல்நோக்குப் பாரபட்ச (Positive Discrimination) அடிப்படையில் செயற்படவேண்டும். அதாவது நெடுந்தீவில் சேவை செய்யும் ஆசிரியருக்கு சம்பளம், தரம் உயர்த்தல், வீட்டுவசதி, போன்றவற்றில் விசேட சலுகைகள் கொடுபடவேண்டும். மாணவர் அடிப்படையில் ஆசிரியர் தொகையைக் கணிக்கும் பொழுதும் இது விசேடமாக கவனிக்கற்பாலது. தவிரவும் உபகரணங்கள் விளையாட்டுவசதிகள், பாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலை இடவசதிகள் போன்றவற்றிலும் இது பின்பற்றப்படலாம். அப்படியாயின் நெடுந்தீவு போன்ற பின்தங்கிய இடங்களில் உள்ளபாடசாலைகளுக்கும் பட்டணத்துப் பாடசாலைகளுக்கும் வித்தியாசம் இருக்க முடியாது. இத்தீவகக் கல்விமுன்னேற்றத்தையொட்டி இப்பிரச்சினையை தங்கள் முன்வைக்கிறேன்.

## எமதுநன்றி :

இறுதியாக இப்பாடசாலை 1946-ல் இருந்து இற்றைவரை இவ்வித முன்னேற்றப் பாதையில் வீறுநடைபோட உதவிய கல்விப்பகுதியினர், முன்னாள் அதிபர்கள், குறிப்பாகத் தனது வாழ்வின் பெரும் பகுதியைத் தியாகசிந்தையுடன் இங்கு செலவு செய்த எமது அன்பு ஆசான் திரு C.V.E. நவரத்தினசிங்கம், அவ்வப்போது நற்கல்வி புகட்டிய நல்லாசிரியர்கள், அதற்கு உறுதுணையாக இருந்த பெற்றார், பழைய மாணவர், மாணவர், அனுதாபிகள் யாபேருக்கும் இவ் வேளையில் இப்பாடசாலையின் சார்பில் நன்றி கூறுகின்றேன். இப்பாடசாலை நன்றாக வளரவேண்டுமென்ற வேணவாவுடன் எமக்கு பல்வழியிலும் ஆலோசனை கூறியும், உதவிகள் செய்தும் உதவும் எமது வட்டாரக்கல்வி அதிகாரி A. S. நல்லையா அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல் எமக்குப் பல்வழியிலும் உதவும் எமது காரியாதிகாரி திரு A C.செபநாயகம் C.A.S. அவர்களுக்கும் ஏனைய இங்குள்ள பல்வேறு அரசாங்க பகுதித் தலைவர்கட்கும் கிராமசபைத் தலைவர் திரு.த. அம்பலம்J.P. அவர்கட்கும் எமது நன்றி உரியது. அத்துடன் இப்பாடசாலை வேலைகளில் என்னுடன் ஒத்துழைக்கும் எமது ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த நன்றி உரியது.

இப்பாடசாலை, விளையாட்டு மைதானம், ஆகியவைகளுக்கு தமது நிலத்தைக் கொடுத்தோருக்கும் இங்கு கற்பித்த ஆசிரியருக்கு, குறிப்பாக வெளியூர் ஆசிரியருக்கு தாயாகவும் தந்தையாகவும் கருதி உணவு கொடுத்து ஆண்டாண்டாக ஆதரித்துவரும் திரு. நா. குட்டிப்பிள்ளை குடும்பத்தினருக்கும் எமது நன்றி. இன்று இவ் விழா நடைபெற நிதியாகவோ வேறு விதமாகவோ உதவிகள் நல்கியவர்கள் அனைவருக்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இப்பாடசாலையை மேலும் முன்னேற்ற என்னால் ஆனதைச் செய்வேன் என்ற நம்பிக்கையோடுதான் இப் பாடசாலையின் பழையமாணவனாகிய நான் இப் பாடசாலைப் பொறுப்பை ஏற்றேன். இதற்கு கல்வித்திணைக்களத்தின் ஆதரவும், பெற்றார், பழையமாணவர் ஆகியோரின் ஒத்துழைப்பும், ஆசிரியரின் உதவியும், மாணவரின் முயற்சியும் கிட்டுமென எண்ணுகின்றேன். இவ்விதம் அமையுங்கால் இப் பாடசாலையை உயர்ந்ததோர் கல்லூரியாக மிளிரச் செய்வது எனது பொறுப்பாகும் என உறுதிகூறி இவ் வெள்ளி விழா அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

வணக்கம்.



**Pandit K. ASINATHAN Esqr.**
*(Former Principal)*
*1-8-1964—31-5-1965*

250012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவூட்டிய ஆசான்

திருமதி சே. வரதராசா

ஸ்கந்தவரோதய கல்லூரி, சுன்னுகம்.

'எழுத்தறி வித்தவன் இறைவன் ஆவன்' என்கிருரே ஔவையார். இது ஒரு வேதவாக்கு—உண்மை பொதிந்த வாக்கு. மக்களை மாக்களினின்றும் வேறுபடுத்துவதாகிய மனிதப்பண்பை, பகுத்தறிவை, உண்மை அறிவை வளர்க்கும் தொழில் மிக மகத்தானது; தூய்மையானது; பெருமைக்குரியது. அத்தொழிலைச் செய்பவன் இறைவனேடு வைத்து எண்ணப்படுதல் இயற்கையே. இவ்வளவு புனிதமிகுந்த ஆசிரியத் தொழிலை, வித்தியா தருமத்தை, உண்மையான ஒரு தருமமாகக் கருதிச் செய்த சிலருள் திரு. C. V. E. நவரத்தின சிங்கமவர்களை ஒருபடி இன்னும் உயர்த்தியே கூறலாம்.

நம் தீவின் மத்தியிலே இன்றுநின்றிலங்குகிறது அரசினர் கல்லூரி, அறிவுக் கூடமாய், கல்விக் கழகமாய் அது இன்று காட்சியளிப்பதற்குக் காரணகர்த்தாவாக விளங்கிய அந்த அதிபரின் தியாகத்தை எல்லோரும் நினைவு கூரவேண்டும். மெய் வருத்தம் பாராது, பசிநோக்கர்து, தம்மனை மக்களைக் கருதாது கருமமே கண்ணுகி உழைத்து இக்கலாசாலையை ஒரு நிலைக்குக் கொணர்ந்த பெருமை அவருக்கே உரியது. இவர் ஒரு கடமைவீரர். தனக்கென ஒப்படைக்கப்பட்ட கடமையை எக்காரணம் கொண்டும் தள்ளிப்போட இவரால் முடியாது. வானமுட்ட அலையெழுந்து வீழுகின்றபோதிலும், அச்சமின்றி வெற்றியோடு கடல்கடந்து சென்று கடமை புரியத் தயங்கவில்லை இவர். கலாசாலையை மேலோங்கச் செய்யும் பொறுப்பு தனது கையிலேயே என்பது இவரது உள்ளுணர்வு. இவரது மூச்சும் பேச்சும் கலாசாலைபற்றியதே; உறங்குவதும், உண்பதுவும், உழைப்பதுவும் இவர் இங்கேதான், இத்தனை தியாகத்துடன் பண்புமிக்க கடமை உணர்ச்சியுடன் இவர் கட்டி எழுப்பியதே இன்று நாம் காணும் கல்லூரித் தாய். இவள் இன்று இருபத்தைந்தாண்டு நிரம்பி நிற்கிருள். இவளிடத்தே காணப்படும் மரங்களும் செடிகளும் வாய்விட்டுப் பேச முடிந்தால், இன்று தம் தந்தையின் சேவையை இசையமைத்துப் பாடிக் களிப்பதை நாம் கேட்கலாம்.

அன்று நாமெல்லோரும் சிறுவர்கள். ஆங்கிலமோகம் நாட்டிற்றலை தூக்கிநின்ற காலம்; ஆங்கிலம் கற்றவர் என்ருல் அவருக்கு ஒரு தனி மதிப்பு; உயர்ந்த மதிப்பு. அவ்வேளையில், எமது கிராமத்தில் ஒரு ஆங்கிலப் பாடசாலை என்றதும், மக்களனைவருமே கவரப்பட்டிருத்தல் வேண்டும். போதிய ஆதரவும் ஊக்கமும் கொடுத்துத் தமக்குக் கிடைத்த ஆசானிடம் தாராளமாகக் கடமை வாங்கிக் கொண்டனர் மக்கள். கல்லூரி அமைத்தற்குக் காணி கிடைத்தது. கருத்தொடு கற்க மாணவர் பலர் வந்து சேர்ந்தனர். கடமையே கண்ணுகக் கொண்ட ஆண்டகையின் உழைப்புக்கு வேறும் அத்திவாரம் வேண்டுமா? எழுந்தன கொட்டில்கள்; அவையே கல்விக்கூடங்கள். பல தடவைகள் பலவிடங்களுக்கு மாறி, ஈற்றில், ஓரிடத்தில் நிலைத்தது கல்லூரி. தச்சனின்றி, கூலியின்றிப் பனைகள் சாய்ந்து வீழ்ந்தன. மணற்றிடர்கள் நில மட்டமாயின. வனம் போற்கிடந்த நிலம் பசும் புற்றரையாயிற்று. என்னே மாற்றம்! எவ்வளவு விரைவில்! நாம் அப்போதும் சிறியவர்களே. இத்தனைக்கும் காரணகர்த்தா ஒரே ஒருவர்தான். அவரேதான் திரு. நவரத்தினசிங்கமவர்கள்.

திரு. நவரத்தின சிங்கமவர்கள் கடமை வீரர்; கண்ணியம் மிக்கவர்; சிறந்த போஷகர், போதகர்; இரக்கத்தின் இருப்பிடம்; பிழைதாங்க முடியாத பித்தர். திட்டம் தீட்டும் வல்லுநர்; விளையாட்டு வீரர்; அறிவூட்டிய ஆசான்; எல்லாவற்றிற்கும் மேலாகத் தியாகத்தின் சிகரம், என்றெல்லாம் சொன்னுல், இவை வெறும் புழுகுகளல்ல.

வகுப்பறையிலேனும், வெளியிலேனும் மாணவர்களுக்குக் குற்றம் கடிந்து குணம் கற்றுக் கொடுக்கும் நிலையிலேயே இவரைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். பாடஞ் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருக்கும் அதேவேளையில், கண்ணியம்மிக்க வாழ்வின் மகத்துவத்தையே எடுத்துப் போதிப்பார். மாணவர்கள் ஒழுக்க சீலர்களாக, பணிவுடையவர்களாக, அடக்கமுடையவர்களாகவாழ்ந்தால் அதுவே சிறந்த அணிகலன் நாட்டுக்கு என்பதே இவரது போதனை. ஆசிரியர்களுக்கு ஆலோசகராக, பெற்றோருக்கு உற்றவராக இருந்து வந்ததில் இவருக்கு நிகர் இவரேதான். துள்ளித்திரியும் இளைஞர்களின் துடுக்கடக்கிப் பள்ளிக்கனுப்ப முடியாது பாடுபட்ட எத்தனையோ பெற்றோருக்கு உற்ற நண்பனாய் உதவிகள் செய்துள்ளார். மாணவரின் துடுக்கடக்குவதற்குத் தக்க அறிவும் ஆற்றலும், பண்பும் இவரிடம் நிறைந்து காணப்பட்டன. துடுக்கான மாணவன் ஒருவன் சீர்கெட்டுப் போவதைத் தடுத்து அவனை நல்வழிப் படுத்த முடியுமானால், அதைச் செய்வதே தனக்குகந்த சேவையென இவர் அடிக்கடி கூறுவதுண்டு. இவற்றுக்கெல்லாம் காரணம் இவரது இரக்க சிந்தையே.

இரக்கத்தின் இருப்பிடமாயமைந்த அதிபரின் உள்ளம் தூய்மையானது: நல்லாரைப்போற்றலும். இல்லாரை அறிந்து அவர்க்கிரங்கி உதவலும் இறைவனால் இவருக்கு அருளப்பட்ட திறமைகள் எனலாம். எத்தனை குழந்தைகளை இவர் தனது குழந்தைகள் போலவே கருதிக் கற்பித்தார் என்பதற்கும் ஆராய்ச்சி அதிகம் தேவையில்லை. இரக்கத்தின் சிகரமாய் விளங்கிய இவருக்குப், பிழைகள் செய்தாரைப் பொறுக்க முடியாத தன்மையும் கூடவே இருந்தது.

மாணவர்கள் பிழைகள் செய்துவிட்டால், மிகச் சிறு பிழையானாலுங்கூட அதைப் பராமுகமாகவிட இவரால் முடியாது.

'குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்தலரிது'' என்கிறாரே வள்ளுவர். சிறு பிழையெனினும் அதைக் கடிந்து திருத்துவதே இவரது வேணவா. பிழை கண்டவுடன் வந்துவிடும் கோபம். ஆனால் அதே கோபம் சிறிது மாத்திரத்திலே இரக்கமாக மாறிவிடுவதை மாணவரே நேரிற் கண்டுவிடுவர். தவறிழைத்துவிட்டு இவரிடம் தப்பமுடியாதென்பது அனைவருக்கும் தெரியும். இதனாற் கண்ட முன்னேற்றம் அளவிடற்கரிது.

பாடசாலையிற் சிறந்த போஷகராகவும், போதகராகவும் இவர் ஆற்றிய சேவையைச் சொற்களிலடக்க முடியாது. சமய சம்பந்தமான வைபவங்களனைத்தையும் தாமே முன்னின்று நடாத்திவைப்பார். தான் ஒரு கத்தோலிக்கனாக இருந்தாலும், சைவத்தின் வித்தகனாக, ஆசாரியனாகக் கடமை புரிந்தவர். சமய விழாக்கள் எடுக்க என்றும் தயங்கார். பாடசாலைக்குள்ளேயே, சைவ ஆராதனை மண்டபம் அமைத்தது ஒரு தனிச் சிறப்பெனலாம். சமய கூடங்களுள், இங்கு முதன் முதலாக அமைக்கப்பட்டது சைவசமய ஆராதனை மண்டபமே என்பது அவர் ஒரு சிறந்த போஷகர் என்பதற்கு எடுத்துக் காட்டு. பாடசாலையின் பலவகையான மன்றங்களையும் அமைத்து, அத்தனைக்கும் தானே போஷகராக இருந்துவந்த பெருமை இவருக்கே உரியது. வெள்ளி தோறும் சைவமாணவர் கோவிலுக்குப் போகவேண்டும்; தேவார வகுப்புகளுக்கு ஒழுங்காகப் பிரசன்னமாக வேண்டும்; கோவில்களில் திருவிழாச் செய்யவேண்டும்; பாடசாலையில் விழாக்களெடுக்கவேண்டும். இத்தனையும் மிக ஒழுங்காகவே நடைபெற்றன. கத்தோலிக்க கிறீஸ்தவ மாணவர்களும் அப்படியே செய்து வந்தனர். எப்பெயரால் எவ்வாறு அழைத்தாலும் இறைவன் ஒருவன் இருக்கிறான்; அவனை வணங்குதல் அனைவர்க்கும் நன்றே என்பதுதான் இவரது போதனை.

இலக்கியமேதை இரவீந்திரநாத் தாகூர் சோலையிலே பள்ளியமைத்துச் சாந்தினிகேதனாக்கினார். அப்படியே அதிபர் நவரத்தினசிங்கமவர்களும், ஆராதனை மண்டபங்களும் சோலைகளும் பள்ளியிலே அமைய வேண்டுமென்றும், அழகிய சூழலிலேதான் கல்வி நன்கு புகட்டப்படுமென்றும் கருதிக் கல்லூரி வளவை ஒரு சோலையாக்கினார். நடுவே குளிர்ந்த நீர்த்தடாகம். சுற்றிவரச் சோலை. கல்விக்கூடமே அழகாகக் காட்சி தந்தது.

இறுதியாக, இவரின் தியாகசேவையை, நற்பண்புகளை நினைவுகூரும் இவ்வேளையில் ஒரு வார்த்தை, கல்லூரித் தந்தையின் சிறப்புக்கு நாம் பல சான்றுகள் தேட வேண்டியதில்லை. ''தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்'' அதிபர் சிறந்தவர். அவரின் குழந்தைகள் அவருக்கு மூவா மருந்தாக இருக்கின்றனர். தருமம் துணைநிற்கிறது. அன்னார் சுகமும் நீண்ட ஆயுளும் பெற்று, சகல நன்மைகளுடனும் வாழவேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்போம். நெடுந்தீவு மக்களின் நெஞ்சில் நிறைந்துவிட்ட அதிபர் அவர்களை அவர்களால் மறக்கவே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**J. CONSTANCE Esq.**
*(Junior Section Head Master Grade—I)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு பகருகின்றேன்

பண்டிதர் ஆசிநாதர்

வில்லாண்ட மகிபரும் வீரகுல மக்களும் வாழ்ந்த நாடாய்க்
கல்லான வேலியும் கடல்கண்ட தரையுமாய்க் காட்சிகொள்ளும்
நல்நெடுந்தீ வென்றன் தாயகமே யென்னுந் தகைமை யோடு
பல்லாண்டு கூறியே பாராட்டுப் பாடினேன் பருத்து வாழ்க!

வந்தபிறர் தம்மையும் வரவேற்று வாழ்த்தியே வசதி ஈந்து
சிந்தையுற உதவிசெய் சீர்த்தியுள பண்புடை மக்கள் வாழும்
விந்தைபல கொண்டுமே மேன்மையாய் மிளிரும் நெடுந்தீவூரே,
பந்தமுற வாழ்த்தியே பல்லாண்டு கூறினேன் வாழ்க! வாழி!

நிலையான கல்வியை நினைவோடு ஊட்டிடும் நீழ் வித்தி யாலயங்கள்
பலதிக்கு மறிவினைப் பரப்பிடுதல் தக்கதே அதனின் மேலாம்
மலையான கலையினை மரபோடு பயிற்றலில் மாண்பு கொண்ட
தலையான கூடமாம் மகாவித்தி யாலயம் வாழ்க! வாழி!

வாழி நெடுந்தீவே! வாழி பசுத்தீவே! வாழி பல்லாண்டே!
வாழி! கலைக்கோவில் மாவித்தி யாலயமே! வாழி பல்லாண்டே!
வாழி! நிலையாக வாழ்வு தலைமேவ மாண்பு குறையாமலே
வாழ்த்துப் பலவாக வாய்மை நிலைகாண ஆசி பலவாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**25 வருட வளர்ச்சியிலும்**

மேம்பட்டு விளங்க

ஆசி கூறுவது

★

# கந்தையா பலசரக்கு மாளிகை

கொகுவலை

தொலைபேசி இல. 2585

உரிமையாளர் :

நா. மருதலிங்கம்
நெடுந்தீவு மேற்கு
நெடுந்தீவு 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவின் கல்வி வளர்ச்சி

**பண்டிதர் நா. கந்தையா**

தலைமைஆசிரியர்,

(முத்துத்தம்பி மகாவித்தியாலயம், திருநெல்வேலி.)

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே"

என்பது ஔவைப் பிராட்டியாரின் அருண் மொழி. பிச்சை ஏற்கும் வறுமை வந்துற்ற நிலையினும் ஒருவன் கற்கவேண்டியது அவசியம் எனக் கல்வியின் இன்றியமையாமையை வற்புறுத்தினர்.

மனிதனுடன் பிறந்த - இயற்கை வல்லபங்கள் - ஊக்கங்களுக்கு - ஏற்ற சந்தர்ப்பங்களைக் கொடுத்து, அவற்றை நல்வழிப் படுத்தி, வளமாக்கி அவன்றன் வாழ்வைப் பண்புடையதாக்கி, மனிதனுக்குவது கல்வி. இத்தகைய கல்வியை ஒருவன் ஒரு பிறப்பிற் கற்றுணயின் அவன் அதனல் தீயன விலக்கி, நல்லனபுரிந்து இம்மைக்கும் மறுமைக்கும் இன்றியமையாத நற்பயனைப் பெறுகின்றன். இதனலேயே "ஒருமைக் கண் தாங்கற்ற கல்வி ஒருவற்கு, எழுமையும் ஏமாப் புடைத்து" என்று தெய்வப் புலவரும் திருவாய் மலர்ந்தார்.

இன்று உலக நாடெங்கணும் கல்வி வளர்ந்துள்ள நிலைமையையும், நூறு வருடங்கட்கு முன் கல்விநிலையையும் உற்றுணர்வோமெனின் பெருவியப்படைவோம். கடந்த சில நூற்றுண்டுகளாக இலங்கை அந்நியராட்சியில் இருந்தபடியால் கல்வி நிலை பின்தங்கியது. சுதந்திரமடைந்த பின்பே நாட்டுக்கேற்ற கல்வியைப்பற்றிச் சிந்திக்கின்றனர். அந்நிய அரசுகள் தமது ஆட்சிக்கும் மக்களுக்கும் தொடர்பை ஏற்படுத்தவும், ஒத்துழைப்பைப் பெறவும் பொது மக்களையும் அரசாங்க அலுவல்களுக்கு நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனுடன் தம் சமயத்தையும் புகுத்துவதை நோக்கமாகக் கொண்டனர். சமய அடிப்படையிலான உத்தியோகக் கல்வி நாட்டிற் புகுத்தப்பட்டது. இக் கல்வி மோகம் இன்னும் நம்மைவிட்டு நீங்கவில்லை.

இக்கல்வி நம் நாட்டில் புகமுன்பே திண்ணைப்பள்ளிக்கூடங்கள் நடைபெற்றன. போக்குவரவு வசதியற்று, தனித்துவத்துடன் இருந்த நமது நெடுந்தீவிலுங்கூடப் பல திண்ணைப் பள்ளிக்கூடங்கள் மூலம் கல்வி போதிக்கப்பட்டமை அறியக்கிடக்கின்றது. மேற்கில் பிடாரிகோவிலடி, காட்டுப்பூவரசடி, சென் லோறன்சியார் கோவிலடி, கிழக்கில் கந்தசுவாமியார் கோவிலடி, நடுக்குறிச்சியில் ஆசுப்பத்திரியடி முதலிய இடங்களில் இத்தகைய திண்ணைப் பள்ளிக்கூடங்கள் நடைபெற்றுள்ளன. பெற்றேர் கொடுக்கும் ஊதிபத்துடன் குருசிட்சை முறையில் இக்கல்வி நடைபெற்றது. எழுத வாசிக்கத் தெரிந்தாற்போதும் என்ற அளவில் ஆரம்பக்கல்வியை ஒரு சிலர் இவ்வழியிற் பெற்றனர். இன்னுஞ் சிலர் புராணங்கள், இலக்கண நூல்கள், நிகண்டுகள் முதலியவற்றையுங் கற்கக் கூடியவாய்ப்பும் இதனல் ஏற்பட்டது.

அந்நியராட்சிக் காலத்தில் முன்னேற்றமடைந்த நகரங்களில் ரே. கத்தோலிக்க மத குருமாராலும், புரட்டஸ்தாந்த (அ. மிஷன்) மத போதகராலும் கல்லூரிகள் நிறுவப்பட்டன. யாழ்ப்பாணத்திலும் இக் கல்லூரிகள் நிறுவப்பட்டன. இவற்றில் தம்மதத்தைச் சேர்வோர்க்கு கூடிய வசதியும், உயர்கல்வியும் அளிக்கப்பட்டன. அக்காலத்தில் அரசாங்கச் சார்புடையாரும் மத மாறியும் தாங்கற்றல் பயனடையலாம் என்றுணர்ந்தோருமாய ஒரு சிலர் இக்கல்லூரிகளிற் சென்று கற்று உத்தியோகங்களையும் பெற்று முன்னேற்றங் கண்டனர். நமது தீவகத்திலும் இருந்து ஒரு சிலர் சென் பற்றிக்ஸ், கொழும்புத்துறை, தெல்லிப்பளை, உடுவில் முதலிய கல்லூரிகளிற் சென்று கற்று ஆசிரியர்களாகவும், அரசாங்க உத்தியோகஸ்தர்களாகவும் நியமிக்கப்பட்டனர். இவ் வழியிற் கருத்துச் செல்லாதவர்களும், மதமாற்றத்தை விரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்வர்களும், தக்க தூண்டுதலைப் பெறாத வர்களும் வாளா இருந்தனர். சிலர் திண்ணைப் பள்ளிக்கூடங்களிலேயே கற்றனர். எனினும் நம்தீவிற் கல்வி கணிசமான அளவு முன்னேற்றம் அடையவில்லை. கல்விக்கான இடம், பொருள், ஏவல் எதுவும் சாதகமாக அமையாமையே காரணம் எனலாம்.

பிறசமய அடிப்படைக் கல்வியைத் தொடர்ந்து நமது தீவகத்திலும் மாவிலித்துறையில் அர்ச் சவேரியார் பாடசாலையும், நடுக்குறிச்சியில் சென் யோண்ஸ் பாடசாலையும் அமெரிக்கமிஷன் பாடசாலையும், மேற்கில் எரிந்த பள்ளிக்கூடம் என்றழைக்கப்படுமிடத்தில் ஒரு அமெரிக்கமிஷன் பாடசாலையும், சாருப்பிட்டியில் றோ. கத்தோலிக்க பாடசாலையும் முதலில் நிறுவப்பட்டன. இவை தத்தம் சமயத்தைப் பரப்பும் நோக்குடன் பலரைச் சமயம் மாற்றிய பொழுதினும் பொதுமக்கள் பலருக்கும் கல்விகற்கும் வாய்ப்பையும் அளித்தன. இப்பாடசாலைகளில் இருந்தே நமது தீவகத்தில் கல்வி மலர்ச்சி பெற்றதென்பதை மறுக்க முடியாது.

இங்ஙனம் பல்லாண்டுகள் கழிந்த பின்பே சைவ சமயப்பற்றுள்ள பெரியார்களும், பணம் படைத்தவர்களும் விழிப்புற்று சைவசமய ஸ்தாபனங்களை நிறுவினர். இவற்றின் மூலம் சைவசமய அடிப்படையிற் கல்விபெறும் வாய்ப்பை அளித்தனர்.

கி. பி. 1923 ஆம் ஆண்டளவில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தால் முதலில் நெடுந்தீவு - மேற்கில் சைவப் பிரகாச வித்தியாசாலையும், கிழக்கில் சுப்பிரமணிய வித்தியாசாலையும் நிறுவப்பட்டுச் சைவக் கல்வியை வளர்த்தன, இப்படிச் சைவப் பாடசாலைகள் அமைக்கப்பட்ட பொழுதிலும் அவற்றை அரசாங்கம் பொறுப்பேற்பதில் காலதாமதம் ஏற்பட்டது. இதற்குச் சமயமே காரணமாக இருந்திருக்கலாம். சுப்பிரமணிய வித்தியாசாலை முதலிற் பதிவு செய்யப்பட்டது. சைவப்பிரகாச வித்தியாசாலை பதிவு செய்யப்படாமல் ஐந்தாண்டுகள் வரை வீடுதோறும் பிடி அரிசி சேர்த்து அதனாற் பெறும் ஊதியத்தைக்கொண்டே இது ஐந்தாண்டும் நிர்வகிக்கப்பட்டதென முதியோர் சொல்லக் கேட்டேன்.

இப்பாடசாலையை ஆரம்பித்து அயலிலுள்ள பிள்ளையார் கோவிலில் சைவசமய சம்பிரதாயப்படி சை. வி. வி. சங்கச்சார்பில் வந்த சேர். வை. துரைசாமி அவர்களிடம் ஒப்படைத்த வைபவத்தை முதியோர் சொல்லும்பொழுது நெஞ்சை உருக்குவதாகும். திரு. அம்பலவாணர் கணபதிப்பிள்ளை, திரு. சு. நாகேந்திரர் திரு. சி. வேலுப்பிள்ளை, திரு. இ. சுவாமிநாதர் என்பார் இப்பாடசாலைக்காக முன்னின்றுழைத்தனர். இக்காலத்தில் மேற்கில் இருந்த அ. மிஷன் பாடசாலை எரியுண்டு மூடப்பட்டது.

சென்ஜோண்ஸ் பாடசாலையும், சைவப் பிரகாச வித்தியாசாலையுமே சிரேட்ட பாடசாலைகளாக இயங்கி 9 ஆம் வகுப்பு வரை கல்விபுகட்டின. நடுக்குறிச்சி அ. மிஷன் பாடசாலையும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்திருந்தது. அங்கும் 8 ஆம் வகுப்புவரை நடைபெற்றது. 8ஆந்தர அரசாங்க பரீட்சையில் கூடிய வீதம் சித்தி எய்தினர். றோ. க, பிள்ளைகளுக்கு மட்டுமன்றி, இந்து சமயப் பிள்ளைகளுக்கும் சென்ஜோண்ஸ் பாடசாலை பணியாற்றியது. அதிற் சிறந்த கல்வியைப் பெற்றோர் பலர் இன்று ஆசிரியர்களாக இருக்கின்றனர். சிரேட்ட வகுப்புப் பரீட்சைகளிலும் கூடிய திறமைகாட்டியது.

இனி, இடம், பொருள், ஏவல் முதலிய வசதிகளைப் பெற்ற பலர் தம் பிள்ளைகளை யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, மத்திய கல்லூரி, சென் பற்றிக்ஸ், வேம்படி, இராமநாதன் கல்லூரி, இளவாலை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதலிய கல்லூரிகட்கும் விட்டு உயர்கல்வியை அளித்தனர். இத்தீவுப் பிள்ளைகளின் விவேகமும் முயற்சியும், அவர்கட்கு அக்கல்லூரிகளில் செல்வாக்கை அளித்தன. இக் கல்லூரிகள் இப்பிள்ளைகளை விரும்பிச் சேர்ப்பதில் ஆர்வங்காட்டின. இக் கல்லூரிகளின் பணியாலும் நம் தீவுக்கல்வி சிறப்புற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவின் கல்வி வளர்ச்சியில் திருநெல்வேலியில் அமைந்துள்ள சை. வி. வி. சங்க அனுதை விடுதிச்சாலைக்கும், சாதனு பாடசாலைக்கும் முக்கிய பங்குண்டு. தமிழ்க் கல்விக்காக அங்கே சென்று கற்றபலரே இன்று சைவாசிரியர்களாக விளங்குகின்றனர். அவர்தம் சமயப்பற்றுந் தமிழறிவும் போற்றத்தக்கன.

மதம்மாறிக் கல்விகற்ற பலர் காலப்போக்கில் மீண்டும் சைவசமயம் புகுந்து பணியாற்றினர். பாடசாலைகளையுந் தாபித்தனர். அவர்தம் கல்விப் பணியும் பாராட்டுதற்குரியது.

பின்னும் ஆறு சைவப் பாடசாலைகளை சைவ வித்தியா விருத்திச் சங்கம் பொறுப்பேற்று நடாத்தியது. இதற்குக் காணிகளைக் கொடுத்தும், கட்டிடம் அமைத்தும் உதவிய பெருமக்களை மறக்கமுடியாது. நடுக்குறிச்சியில் பெண் பிள்ளைகளின் நலன் கருதி ஒரு கனனியர் மடமும் பாடசாலையும் நிறுவப்பட்டது. இதனுற் பெண்கள் பலர் கல்விகற்று முன்னேற முடிந்தது.

1935 - 40 ஆம் ஆண்டுக்காலம் சைவப் பிரகாச வித்தியாசாலையின் ஒரு பொற்காலம் எனலாம். தீவகத்தின் மூன்று குறிச்சிகளிலும் இருந்து கனிட்ட, சிரேட்ட வகுப்புமாணவர்கள் திரளாக இங்குவந்து சேர்ந்தனர். இரவும் பகலும் விடுதிப் பாடசாலை போன்று விளங்கியது. ஓய்வு நாட்களிலும் வகுப்புகள் நடைபெற்றன. கல்வியில் ஒரு புது விழிப்பு ஏற்பட்டது. சமய பாடப் பரீட்சை, பிரவேசபண்டித, பாலபண்டித பரீட்சைகட்கான விசேட வகுப்புகளும் நடைபெற்றன. இவ்வழிகளில் விசேட ஆர்வங்காட்டிப் பெரும்பணி புரிந்தவர் திரு. தி. கணபதிப்பிள்ளை ஆசிரியராவர். அவரின் அயரா உழைப்பால் அதிகமானேர் சிரேட்ட வகுப்புக் கல்வியைப் பூர்த்தி செய்து இன்று ஆசிரியர்களாக விளங்குகின்றனர். எம்போன்றவர்கள் பண்டிதர்களாவதற்கு அடிப்படைக் கல்வியை அளித்தவர் அவரேயாவர். 8 ஆம் வகுப்பிற் படிக்கும்போதே நன்னூல் இலக்கண விதிகள் யாவும் மனனஞ் செய்தோமெனின் இக்கால இளைஞர்கட்கு வியப்பாக இருக்கும்.

1945 இல் இலங்கைக் கல்வியிலேயே பெரும் புரட்சி ஏற்பட்டது. இதற்குக் காரணமாக இருந்தது இலவச கல்வித் திட்டமே. இதனுல் நெடுந்தீவில் அரசினர் கனிட்ட பாடசாலை (யூனியர் ஸ்கூல்) திறக்கப்பட்டது. இதுவே இப்பொழுது மகாவித்தியாலயம் எனப்படும். இங்கு ஒரு ஆங்கில பாடசாலை இல்லையே என்று அதற்காக முயன்றுகொண்டு இருந்த பெரியார்கட்கு இது மகிழ்ச்சியளித்தது. அவர்கள் இதற்காகப் பணமும், பொருளும் வழங்கிப் பாடசாலையை ஆரம்பிக்க உதவினர்.

ஆங்கில மொழிமூலம் இலவசக் கல்வி போதிக்கப்படுமென்ற திட்டம் மக்களிடையே ஆர்வத்தைத் தூண்டியது. தமிழ்ப் பாடசாலைகளில் சிரேட்ட வகுப்பிற் படித்துக் கொண்டிருந்தவர்கள்கூட இங்கே வந்து சேர்ந்தனர். ஐந்தாண்டளவும் நிரந்தர கட்டிடமோ, காணியோ, தளபாடமோ இல்லாமல் ஆண்டுக்கோரிடமாகக் கொட்டில் அமைக்க நேர்ந்தது. இவ்வகையில் ஆசிரியர்களும் மாணவர்ளும் பட்ட கஷ்டம் அளப்பில, அவர்கள் அளித்த சரீர முயற்சி மதிப்பிடற்கரியது.

சிரேட்ட வகுப்புக்கு வந்தோர் ஆங்கில மொழிமூலக் கல்வியால் கடைத்தேற முடியாதென்பதை முன்னிட்டு தமிழ் மொழிமூலம் சிரேட்ட வகுப்பை நடாத்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஆயின் கனிட்ட பாடசாலையில் சிரேட்ட வகுப்பை நடாத்த முடியாத சட்டம் இருந்தது. அதிபர் திரு. C. V. E. நவரத்தினசிங்கமவர்கள் அதனையும் தகர்த்து விசேட அனுமதியுடன் வகுப்பை நடாத்த மேலும் மாணவர்கள் அதிகமாயினர். வேளியூர் மாணவர்கூடச் சிலர் இங்கு விரும்பிவந்தனர். இந்நிலைமையால் சென் ஜோன்ஸ், சைவப்பிரகாச வித்தியாசாலைகளில் வீழ்ச்சி யேற்பட்டது. அங்கே மேல் வகுப்புகள் படிப் படியாகக் குறைந்தன.

கனிட்ட பாடசாலையில் மாணவரின் கல்வியையே முழு இலட்சியமாகக் கொண்டு ஆசிரியர்கள் ஒரே முகமாகப் பணிபுரிந்தனர். அதிபரின் திறமையால் புறவசதிகள் கைகூடின. கல்வித் திணைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களத்திலேயே இப்பாடசாலைக்குத் தனி மதிப்புண்டானது. பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர், ஆங்கில சி. பா. த. பத்திர ஆசிரியை, தமிழ் ஆசிரியர் தராதரப்பத்திர ஆசிரியர், ஆகிய மூவருடன் தொடங்கிய பாடசாலையில் முத்தமிழுங் களிநடம்புரியக்கூடிய நிலையில் அவற்றிற் பட்டம் பெற்றவர்கள் பணியாற்றும் நிலைக்கு உயர்ந்தது. ஆண்டு தோறும் சிரேட்ட வகுப்பில் அதிகமானோர் சித்தி எய்தினர்.

சங்கீதம், நடனம் சாரணர் இயக்கம், வழிபாடு, உடற்பயிற்சி, முதலிய பல துறையிலும் மாணவர் பயிற்றப்பட்டனர். சிரேட்டகல்வியை இங்கே முடித்தவர்கள் தம் உயர் கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரிகளிலும், இந்தியாவிலும் பெற்று இன்று பட்டதாரிகளாகவும், எழுது வினைஞர்களாகவும் இருக்கின்றனர். இங்கிலாந்திலும் பலர் உயர்கல்வி பெறுகின்றனர். இவ்வகையில் பலருக்கு உற்ற வழிகாட்டியாகவும் உறுபொருள் வழங்கியும் உதவியவர் திரு. C. V. E. நவரத்தினசிங்கம் அவர்களே, இப்பாடசாலையின் தீவிர வளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் அன்னாரின் சேவை சிவநாடியாக விளங்கியது.

1945, 46 ஆம் ஆண்டுகளில் ஐந்தாம் வகுப்பு அரசினர் புலமைப் பரிசில்களைப் பெற்றவர்கள் பலர், மத்தியமகா வித்தியாலயங்களிலும், கல்லூரிகளிலும் உயர் கல்வியைப்பெற்றுப் பட்டதாரிகளாகவும் வந்துள்ளனர்.

இவ்வாறு கடந்த சில ஆண்டுகளில் தீவகத்தின் உள்ளேயும், வெளியேயும் மாணவரின் கல்வி வளர்ந்து கலை, பொறியியல், வைத்தியம், நடனம், சங்கீதம் முதலிய துறைகளில் உயர்தரத்தையடைந்தது. எனினும் பிற இடங்களின் வளர்ச்சியோடு ஒப்பிடும்போது இது கணிசமான அளவினதன்று. இதற்குக் காரணம் நாட்டின் சூழ்நிலையும், பொருளாதாரமும், பிறவசதியீனங்களுமே. ஆயினும் ஐம்பது ஆண்டுகட்கு முன்பாவது ஒரு தரமான கல்லூரி நிறுவப்பட்டிருந்தால் .... என்ற சிந்தனையுடன் இக்கட்டுரையைப் பூர்த்தி செய்ய விரும்புகிறேன். கண்டதையும் கேட்டதையும் கொண்டு சிந்தித்து வரைந்தேன்.

பிழை பொறுப்பது பெரியோர் கடன்: இதற்குச் சந்தர்ப்பந் தந்த மகாவித்தியாலய வெள்ளி விழா நிர்வாகிகட்கு எனது நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமும் சமயமும்

திருமதி பீ. எம். ஜே. அந்தோனி பீ. எஸ்ஸி.

பிரபஞ்சம் முழுவதும் அணுக்களாலானது. அணுவோ வெற்றிடம் நிறைந்த ஒரு கோளம். கண்ணுக்குப் புலனுகா நேர்–எதிர் மின் ஏற்றங்களாலானது. மிகப் பெரிதாக எமக்குத் தோன்றும் இப் பிரபஞ்சத்தின் அமைப்பின் பிரதிபலிப்புத் தான் அணுவும், அதனுலான சடப் பொருட்களும். சூரியனைச் சுற்றிக் கோள்கள் எப்படி அசைந்து கொண்டிருக்கின்றனவோ அதே பிரகாரம் அணுவின் கருவைச் சுற்றி இலந்திரன்கள் அசைகின்றன. கண்ணுக்குப் புலனுகா இந்த அணுவிலிருந்து இலந்திரன்கள் பிரிந்து போனுல் எஞ்சுவது அந்த அணுவின் பல்லாயிரத்து ஒரு பங்காகிய கரு. அக்கருவிலிருந்தும் நேர் ஏற்றங்களாகிய புரோத்தன்களும் பிரிந்து விட்டால் எஞ்சுவது நியூத்திரன்கள்! இப் பிரபஞ்சத்தை ஆக்கி நிற்கும் முழு அணுக்களையும் பிணைத்து நிற்கும் சக்தி பிரிந்து நிற்குமானுல் மனிதக் கண்ணுக்குப் புலனுகக்கூடியது ??? எனவே அணுக்களெல்லாம் கூட்டம் கூட்டமாக ஒன்றுகப் பிணைந்து இருந்தால்தான் உண்டு பிரபஞ்சம்!

அணுக்குண்டுத் தயாரிப்பில் நியூத்திரன்களால் யூரேனியத்தைப் பிளக்கும் போது அதனின்று நியூத்திரன்கள் சில வெளிப்படுவதுடன் அப்பொருளின் ஒரு சிறு பகுதி சக்தியாக மாறுகிறது. வெளிப்பட்ட நியூத்திரன்கள் அடுத்துள்ள அணுக்களைப் பிளக்க, இப்படியாகத் தொடரும் ஒவ்வொரு அணுவின் பிளப்புடனும் மாற்றுப்பெறும் சக்தி ஒன்று சேர்ந்திடுமெனக் கட்டுப்படுத்த முடியாத் தொகை சக்தியை வெளியேற்றுகிறது. இதில் பொருளழிவு சக்தியாக மாற்றுப் பெறுகிறது. யூரேனியம், பொலோனியம், றேடியம் போன்ற கதிரியக்க மூலகங்கட்கு அரை ஆயுள் உண்டு. (அரை ஆயுள் என்றுல் எந்த எடையிலிருந்து தொடங்குகின்றேமே அவ் எடையில் பாதி அதன் அரை ஆயுட்காலம் என்று குறிப்பிடப் படும் நாட்களில் அழிந்துவிடும்). இவ்வாறு சடப்பொரும் (அதாவது அணுக்கள்) எல்லாமே சக்தியாக மாறிவிட்டால் மனிதக் கண்ணுக்குப் புலனுகக்கூடியது சூன்யமே! சக்தியை மனிதனுல் பார்க்க முடியாது. சக்தியை ஓர் உருவிலிருந்து மற்றேர் உருவுக்கு மாற்றலாமேயல்லாது சக்தியை சூன்யத்திலிருந்தும் சிருஷ்டித்து விடவும் முடியாது. பரி. வேதாகமத்தில் இயேசு பெருமான், இரகசியமாகத் தனது வஸ்திரத்தைத் தொட்டுக் குணமடைந்தவளைப் பார்த்துக் கேட்கிறுர் ''யார் எனது வஸ்திரத்தைத் தொட்டது? என்னில் நின்றும் வல்லமை புறப்பட்டதே'' என்று. சக்தி புறப்பட்டுத்தான் குணமாக்கியது. எனவே சூன்யத்தினின்றும் தோன்ற முடியாத இந்தச் சக்தி விஞ்ஞானத்தின்படி ஒரு மாபெரும் சக்தியிலிருந்தே பிறந்திருக்க வேண்டும். அந்த மாபெரும் சக்தி தான் இறைவன்.

பிரபஞ்சம் எப்படித் தோன்றியது? டாவின் கூறுகிறுர் - ஒன்றிலிருந்து ஒன்றுக - மெதுவாக - படிப்படியாக - முதலில் ஒரு கலத்தினுலான விலங்கும், பின் இருகலப் படையினுலான விலங்குமாக, அப்படியே படிப்படியாகத் தோன்றி ஈற்றில் பல்கலப் படையினுலான மனிதன் தோன்றினுன் என. பரி. வேதாகமமும் அதைத்தான் கூறுகிறது. முதலாம் நாள், இரண்டாம் நாள் என, ஆறு நாட்களில் படிப்படியாகப் பிரபஞ்சத்தையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்து மனிதனுடன் படைப்பை முடித்து, ஏழாம் நாள் இறைவன் ஓய்ந்திருந்தான் என. இந்த ''நாள்'' எக் காலவெல்லையைக் குறிக்கிறது? 24 மணித்தியால காலத்தையா? அப்படியில்லையே. எனவே டாவின் கொள்கை சரியானதாயிருந்தாலும் அது வேதாகமத்தை ஆதரிக்கிறது. அதவாவது 6 கால இடைவெளிகளில் படிப்படியாகப் படைப்பு நிகழ்ந்து ஆறுவது காலத்தில் மனிதப் படைப்புடன் நின்றுவிட்டது என்று எடுக்கலாம். எனவே உயிரினத் தோற்றத்தின் டார்வின் விளக்கம் இறைவன் பிரபஞ்சத்தைப் படைக்கவில்லை என்று விளக்கி நிற்கவில்லை; விரைவாகப் படைத்தாரு அல்லது மெதுவாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தானு'என்றுதான் வினவி நிற்கிறது. முதல் கலப் பிராணி தானுகத் தோன்றுவதுமல்ல. ஏனெனில் விஞ்ஞானத்தின் அடி அத்திவாரமே "சடப்பொருளை ஆக்கவும் முடியாது அழிக்கவும் முடியாது" என்பதுதான். எனவே மனிதனுலோ, வேறு எந்தப் படைப்பினுலுமோ சூனியத்திலிருந்து ஆக்கவோ அழிக்கவோ முடியா அணுவையும், அந்த அணுவாலான பிரபஞ்சத்தையும் ஆக்கியவனும், அழிப்பவனும் இறைவன் ஒருவனே.

ஒரு பந்தின் மேல் நிற்கும் சிற்றெறும்பிற்கு அந்தப் பந்து ஒரு பெரிய உலகம். அதனுல் முழுமையாகப் பார்க்க முடியாததோர் உருவம் மனிதனது வல்லமையின் சிருஷ்டியாகிய அப் பந்தோ மனிதனுடைய கண்களுக்கு ஒரு சிறிய பொருள். இறைவன் முன் இப் பிரபஞ்சத்தின் நிலையும் இதுதான். "இப் பிரபஞ்சத்தின் அளவு சோகமானது" அதில் நம் சிறு நிலையற்ற வாழ்க்கையை சிக்கலாக்கிக் கொள்வது முட்டாள்த்தனம். இறைவன் தன் படைப்பாகிய மனிதனை ஆட்கொள்ள மனச்சாட்சியை அளித்திருக்கிருன். அதைவிட்டுத் தன் உருவத்தை மாற்றி உள்ளத்தை மாற்றி, மாறு வேடம் பூண்டு எம் கண்ணுக்குள் அடக்கமாகும் அளவில் இறைவன் மாற வேண்டுமா? அப்படித்தான் அடியார் அனைவரையும் அவன் ஆட்கொண்டானு? அவர்களோ அவனைத் தேடினர் - ஓடினர் - கண்டடைந்தனர். அக்கினியாகத் தோன்றினுன், மின்னலில், இடியில், தோன்றினுன் - பேசினுன் - சிலரால் காணமுடிந்தது. காலம் காலமாகத் தூதர்களை அனுப்பினுன் - பலனில்லை. அரச தூதர்கட்கும் ஜனுதிபதி தூதர்கட்கும் மதிப்புண்டு - இறைவனது தூதர்க்கோ ..! அவதாரமே எடுத்து மனிதனுனுன் - பலன், அவமானமும் ஆக்கினையும்தான். இனி எப்படித்தான் தோன்றுவான்! இதை உணரப் போதுமான சக்தி மனிதனுக்களிக்கப்பட்டிருக்கிறது. ஆனுல் இதற்கென வழங்கப்பட்ட சத்தியைப் பயன்படுத்துவோர் ஒரு சிலரே. இன்னும் வேண்டும் என அடம்பிடிப்போர் சிலர். இருப்பதையும் இழந்து நிற்போர் பலர்!

பௌதிக சாஸ்திரம் போதிப்பதென்ன? இயந்திரமெதுவும் தானுக இயங்குவதில்லை. இயக்கத்திற்கு சக்தி ஊட்டப்பட வேண்டும் என்பதே அப்படியிருக்க இப்பிரபஞ்சம் எப்படி இயங்குகிறது? இயக்குபவன் இல்லாமலே இயங்குகின்றதா? அப்படியானுல் விஞ்ஞானத்தின் கூற்றெல்லாம்! எனவே இப்பிரபஞ்ச இயந்திரத்தை இயக்க ஒருவன் உளான். அவன்தான் இறைவன்! படைக்கப்பட்ட யாவுமே நம் குருக்கள். இயற்கையைவிட சிறந்த குரு வேறில்லை. இயற்கையே அந்த ஆதி அந்தம் இல்லாதவனின் அற்புத தூதன்.

கடவுள் ஏன் மனிதனிடம் மனிதன் போல் பேசுவதில்லை? சூரியனேன் மனிதனை அணுகப்படாது. சந்திரன் ஏன் பூமிக்குப் போகப்படாது. இருக்கும் இடத்தில் இருந்தாற்தான் உண்டு வாழ்வு - இல்லையேல் அழிவுதான். ஒரு மகாத்மாவையோ அரசனையோ தன்னைத்தேடி வா என்று அழைக்க முடியுமா மனிதன். இறைவன் வந்து தன்னைத் தரிசிக்க வேண்டும் தான் விரும்பிய உருவத்தில் என்று எண்ணுவது விந்தையல்லவா? அந்தந்தப் பொருள் அந்தந்த இடத்தில் இருக்க வேண்டும். அதுதான் இயற்கையின் போதனையும். அப்படியிருக்க எங்கும் நிறைந்து எல்லாமாக வியாபித்திருப்பவன் எங்கு இருப்பான்? சிந்திக்க வேண்டும்!

மனிதன் கண்களால் காணமுடியாதவை ஏராளம். தனது தலையையோ அதற்குள் இருப்பதையோ கூடக் காண முடியா மனிதன் தெய்வத்தின் சரித்திரத்தையே கூறுபோட முயல்வது எவ்வளவு முட்டாள்தனம்!

மனிதனை மகிமைப்படுத்துவது அவனது மனச்சாட்சி. நல் மனச்சாட்சிக்கு இவ்வுலகில் ஆரம்பித்தே பலனுண்டு. உயிரானது பிரிந்ததும் உடல் இயங்குவதில்லை. அப்படியெனில் உயிரானது சக்தியே. அச்சக்தி அதாவது உடலை இயக்குவதும், உடலிலுள்ள அணுக்களைப் பிணைத்து நிற்கும் விளைவுச் சக்தியுமாக வெளியேறியதும் உடலின் பிணைப்பு அழிந்து அணுக்களெல்லாம் பிரிந்து மண்ணுகிறது. உடலின் வாழ்க்கைச் சக்கரம் சுழல்கிறது-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலானது மண்ணாகிப் புல்லாகிப் பூடாய் புழுவாய், மரமாகி பல்மிருகமாய்ப் பறவையாய் பாம்பாகிக் கல்லாய் மனிதனாய் …… இப்படியே. தாவரங்களும் விலங்குகளும் இல்லாவிடில் மனித உடலும் இல்லை. இது இப்படியாக ! அவ்வுடலைவிட்டு ஏற்கனவே வெளிப்பட்ட உயிர் எனும் சக்தி எங்கே போயிற்று? காற்றுடன் கலந்திருக்கலாம். அல்லது இறைவனெனும் மாபெரும் சக்தியுடன் திரும்பவும் ஒன்றித்திருக்கலாம். அல்லது இறைவன் சித்தப்படி முன்பே அவனிலிருந்தும் வெளியேற்றப்பட்டதாகையாலும் தனித்துவம் அளிக்கப்பட்டிருந்ததாலும் தொடர்ந்தும் தனித்து நிற்கலாம். ஆனால் அழிந்து மட்டும் போவதில்லை. இது விஞ்ஞானத்தின் கூற்று ''சக்தியை ஆக்கவோ அழிக்கவோ முடியாது.''

அது நிற்க, அந்த சக்தியுடன் ஒன்றித்து இயங்கிய, அந்த சக்தியின் வினைப் பயன் அனைத்துக்கும் காலாகவிருந்த மனச்சாட்சி எங்கே? அது எங்கே போயிற்று? அதற்கும் ஒரு சக்கரம் உண்டானால் புவியின் மனச்சாட்சிக்கும் மனித மனச்சாட்சிக்கும் வேறுபாடேயிராது. மனச்சாட்சியுடன் சேர்ந்த உயிர் தெய்வீகம் நிறைந்தது. இதைத்தான் மதங்கள் விளக்குகின்றன. அவனவன் விசுவாசம்போல் இறைவனும் அளப்பான். இதுதான் தெய்வ நீதி.

சக்தியோ மனச்சாட்சியோ வெற்றிடத்தினூடு சென்று சூரியனை அடைவதில்லை. உலக இயக்கத்திற்கு, அதாவது உலகத்தில் உயிருக்கு வேண்டிய சக்தியனைத்தும் சூரியனிலிருந்தே பெறப்படுகிறது. சூரியனிலிருந்து வெப்பம்-வெப்பத்தால் காற்றோட்டம் - காற்றோட்டத்தால் மழை-மழையால் மின் இப்படியே சக்தி மாற்றங்களினாலும், பொருட்களில் சூரியன் சேமித்துவைத்த சக்தியினாலும் உலகம் இயங்குகின்றது. ஆனால் சக்தி எது வழியிலும் சூரியனுக்குத் திரும்புகிறதாயில்லை. ஈர்ப்பு வழியாக அது சக்தியை எடுத்துக்கொண்டாலேயல்லாது வேறு வழியாகப் பெறுவது சுலபமில்லை. ஏனெனில் அதைச் சூழ வெற்றிடம். வேறு வெப்பம் மிகக்கூடிய சூரியன்களிடம் இருந்து பெற்றாலும் (கதிர்வீசல் முறையால் பெறலாம்) அந்தச் சூரியன்களுக்கு சக்தியை அளிப்பவன் யார்?

மனிதனுக்கு இவற்றை விளங்கிக் கொள்ள இறைவன் விஞ்ஞான அறிவை அளித்திருக்கிறான். இறைவன் எமக்களித்த தெய்வீகக் கொடை மனச்சாட்சி—பகுத்தறிவு. அதைச் சரியாகப் பிரயோகிப்பவன் தான் எங்கிருந்து வந்தானோ அங்கு திரும்பவும் போகக்கூடிய நிலையை எய்துகிறான். அந்த இடத்தை அடையும் வழிகளைத் தான் சமயங்கள் காட்டுகின்றன. அவனையடைய இலகுவான வழிகள் பல இருக்கத் தலைமயிரைப் பிய்த்துக் கொண்டு நிற்பது மனிதனின் அதர்ம குணமே.

எனவே இறைவனில்லாது ஒன்றுமேயில்லை என்று நிரூபித்து, எல்லாமே ஒன்று ஒருவனே எல்லாம் எனும்படி எங்கும் வியாபித்திருக்கும் தூய சக்தியாகிய இறைவனையும் அவன் படைப்புக்களையும் பிணைத்து நிற்பதுதான் விஞ்ஞானம். இதை உணரமுடியாதது மனிதனின்………???

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க பல்லாண்டு

பண்டிதர் சு. பசுபதி
(அதிபர், சைவப்பிரகாச வித்தியாலயம், நெடுந்தீவு)

ஆசை யளவா யலையு முளமென
ஓசைத் திரையா லுரைத்துத் தன்னுடல்
மீதூர் நாவாய் மேவின ருணரக்
கீழும் மேலும் புடையு மசைத்துத்
தோன்றாத் துணைவன் துணைத்தாட் புணைகொள்
ஆன்றோ ரகமென அடக்கமும் காட்டி
ஆர்ப்பும் அமைதியு மாகி யரணும்
நீர்ப்பெருங் கடல்சூழ் நெடுந்தீ வகத்து
அரியணை யேறிய ஆங்கில மொழிக்கு
உரியது எனக்கொள் ஒருகலைக் கூடம்
இல்லை யெனும்குறை யகல விலவசக்
கல்வித் தந்தை கன்னங் கராவால்
ஆயிரம் தொளாயிரம் அணைந்த நாற்பத்
தாறெனு மாண்டிற் கால்கொண் டெழுந்த
கனிட்ட மாவித்தி யாலயக் குழவி
நந்தலி லாசான் நவரத் தினப்பேர்த்
தந்தை வளர்க்கத் தன்னுருத் திரண்டு
சிரேட்ட மாவித்தி யாலய மாகி
பேதை பெதும்பை மங்கை மடந்தையாய்
தாதை யூட்டிய மேதை புலப்பட
நாடும் நகரு மியங்கித் திரிய
ஆசி நாதரெனு மருந்தமி ழாசான்
மடந்தைக் குரிய மாண்பு புகட்ட
குருநா தரெனு மொருதனி யாசான்
அரிவைக் கடக்கம் பெரிதெனக் காத்து
இருபத் தைந்தாண் டெய்திய நங்கையை
ஒருதனிக் காளைக் குவந்தனன் கொடுப்ப
சின்னத்தம் பியெனும் சீரம ராசான்
வன்னப் பூங்கொடி மாதினுக் கின்று
பதினெட் டெட்டு எழுபத் திரண்டில்
விதிமுறை வழாஅது மணவிழா வெடுத்தனன்
தொழிற்கல் வித்தாதை தொல்சீ ராசான்
பழிப்பி லமைச்சர் பதியுதீன் மக்மூத்
திருத்திய பாடத் திட்டம் சிறக்க
தொழில் விஞ்ஞானம் நுண்கலை சமயம்
மொழியுடற் கல்வி எண்சமூக வியலெனும்
அரும்பெரும் குழவிகள் ஆண்டுதோறும் பல்கி
பெரும்புக ழொழுக்க நன்னடை பயின்று
ஈழமு முலகுந் தம்மிசை நிறீஇ
வாழ்கபல் லாண்டென வாழ்த்துதும்
நாடும் நாமும் நலம்பெறற் பொருட்டே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**S. SOMASUNDARAM Esq.**
*(Senior Assistant)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு - ஒரு புவியியல் நோக்கு

க. பரமேஸ்வரன், B. A. Hons., C.A.S.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்குத் தென்மேற்குத் திசையில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஏறக்குறைய இருபது மைல்களுக்கு அப்பால் பாக்குத் தொடு கடலில் கொண்டுவானு நிலத்தின் தாழ்ந்த பகுதியை அடித்தளப் பாறையாகக் கொண்டு கடல் மட்டத்தின் மேல் ஏறக்குறைய 18½ சதுரமைல் பரப்பளவில் பரந்திருக்கும் முருகைக்கல், சுண்ணக்கல் பாறைகளாலான ஒரு திடலையே நாம் 'நெடுந்தீவு' எனக் கூறுகின்றோம். இத்தீவு ஏறக்குறைய கிழக்கு - மேற்காக 5 மைல் நீளத்தையும், வடக்குத் தெற்காக 4 மைல் நீளத்தையும் கொண்ட ஒரு சரிந்த இணைகர வடிவில் காணப்படுகின்றது. குடாக்கள், வளைவுகள் அதிகமின்றி ஒழுங்கான கடற்கரையோரத்தை உடைய இத்திவு 19 மைல் நீளமான சுற்றளவைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து அதிக தூரத்தில் அமைந்திருப்பதோடு, யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏனைய திவுகள் ஒன்றுக்கொன்று அண்மையில் அமைந்து காணப்பட நெடுந்தீவு தனது சகோதரத் தீவுகளினின்றும் பிரிந்து, புங்குடுதீவு, நயினாதீவு ஆகியவற்றிலிருந்து ஏறக்குறைய 6 மைல்களுக்கு அப்பால் தனித்த ஒரு தீவாக அமைந்துள்ளது. ஆயினும் இத்திவும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீவுக் கூட்டத்தைச் (Archipelago) சேர்ந்த ஒரு தீவாகவே கருதப் படுகின்றது.

#### மருத்துமாமலை வனம்

வரலாற்றுக் காலத்தில் பாற்பண்ணைத் தொழில் நன்கு விருத்தியுற்றுக் காணப்பட்டமையினால் பொருளாதார நடவடிக்கை கொண்டு அக்காலத்தில் இத்திவு 'பசுத்தீவு' என அழைக்கப்பட்டது. ஆனால் ஒல்லாந்தர் வருகையின் பின் டெல்ப்ற் (Delft) என்ற பெயரினைப் பெற்றது. காரணம் ஒல்லாந்தர் தமது நிர்வாக வசதிக்காக ஒல்லாந்து தேச இடப் பெயர்களை இங்கும் இட்டு அழைத்தனர். அவற்றுள் பல காலப்போக்கில் வழக்கொழிந்துவிட லைடன், கைபீற்ஸ், டெல்ப்ற் போன்ற பெயர்கள் இன்றும் வழக்கிலுள்ளன.

சிங்கள மக்கள் இத்தீவினை 'அவுசத லோகய' என்று அழைப்பார்கள். இதன் கருத்து சஞ்சீவி உலகம் என்பதாகும். மருந்து மூலிகைகள் நிறைந்து காணப்படும் பிரதேசமாகையினாற்தான் வைத்தியத் தொழிலில் புகழ்பெற்று வைத்திய ராஜசிங்கன் என்ற பட்டப்பெயர் கொண்ட யாழ்ப்பாண மன்னன் செகராசசேகரன் நெடுந்தீவை 'மருத்து மாமலை வனம்' என்று குறிப்பிட்டதாக யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூல் கூறுகின்றது. இன்றும் பலவகை மூலிகைகள் இங்கிருந்து பெறப்படுகின்றன.

இத்தீவில் உள்ள மக்கள் தம் நாட்டில் சிறப்பான - மதிப்புமிக்க ஒரு மூலிகை மரம் இருப்பதாகவும் அதைச் சூழ்ந்து நாக பாம்புகள் காவல் புரிவதாகவும் அம்மரத்தை ஒருவரும் பெறமுடியாதென்றும் நம்புகிறார்கள். மூலிகைகள் இங்கு நிறைந்து காணப்படுவதனால்தான் நெடுந்தீவு மக்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்களாகவும் வயோதிப காலத்திலும் தலைமயிர் நரையாமல், உதிராமல், பற்கள் விழாமல், திடகாத்திரமுள்ளவர்கடாகவும் காணப்படுகின்றார்கள் என்று யாழ்ப்பாணத்து மக்கள் கூறுகின்றனர்.

#### சஞ்சீவி மலையின் பகுதி

நெடுந்தீவில் மூலிகைகள் அபரிதமாகக் காணப்படுவதையிட்டு இத்தீவின் தோற்றம் பற்றிய கர்ண பரம்பரைக் கதையும் ஒன்றுண்டு. அதாவது இராம-இராவண யுத்தத்தின்போது மயக்கமுற்ற தமது வீரரைக் காப்பாற்றும் பொருட்டு அனுமான் இந்தியாவில் இருந்து மூலிகைகள் நிறைந்த சஞ்சீவி மலையொன்றினைப் பெயர்த்தெடுத்து ஆகாயமார்க்கமாகப் பாக்குத்தொடுகடலைத் தாண்டி இலங்கைக்கு வரும்போது அம்மலையின் சிறுபகுதி உடைந்து பாக்குத் தொடுகடலில் வீழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டதென்றும், இப்படியாக மூலிகை மலையின் உடைந்து விழுந்த பகுதியே இத்தீவு என்றும் பலர் நம்புகின்றனர். இக்கதை நெடுந்தீவில் மூலிகைகள் நிறைந்து காணப்படுவதற்குக் காரணம் கற்பிக்கும் முகமாக எடுத்ததொன்றல்லாமல் அறிவியல் ரீதியில் உண்மையற்றதாகும்.

நெடுந்தீவு என்ற இத்தீவின் பெயரில் உள்ள 'நெடிய' என்ற சொல் தீவின் நீளத்தைக் குறிப்பதன்று. யாழ்ப்பாணத் தீவுக் கூட்டங்களுள் நீளமான தீவு லேடன் தீவாகும், எனவே நெடிய என்ற சொல் இத்தீவு அதிக தொலைவில் அதாவது நெடுந் தொலைவில் இருப்பதையே குறிக்கும்.

## அபிஷேகத் தீவு

இலக்கியங்களில் மணிபல்லவம், நாவலர்தீவு என்று குறிப்பிடப்பட்டிருப்பன இத்தீவுதான் என்று கருதுவோரும் உண்டு. அத்துடன் பால் தீவு, அபிஷேகத் தீவு, தயிர்த் தீவு போன்ற பெயர்களையும் இது கொண்டுள்ளது. இந்தியாவில் உள்ள கோவில்களுக்கு இங்கிருந்து பால், தயிர் ஆகிய அபிஷேகப் பொருட்களைக் கொண்டு சென்றபடியினால் இப்பெயர்கள் ஏற்பட்டுள்ளன.

## ஈழத்தின் காவல் தளம்

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிவரும் இந்தியஅரசுப் படைகளுக்கு நெடுந்தீவு ஒரு பிரதான வாயிலாக அமைந்திருந்தது. இதனால் ஈழத்து மன்னர்கள் நெடுந்தீவைத் தமது பிரதான வாயில் படைத்தளமாக அமைத்திருந்தார்கள். யாழ்ப்பாண மன்னன் தனது இராச்சியப் பிரதிநிதியாக 'வெடியரசன்' என்பானை நியமித்து நெடுந்தீவில் காவற்தளமமைத்தான். இவற்றிற்கு ஆதாரமாக இந்தியாவை நோக்கியுள்ள மூன்று முனைகளிலும் சிதைவுற்ற கோட்டைகளின் சுவடுகள் காணப்படுகின்றன. இவற்றுள் பனைக்காணி முனையிலிருந்த வெடியரசன் கோட்டையும், குவிந்தா முனையிலிருந்த கோட்டையும் முக்கிய தளங்களாக இருந்திருக்க வேண்டும். இன்று இவை அழிந்து மண் மேடுகளாகக் காணப்படுகின்றன.

## புவியியற் தனித்துவம்

இத்தீவு ஏனைய தீவுகளுடன் சேர்த்து யாழ்ப்பாணத் தீவுகள் என அழைக்கப்பட்டாலும் அதன் நிலையத்தில், புவியியற் தன்மைகளில் மக்கள் வாழ்க்கை முறைகளில், பழக்க வழக்கங்களில் ஒரு தனித் தன்மை காணப்படுகின்றது. இத்தீவு ஏனைய தீவுகளினின்றும் ஆறு மைல்களுக்கு அப்பால் அமைந்திருப்பதுடன் ஏறக்குறைய 28 மைல் நீளமுள்ள கடற்பாதையால் தொடர்புகொண்டுள்ளது. மேலும் ஏனைய தீவுகள் 5 பாகத்திலும் குறைவான ஆழமுள்ள ஒரே கண்டமேடையில் அமைந்திருக்க, நெடுந்தீவு 5 பாகம் ஆழமுள்ள தனித்த ஒரு கண்டமேடையில் அமைந்துள்ளது. நெடுந்தீவுக்கும் ஏனைய தீவுகளுக்குமிடையில் 5 பாகத்திற்கும் கூடுதலான ஆழமுள்ள கடற்தளமுள்ளது. தரைத் தோற்றம், காலநிலை, பண்பாடு ஆகியவற்றில் யாழ்ப்பாணத்துடன் ஒப்பிடுமளவு ஒற்றுமை காணப்படினும் சிறிதளவு தனித்தன்மை கொண்ட வேற்றுமைகளும் உண்டு. அரசியல் நிலையிலும் வரலாற்றுக் காலம் தொட்டு இன்றுவரை உப நிர்வாக அமைப்பின் கீழ் இருந்து வருகின்றது. இன்று நெடுந்தீவுக்கென ஒரு தனிக் காரியாதிகாரி பிரிவு அமைந்திருக்கின்றது.

## பௌதிகத் தன்மைகள்

யாழ்ப்பாணப் பகுதிபோன்று நெடுந்தீவும் சுண்ணக் கற்பார்ப் பிரதேசமாயினும் மேற்கு நெடுந்தீவில் சுண்ணக் கற்பார் காணப்பட கிழக்கு நெடுந்தீவில் முருகைக் கற்பார் சிறப்பாகக் காணப்படுகின்றது. தீவின் மத்திய பாகத்தில் பாறைகள் வெளியரும்பிக் காணப்படுகின்றன. முருகைக் கற்களில் நீர் முருகை, மாமுருகை ஆகிய வகைகள் உள்ளன. மேற்கு நெடுந்தீவில் கோளான் கற்கள் எனப்படும் வன்பாறைகளும் உள்ளன.

## தரைத்தோற்றம்

தரைத்தோற்ற வேறுபாடு அதிகமின்மையாயினும் கழுவு நீர்ப் போக்கைக் கொண்டு (Run off water) தரையின் சரிவை அவதானிக்கும் போது தென்பகுதி உயரமான மேடாகவும் மத்திய நெடுந்தீவு தாழ்ந்த பகுதியாகவும் அமைந்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளது. இது ஒரு கோப்பைபோன்ற அமைப்பினை உடையது எனலாம். பெரிய குளம் ஆகிய குளங்களை அடுத்த பகுதிகள் சதுப்பு நிலங்களாகவும் காணப்படுகின்றன. கடற்கரையோரம் ஒழுங்கானதாகக் காணப்பட்டபோதும் வடகரையோரம் உட்குழிந்து காணப்படுகின்றது. இதற்குக் கடலரிப்புக் காரணமாகும். தென்மேல் பருவக்காற்றிலும் குவிந்தா முனையில் கடலரிப்பு நிகழ்கின்றது.

**மண்**

மண்வளம் பாறைத்தன்மைக்கேற்ப அமைந்துள்ளது. மேற்கு நெடுந்தீவில் சிறப்பாக கழிமண் காணப்படுகின்றது, நன்னீரும், இம்மண்ணும் இப்பகுதி விவசாய வளர்ச்சிக்கு உதவுகின்றன. பசை மண்ணாக இருப்பதால் தென்னைச் செய்கைக்கு ஏற்றதல்ல. பசைப்பற்றுள்ள உவர்மண் வீடுகள் கட்டுவதற்கு உபயோகமாகிறது. முக்கியமாக இவ் வெள்ளைக் கழிமண் தீவின் தென்பகுதியிலும், மத்திய பகுதியிலும் காணப்படுகிறது. கடற்கரைகளில் மணல் காணப்படுகின்றது. முக்கியமாக வட பகுதியில் அதிக அகலத்திற்கு இம் மணற் பிரதேசம் இருப்பதால் தென்னை செழித்து வளர்ந்து காணப்படுகின்றது.

**தாவரம் :**

பூவரசு மரம் இங்குள்ள இயற்கைத் தாவரத்துள் முக்கியமானது. தென் கீழ்ப் பகுதியில் இது அடர்த்தியாக இருப்பதனால் இப்பகுதி 'பூவரசங்காடு' என அழைக்கப்படுகின்றது. தீவின் பெரும் பகுதில் வறள் நில வளரிகளான முட்பற்றைகள், நாகதாளி போன்றன உள்ளன. அதிகமான செடிகள், கொடிகள் மருந்து மூலிகைகளாகும். பெரிய துறையை அடுத்து கத்தாளை காடுபோல் வளர்ந்துள்ளது. பனங்காணி முனையில் நாகதாளி செழிப்பாக வளர்ந்துள்ளது அரசாங்கத்தினர் விஞ்ஞான முறையில் இப்பயிர்களை அழிக்கும் பூச்சிகளை வளர்த்துப் பயிர்களை அழித்து வருகின்றனர். இவற்றைவிட ஈய்ச்சை, பிரண்டை, முள்ளி, எருக்கலை, கொடிக்கள்ளி, சதுரக் கள்ளி, இயங்கு போன்ற செடி கொடிகளும் உள்ளன. தீவின் மத்திய பகுதியில் சதுப்பு நிலங்கள் காணப்படுகின்றன. பனை, தென்னை ஆகிய தாவரங்கள் தீவின் வடபகுதியில் அதிக அளவில் வளர்ந்துள்ளன. தென்பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் புல்நிலங்கள் காணப்படுகின்றன. முக்கியமாக அறுகும் கோரையும் வளர்கின்றன. இவை நரைக் கீழ்நிலை காரணமாக என்றும் பசுமையாக இருப்பதால் கால்நடைக்கு முக்கிய உணவாகின்றது.

கைவிடப்பட்ட பயிர்நிலங்களில் 'காவோதி' என்னும் ஒருவகைப் பூண்டு முளைக்கின்றது. இது இரண்டாந் தாவரமாக வளர்கின்றது.

**பண்பாடு**

இங்கு சாதிப்பாகுபாடு பெரும் அளவில் பாராட்டப்படுகின்றது. மக்களது பழக்க வழக்கங்களில் சிறப்பாகப் போற்றப்படுவது விருந்தோம்பல் பண்பாடு. நெடுந்தொலைவில் இருப்பதால் நம் தீவுக்கு வருவோர்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாவார்கள் என்ற நோக்கமோ அன்றி நாகரீக மோகத்தால் பாதிக்கப்படாத தமிழ்ப் பண்பாட்டின் தன்மையோ, யாது காரணமோ, இப்பழக்கம் அவர்களிடம் சிறந்து விளங்குகிறது. அத்துடன் அடுத்து சாதி மதப் பாகுபாடு மக்களிடையே இருந்த போதும் தாம் நெடுந்தீவார் என்ற ஒற்றுமைப் பண்பும் மக்களிடையே காணப்படுவது போற்றற்குரியது. இங்கு நாடகங்கள், கூத்துக்கள் அதிக அளவு மேடையேற்றப்படுகின்றன. மக்களும் இக்கலைகளில் விருப்புடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

கல்வி, சுகாதார வசதிகள் இங்கு குறைவாகக் காணப்படுகின்றன. உயர்தரக் கல்விக்கும், சிறந்த மருத்துவத்துக்கும் யாழ்ப்பாணமே வரவேண்டியுள்ளது. இங்கு ஒரு மகாவித்தியாலயம் அமைந்துள்ளது. ஆயினும் 1965 இல் பர்டசாலை மூன்று மாணவர்களைக் கலைப்பகுதிக்கு பல்கலைக்கழகத்துக்கு அனுப்பியது போற்றற்குரியதாகும், நெடுந்தீவின் மத்திய பகுதியில் உள்ள ஆஸ்பத்திரிகளில் ஒரு டாக்டரும், அப்போதிக்கரியும், ஆறு தாதிமார்களும் சேவை செய்து வருகின்றனர். மேற்குப் பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் இரண்டு டிஸ்பென்சறிகள் உள்ளன. கடுமையான நோயாளர்களை அம்புலன்ஸ் படகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கிறார்கள்.

### பிறதொழில்கள்

கள்ளிறக்கும் தொழிலில் மத்திய பிரதேச மக்ககள் ஈடுபட்டுள்ளனர். தை, மாசி, பங்குனி மாதங்களில் ஆண்பனையில் இருந்தும் சித்திரை வைகாசி மாதங்களில் பெண்பனையிலிருந்தும் கள்ளிறக்குகின்றனர். வெங்காயக் கூடு பின்னுதல் இங்குள்ள மக்களின் முக்கிய தொழிலாகும். மேலும் கடகம், பாய், பெட்டி, சுழகு ஆகிய பொருள்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. மீன்பிடித் தொழில் இங்கு விருத்தியடைந்து காணப்படுகின்றது. ஆயினும் பிற்போக்கான முறைகளையே பின்பற்றுகின்றனர். பிடிக்கப்படும் மீன் கருவாடு போடப்பட்டு யாழ்ப்பாணப் பகுதிக்குக் கொண்டு வரப்படுகின்றது.

மைலிட்டி, ஊறணி, வலித்தூண்டல், தாளையடி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் அனைவரும் இங்கு வந்து மீன் பிடிக்கின்றார்கள். மக்களது போக்குவரத்துக்கும், பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்யவும் மாவலித்துறை உதவுகின்றது. இது ஏறக்குறைய 300' நீளமும் 75' அகலமும் கொண்டு காணப்படுகின்றது. பிரயாணிகள் இறங்கவும், பொருட்களை இறக்கவும் கொங்கிறீற்றால் ஆன ஒரு துறை உண்டு. இது கடலுள் 15' நீளம் 10' அகலமுமாகக் கட்டப்பட்டுள்ளது. மாவலித்துறையுடன் பஸ் செல்லும் பிரதான வீதி இணைக்கப்பட்டுள்ளது, மாவலித்துறையில் இருந்து மேற்கு ஊரில் உள்ள குருக்கள் மடம் வரை ஒரு பஸ் சேவை அமைந்துள்ளது. நெடுந்தீவின் மேற்குக் கரையில் பெரிய துறை என்னும் துறைமுகம் காணப்படுகின்றது. இது உபயோகமற்ற துறையாக உள்ளது.

### முடிவுரை :

இலங்கையின் பெரு நிலத்தில் இருந்து அதிக தூரத்தில் கடலால் பிரிக்கப்பட்டு அமைந்திருப்பதால் இன்று பல பிரச்சனைகளை இத்தீவு எதிர்நோக்கியுள்ளது. நெடுந்தீவு வரலாற்றுக் காலத்தில் பொருளாதாரத்திலும் சரி, அரசியலிலும் சரி, முக்கிய பங்கு வகித்து வந்திருப்பதை நாம் அறியமுடிகிறது. வருங்காலத்தில் முன்னேற்றமான முறையில் பாற்பண்ணை, மீன்பிடி, குடிசைக் கைத்தொழில் ஆகியவற்றை விருத்தி செய்வதுடன் பனை, தென்னை, பருத்தி ஆகிய பயிர்ச் செய்கையையும் சூழலுக்கேற்ப விருத்தி செய்தால் உண்மையிலேயே நெடுந்தீவு **''மணி பல்லவம்''** ஆகலாம். இதற்கு மக்களின் முயற்சியும், அரசாங்கத்தின் முயற்சியும் இன்றியமையாதனவாகும்.

தன்னை நல்வழிப் படுத்தும் முயற்சியில் ஈடுபடுத்தும்போது தான் மனிதன் மனிதனாகிறான். செயலிற் தூய்மையுண்டாதல் சிறந்தது நினைவிற் தூய்மையுண்டாதல் அதனினும் சிறந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடையுள்ளம்

**வித்துவான் தண். இ வேங்கடாசனார், M. A.**
*தமிழ்த்துறைத் தலைவர்*
*(தூய சூசையப்பர் கல்லூரி, பெங்களூர்)*

இன்று நாகரிகத்தின் உச்சிஎல்லையில் ஏறிநின்று வீறுகொண்டு நிற்கும் மேலை நாட்டினர் நாகரிகம் அறியாது நாடோடிகளாய்த் திரிந்த காலமும் ஒன்று உண்டு. அந்த நாளிலேயே நம் தமிழகம் நாகரிகத்தில் தனிசிறந்து விளங்கியுள்ளது. உள்ளப்பண்பின் உயர்வையே நாகரிகம் என்று கொண்டனர் வள்ளுவர் போன்ற பெரியார். மற்றொருவர் மனம் புண்படா வண்ணம் நம்மை அமைத்துக் கொள்வது தான் நாகரிகம். ''பெயக்கண்டும் நஞ்சு உண்டு அமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்'' என்ற பொய்யாமொழி காட்டும் உண்மையும் ''நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்'' என்ற நற்றிணைக்கருத்தும் இதனை எடுத்து விளக்குகின்றன.

இத்தகைய பண்பட்ட **அகநாகரிகம்**— உண்மைநாகரிகம் சிறந்து விளங்கிய அக் காலத்தில் **புறநாகரிகம்** நாகரிகத்தின் சாயல்-கூட நல்ல வளர்ச்சி பெற்றிருந்தது. நம்தமிழகத்தில் நல்ல உடை உடுத்துதல், தூய சுவைமிக்க உணவு கொள்ளுதல், நல்ல முறையில் ஆடிப்பாடிப் பொழுது போக்கி மகிழ்தல், கலைகளில் ஈடுபட்டு வாழ்க்கை நலன்களை நன்கு நுகர்தல் எல்லாம் தமிழ் உலகிற்கு அன்றே நன்கு தெரியும்.

நல்ல உறுதியான உடலும் (strong body) அதே போன்று உறுதியான உள்ளமும் (strong mind) பெற்ற நம்முன்னோர் பண்பு நிறைந்த சிந்தனையாளராய் விளங்கினர் அவர்கள் வழங்கிய சிந்தனைச் செல்வமே நம் சொந்த தமிழ் இலக்கியம், அவர்கள் அளித்துப்போந்த அழகிய இலக்கியக் கடலில் நீந்தும் பேறு பெறாதவர்கள் பிறந்தும் பயன் பெறாதவர்களே ஆவார்கள். அந்த இன்பக்கடலிலே மூழ்கி அருங்கருத்துக்களாகிய முத்துக்களை எடுத்துப்பார்க்க வேண்டும். அவ்வாறு பார்க்குங்கால் - நன்முத்துக்களை - அரும் பெறல் முத்துக்களைக் கண்டு நாம் அகமிக மகிழ்கிறோம். அவ்வளவு முத்துக்களினும் நம் உள்ளத்தை மிகமிகக் கவரும் தன்மை வாய்ந்த முத்துக்களாகப் பொறுக்கி ஒன்று சேர்க்கலாம். அந்த உயர்ந்த முத்துக்குவியலின் உச்சிநிலையின் கண் அமர்ந்து தலைமைதாங்கி வீறு கொண்டு விளங்குகின்றது ஒரு முத்து. அதன் அழகைப் பாருங்கள்.

கடல் சூழ்ந்த இவ்வுலகம் முழுவதையும் தனக்கே உரியதாய்க் கொண்டு பெருஞ் செல்வனாய் இவ்வுலகை ஆளும் வேந்தன் சிறப்புடன் வாழ்கின்றான் அவன் பெருஞ் செல்வன். தடையில்லை அதே சமயத்தில் தனது ஒரு சாண் வயிற்றை நிரப்புவதற்காக அல்லும் பகலும் இரை தேடித் தேடித் திரிந்து அல்லலுறும் ஏழையுங்கூட இவ்வுலகில் இருக்கிறான் அல்லவா? அரசன் தன்பால் எவ்வளவோ செல்வம் இருந்தும் என்ன செய்துவிடமுடியும்? உலகத்திலுள்ள அவ்வளவையும் அவனே, அவன் ஒருவனே- உண்டுவிடமுடியுமோ? எல்லார்க்கும் செல்வனுக்கும் ஏழைக்கும் வயிறும் வாழ்வும் ஒன்றுதானே. இவனும் அவனும் உண்பது நாழி (அரிசி) தானே? உடுப்பவை (மேல் ஒன்றும் கீழ் ஒன்றுமாக) இரண்டேதானே? இந்த உண்மையை எல்லோரும் அறிந்தால் என்ன முடிவுக்கு வருவோம்? இல்லாதவர்களைப்பார்த்து மனம் இரங்கி இருப்பவர்கள் வாரிவழங்க முன் வரமாட்டோமா? இல்லாதவர்களின் துன்பத்தைக் கண்டு இரங்கி அருளுள்ளம் கொண்டு வழங்குவது தானே உண்மையான செல்வத்துக்கு அடையாளம்? இதனை விளக்குப் பட்டொளி வீசும் எழில் முத்து எல்லோர் உள்ளத்தையும் கவரவில்லையா? இதோ அந்த முத்து!

> ''தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
> வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
> நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
> கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
> உண்பது நாழி உடுப்பவை இரண்டே
> பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வத்துப்பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புடு பலவே''
—நக்கீரனார்

[தெண்கடல் வளாகம்=தெளிந்த கடல் சூழ்ந்த உலகம் ஒண்குடை=ஒளி பொருந்திய வெண் கொற்றக் குடை. கடுமா=கொடியகாட்டு விலங்கு: நாழி—படி (அரிசி)

இந்த முத்து எவ்வளவு அழகியது! செல்வம் படைத்தவர்கள் கடமை, ஈகை என்றல்லவா ஒளிவீசிப் பகர்கின்றது செல்வர்களின் கடமையை (அறத்தை) விளக்கும் இந்த முத்து எவ்வளவு எளிதாக உலகில் சமநிலையை உண்டாக்கி விடுகின்றது. இந்த முத்தினைத் தாங்கிக்கொண்டிருக்கும் வேறொரு முத்தினைப் பாருங்கள். அது சொல்கின்றது ''யாதும் ஊரே யாவருங் கேளிர்'' என்று.

செல்வர்களின் கடமையை விளக்கிய அந்த அருமையான முத்துக்கு அருகே சார்ந்து பொலியும் இன்னொரு முத்தைப் பாருங்கள். அதுவும் அருகேயுள்ள இன்னும் சிலவும் வள்ளுவர் வழங்கிய மணி முத்துக்கள். செல்வர்கள் செல்வத்தைப் பெருக்க எண்ணுவது இயல்பு. மேலும் மேலும் வளர்க்க வேண்டும். அதே சமயத்தில் ஈட்டித்திரட்டிய பொருளையும் அழியாமல் ஓரிடத்தில் வைத்துக் காக்கவேண்டும். அப்பொழுதுதான் அப்பொருள் சேமமாய் இருக்கும். எண்ணி எண்ணி மகிழலாம். இப்படியெல்லாம் எண்ணுகின்ற தன்னலச் செல்வனுக்கும் வழிகாட்டுகின்றது இம்முத்து. செல்வனின் அறக் கொள்கையை விளக்கிய நக்கீரனைப் போலவே வள்ளுவரும் செல்வனின் பொருட்கொள்கையை விளக்குகின்றார். இம்முத்தின் ஒளியால், செல்வம் பாதுகாவலுடன் அழியாமல் இருக்கவேண்டுமானால் அதனை இல்லாதவர்களுக்கு வழங்கி அவர்கள் பசியைத் தீர்த்துவிடவேண்டும். அதுதான் பொருள் பேணி வைக்கும் இடமும் வழியும் ஆகும். இதுதான் இம்முத்து விளக்குவது. இதோ பாருங்கள்

''அற்றார் அழிபசி தீர்த்தல், அஃதொருவன்,
பெற்றான் பொருள் வைப்புழி''
(குறள் 226)

இவ்வாறு செல்வனின் பொருட் கொள்கையை விளக்கும் அந்த முத்தின் அருகிலேயுள்ள மற்றொரு முத்தினைக் கவனித்தீர்களா? அதுதான் இன்பமுத்து, எழிலார்ந்த அவ்வின்பமுத்து செல்வனின் இன்ப வாழ்க்கைக்கு வழி கூறுவது. இன்பம் பெறவேண்டும் என்று விரும்பும் ஒரு செல்வனுடைய இன்பக் கொள்கையை வலியுறுத்திக் காட்டுகின்றது அந்தமுத்து. இன்பத்துள் இன்பம் கொண்ட இன்பம், ஈத்துவக்கும் இன்பமரம்.

''ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்
தாமுண்டமை
வைத்திழக்கும் வன்க ணவர்''(குறள் 228)

என்ற அந்தக் குறள் முத்தைப் பார்த்தீர்களா? செல்வம் இருந்து அதனை வழங்கினால் பேரின்பம் கிட்டுமாம் அதனை அறியாது எத்தனையோ செல்வர்கள் இன்பத்தை இழந்து, இறந்து, மடிந்து, மக்கி, மண்ணோடு மண்ணாகி விட்டார்களே!

முத்துக் குவியலிலிருந்து மூன்றே முத்துக்களைக் கண்டோம். மூன்றும் செல்வர்களுக்கு நல்லறிவின் ஒளியருளி உலகை ஒன்றுபடுத்திச் சமநிலையில்-பொதுமை நெறியில்-வைக்க முயல்கின்றன. மூன்று செல்வனின் அறக் கொள்கையையும் மற்றொன்று பொருட் கொள்கையினையும் மூன்றாவது இன்பக் கொள்கையினையும் விளக்குவதைக் கண்டால் மிக இன்பமாயிருக்கிறது. ஒரு செல்வன் தான்பெற்ற செல்வத்தால் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் ஒருங்கே பெறும் வழியைக் காட்டியுள்ள இம் முத்துக்களையும் வழங்கிய பெரியோர்களையும் நாம் மிகமிகப் போற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

அறம், பொருள், இன்பம் என்ற வரிசையில் நடுவில் பொருள் உள்ளது. அதனை அடைந்தால் மற்ற இரண்டும் எளிதாகக் கிடைக்குமாம்.

''வடுவிலா வையத்து மன்னிய மூன்றுள்
நடுவணது எய்த இருதலையும் எய்தும்''

என்றதன் உண்மை இப்போது விளக்குகின்றது. முடிவு யாது? இருப்பவர் கொடுப்பதுதான். அறம் செய்ய விரும்புவதுதான். இயல்வது காலாமைதான்! ஈவது விலக்காமைதான்! ஒப்புரவொழுகுவதுதான்! சுருங்கச் சொன்னால் கொடைதான்! கொடையுள்ளம்தான்!

இதனை அறிந்ததனால்தான் நாகரிகமும் நல்ல பண்பும் மிக்கவர்களாயினர் தமிழ் மக்கள். ''இலன்'' என்னும் எவ்வம் இல்லாமை ஈதல் அவர்களது இரத்தத்தில் ஊறிவிட்டது. இன்றேல் வாயிலாத முல்லைக்குத் தேரும், ஆடும் மயிலுக்குப் போர்வையும் வழங்க முன்வருவார்களா? இதனை வெறும் பகுத்தறிவுக் கண்கொண்டு பார்க்க முடியுமா? அறிவுக்கும் அப்பாற்பட்ட இவ்வுணர்ச்சிதான் கொடையுள்ளம். இக்கொடையுள்ளம்தான் நம் தமிழகத்தின் கண் எண்ணற்ற வள்ளல்களை ஈன்று தள்ளியது. பாரி, பேகன், காரி, அதிகன், ஆய், நள்ளி, ஓரி, குமணன் இன்னும் எத்தனைபேர் இவ்வழி வந்தவர்கள்!

வாழ்க வள்ளல்கள்! வாழிய கொடையுள்ளம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியும் சமூகமாற்றமும்


## இ. சு. நடராசா, B. A., Dip. in Ed.

விரிவுரையாளர்

(கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்.)


**பு**லி, நாய், மாடு, பாம்பு, போன்ற தாழ்ந்த உயிர்கள் தம்மைப் பாதுகாக்க இயற்கையாகவே சில சாதனங்களைப் பெற்றுள்ளன. இச்சாதனங்களால் அவை உணவு பெறவும் உயிர்வாழவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. ஆனால் உயர்ந்த உயிராகிய மனிதனின் பாதுகாப்புக்கு யாவுள? என நோக்குமிடத்துக் கல்வி ஒன்றே அன்றி வேறு யாதுமில்லை என்பது புலனாகும். கல்வி என்பது சக்தி. இதனை நன்குணர்ந்த தாலன்றோ

'உற்றுழியும் கைகொடுங்குங் கல்வியினூஉங்கில்லை சிற்றுயிர்க்குற்ற துணை'

என்று முடிவு செய்தனர் நம்முன்னோர். மனித வரலாற்றை அணுகி ஆராயின் அதில் ஏற்பட்ட மாற்றங்களுக்கெல்லாம் கல்வியே அடிப்படைக் காரணி என்பது தெளிவாகும். கற்றல் மனித நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. மாற்றங்கள் மக்கட் கூட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் பொழுது சமூக மாற்றம் எனப்படுகிறது. இச்சமூக மாற்றம் பற்பல வகைகளில் சமூக இயக்கத்தினை ஊக்குவிப்பதுவும் இயக்குவதுமாக இருக்கின்றது.

மனிதன் மூளை விரிவடைந்த உயிரி மொழியென்னும் ஒப்பற்ற சமூகத் தொடர்புச் சாதனத்தைப் பயன் படுத்தும் சமூக உயிர். இவற்றால் ஏனைய உயிர்களைவிட இலகுவாகக் கற்றுக் கொண்டு தன் நடத்தையை மாற்றிக் கொள்ளும் திறன் மனிதனுக்குண்டு. ஏறக்குறைய ஐம்பது ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் மனிதன் தனது தற்போதைய உருவைப் பெற்றிருப்பான் எனத் துணியப்படுகின்றது. அன்று தொடக்கம் கற்றலைக் கருவியாகக் கொண்டு தனது நடத்தையை மாற்றிக் கொண்டே வருகின்றான். இம்மாற்றம் இன்று மிக விரைவடைந்துள்ளது. இதுவும் கல்வி விருத்தியின் தாக்கமே. ஆரம்பத்தில் மாற்றம் அமைதியாக ஏற்பட்டது. ஆனால் இன்று பற்பல துறைகளிலும் ஒவ்வொரு நிமிடமும் மாற்றங்கள் ஏற்பட்ட வண்ணமே இருக்கின்றன.

கற்றலால் ஏற்படும் மாற்றம் எல்லா மக்கட் கூட்டத்திலும் ஒரே அளவான தாக்கத்தை ஏற்படுத்தும் எனச் சொல்வதற்கில்லை. சூழலின் தாக்கத்தால் மாற்றத்தின் அளவு கூடியும் குறைந்தும் ஏற்படுதல் இயல்பு. இயற்கையோடு கூடிய அமைதியான மாற்றங்களுக்கு உட்பட்டுள்ள சமூகங்களை நாம் உலகின் பல பாகத்திலும் பரக்கக் காணலாம். அவற்றை இன்று பின்தங்கிய பிரதேசங்கள் அல்லது அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கும் பிரதேசங்களென்பர். ஆனால் இவை அண்மைக் காலத்தில் துரிதமாற்றங்களுக்கு இலக்காகியுள்ளது கவனிக்கத்தக்கது. ஐக்கிய நாடுகள் சபையின் சமூக அபிவிருத்தித்திட்டமும் அதன் பணியும் வெற்றி பெறப் பல்வேறு வகைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மனிதனிடம் இயல்பாகக் காணப்படும் அடிப்படைத்தேவை நிறைவேற்றும் முயற்சிகளும் இயல்பூக்கங்களும் தக்க சூழ்நிலை ஏற்படும் காரணத்தால் மனிதனைப் பெரும் நாட்டமுறச் செய்து அவனைத் தொழிற்படுத்துவது இயலும். கற்றலும் நாட்டத்தினால் நிகழ்வது. நாட்டமுற்ற கற்றல் சமூகம் விரும்பும் மாற்றத்துக்கு வழி வகுப்பதே விரும்பத்தக்கது. சமூகம் விரும்பும் நடத்தையினையே தனது பிற்சந்ததியினருக்குக் கற்பிக்க விழைகின்றது. அதன் விளைவே பாடசாலையென்னும் நிறுவனம் தோன்ற வழிவகுத்த அடிப்படைக் காரணி. நாட்டின் வாழ்க்கைக் கோட்பாடுகளையும் இலட்சியங்களையும் அடிப்படையாகக் கொண்டு சமூகத்தின் போக்கினை உருவாக்கும் சாதனங்களாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகள் விரைவில் உருவாகின.
இப்பாடசாலைகளின் செல்வாக்கு எல்
லாச் சமூகங்களிலும் ஒரே அளவு தாக்
கத்தை ஏற்படுத்தும் எனச் சொல்
வதற்கில்லை. நிலமானிய முறைச் சமூக
அமைப்பு தளர்ந்து சுதந்திரம் சமத்து
வம் சகோதரத்துவம் என்னும் புதிய
இலட்சியமாகக் கொண்டு சமூகங்கள்
அமைய வேண்டுமென்னும் கருத்து வலி
மைபெற்று வருகிறது. இவ்விலட்சியங்
களை அடைவதில் பற்பல தடைகள்
உண்டு. இதனை அடையுமுன் பலபடி
களைக் கடக்கவேண்டியுள்ளது. உள்ளவர்
இல்லாதவர் என்ற பிரிவு இன்று தடை
யற்ற போட்டியுள்ள சமூக அமைப்பில்
தவிர்க்க முடியாததாகிவிட்டது.
ஆனால் நாடுகள் ஏற்றத்தாழ்வைப்
போக்கி எல்லோர்க்கும் நல்வாழ்வளிக்
கப் பல்வகை முயற்சிகளை மேற்கொண்டு
வருகின்றன. கட்டாயக் கல்வியின்
மூலமும் இலவசக் கல்வி மூலமும் சமூக
மாற்றம் ஏற்படுத்த நாடுகள் முயற்சிக்
கின்றன. இலங்கையும் இக்கருத்துடன்
இத்துறையில் பல நடபடிக்கைகளை
மேற் கொண்டது வரவேற்கத்தக்கது.

மதிப்புக்குரிய கன்னங்கராவின்
முயற்சிகளும் கல்வித்துறையில் குறிப்
பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்திச்
சமூகமாற்றத்தைத் துரிதப்படுத்தியுள்
ளது குறிப்பிடத்தக்கது. இலங்கையில்
உயர்கல்வியும் அரசாங்க உத்தியோகங்
களும் எல்லா வகுப்பினருக்கும் கிடைக்
கக்கூடியதாக்கிச் சமூக மாற்றத்திற்கு
உதவிய பெருமை கன்னங்கராவுக்கு
உரியதாகும். இலவசக்கல்வி இல்லா
திருந்தால் விவசாயியின் பிள்ளை
விவசாயியாயும் ஏழைத்தொழிலாளியின்
பிள்ளை தொழிலாளியாகவுமே வாழ
வழியிருந்திருக்கும். ஆனால் இன்று நிலமை
எதிர்பார்த்த அளவு வெற்றியாக மாரு
விட்டாலும் குறிப்பிடத்தக்க அளவு
மாற்றம் ஏற்பட்டுள்ளது. சமூக ஏற்றத்
தாழ்வு குறைந்து கற்றோர் பதவியாலும்
நடத்தையாலும் சமூகமதிப்புப் பெற்று
வருவதால் சமூகத்தில் சுமுகமான வாழ்க்
கைச் சூழல் உருவாகிவருவது கண்கூடு.

வெள்ளி விழாவுக்குரிய நெடுந்தீவு
மகாவித்தியாலயம் கடந்த காலத்தில்
ஆற்றிய கல்விச் சேவையாலும் சமூக
சேவையாலும் நெடுந்தீவு மக்கள் வாழ்
வில் புது யுகம் ஏற்படுத்தியது மறுக்க
முடியாத உண்மை. ஆரம்பகாலத்தில்
இக்கல்வி நிலையம் மேற் கொண்ட பணி
கள் தம் ஏகபோக உரிமைகள் பறி
போகும் எனப் பயந்த சிலரால் மதிக்
கப்படவில்லை. ஆனால் [illegible]

மிக்க பாடசாலை நிர்வாகியின் செல்
வாக்கு தடைகளுக்கு அப்பாற்பட்ட
தாயிருந்தது. எனவே நீதியும் நியாயமும்
பின்பற்றப்பட்டு இலவசக் கல்வியின்
பயனை நன்கு நுகர்ந்து பயன்பெற வழி
பிறந்தது. ''கல்வியின் நோக்கம் மாண
வரின் முழுவளர்ச்சிக்கும் ஆவன செய்
தல்'' என்பதே ஏற்றுக் கொள்ளப்
பட்ட கல்விக் கோட்பாடாகும். இக்
கோட்பாட்டோடு பணிபுரிந்த ஆரம்ப
அதிபரின் நிர்வாகச் செல்வாக்கால்
இளைஞர் பரீட்சைகளில் சித்தி எய்திய
தோடு அரசாங்க உத்தியோகங்களையும்
தொழில் முயற்சிகளையும் பெற்று சமூக
மதிப்பிலும் பொருளாதாரத்திலும்
சிறிது உயர்வுகண்டனர். இதனால்
ஏற்றத்தாழ்வு பாகுபாடு என்னும் சமூக
வீரோதக் கருத்துக்கள் தளர்ந்தன.
ஆங்கிலக்கல்வியை அறிமுகம் செய்து
வைத்தது நற்கனிமரம் போன்று தீவின்
நடுவில் அமைந்த இப்பாடசாலைதான்.
இத்தகைய சேவையால் கால் நூற்
ருண்டுச் சேவையின் பெறுபேறுகளை
இன்று தீவு முழுவதுவும் பரக்கக் காண்
கின்ருேம். இம்மாற்றங்கள் ஏற்பட உத
விய-முன்னேடியாயிருந்து ஆரம்பகாலந்
தொட்டு நெடுங்காலமாக இப்படசாலை
யின் நிர்வாகியாயிருந்த திரு. எட்வேட்
நவரத்தினசிங்கமும் அவருக்குத் துணையா
யிருந்தவர்களும் பெரும்புரட்சியாளர்கள்
என்பதனை தீவின் வரலாற்றினைக் காய்
தல் உவத்தல் இன்றி ஒப்புநோக்கும்
யாவரும் காணத் தவறமாட்டார்.

இதுவரை பொதுவாகவும் குறிப்
பாகவும் கூறப்பட்ட கருத்துக்கள் எக்
காலத்திற்கும் பொருந்துபவை. இக்
கருத்துக்கள் இனியும் சமூக ஏற்றத்
தாழ்வைப் போக்கி வாழ்வை வளம்
படுத்தும் தன்மையன. பிச்சை புகினும்
கற்றல் நன்று. ஏனெனில் கற்ருேர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு. அவர்கள்
எங்கே பிறந்தாலும் சமூகம் மதிக்கிறது.
சமூகமதிப்புத் தன்னிறைவுப்பேற்றுக்
கும் சமூகத் தொண்டுக்கும் வழி வகுப்
பன. வாழவும் வாழவிடவும் நல்ல
மனப்பாங்குகளும் திறன்களும் கல்வியின்
செல்வாக்கால் எல்லாச் சமூகத்திலும்
ஏற்பட்டுச் சமூகமாற்றத்தை ஏற்படுத்தி
நல்வாழ்வு நல்கும் என்பதை யாவரும்
ஏற்றுக்கொள்வர். இத்துறையில்
வெற்றி காண இக்கலங்கரை விளக்கு
போன்று தொண்டாற்றிய மகாவித்
தியாலயம் தொடர்ந்து சுடர்விட்டு
வருங்காலச் சந்ததியினர் வையத்துள்
வாழ்வாங்கு வாழ வழிபிறக்கும் என
நம்புவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*Back Row :* Mr. K. Sathasivam, Mr. P. Antonippillai, Mr. P. M. J. Antony, Mr. S. Sivapatham, Mr. R. Loganathan, Mr. S. Kumarasamy, Mr. A. Subramaniam.

*Middle Row :* Mrs. S. Thirunavukkarasu, Miss. K. Kanapathipillai, Mr. S. Gnanarajah, Mr. T. Sri Visakarajah, Mr. V. Kathiravelu, Miss. S. Nagendirar, Miss. K. Vaithiyanathar, Mrs, P. M. J. Antony.

*Front Row :* Mrs. S. Veluppillai, Mr. S. Sivanayagamoorthy, Mr. S. Somasundaram, Mr. R. Sinnathamby (Principal), Mr. J. Constance (Head Master) Mr. K. Kanagaratnam, Mrs. S. Gnanarajah.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்ெருரு கச்சு தீவாய் மாறுமோ?

(பண்டித வித்துவான் க. த. ஞானப்பிரகாசம் – நெடுந்தீவு)

விருத்தம்

1. நீலமெனுங் கச்சணிந்த கடல ணங்காள்
 நித்தமுமே தாலாட்ட நிறைப டைத்த
கோலமொடு தலைநிமிர்ந்து நெடுந்தீ வென்னக்
 குலவிவந்த தீவம்இன்று கரைக ளெல்லாம்
காலவெள்ளம் அரித்திடவே பொன்போல் வாய்த்த
 கட்டழகார் திருமேனி காய்ந்து தீய்ந்து
மேலவுள பரப்பளவிற் சுருங்குங் காட்சி
 வேதனையைத் தருவதெனின் விளம்பல் என்னே !

2. வீதிகளிற் பாலாறு பாய்ந்து பாய்ந்து
 வெள்ளமெனப் பரவிவந்த விந்தை கண்டு
சோதிதரு ராமெஸ்வர ஆல யத்தின்
 தூயதிருப் பணிக்கும்பால் அனுப்பி வந்த
சாதியுள ஆனிரைகள் தோணி யேறிச்
 சாக்காட்டுக் காய்இந்தாள் நோக்காட் டோடு
மோதுமலைக் கடல்மீது செல்லுங் காட்சி
 முற்பிறப்பின் கன்மமோ ? தன்மமோ தான்

3. சீரான ராசெஸ்வரி எலரு வோடு
 சில்வர்ஸ்பிறே அலையரசி என்றே யரசு
பேராகத் தந்தபெரு வள்ள மெல்லாம்
 பெருமூச்சு விட்டுறங்குங் காட்சி தன்னை
நேராகக் கண்டவர்கள் பயண மெல்லாம்
 நிற்பாட்டி "என்னேஇக் கொடுமை"யென்று
ஆராத நெடுந்தீவைத் துறக்க வெண்ணும்
 அநியாயம் பிறக்கச்செய் தன்மை யென்னே

4. சொல்லினல் அடங்காத வீர மக்கள்
 சொர்க்கவீ டாக்கிவாழ் சுகத்தைக் கண்டு
கல்லினு லுருவான பூமி யென்று
 கடல்கடத்திச் சென்றுனைக் காட்டை யெல்லாம்
நெல்லினல் நிறைந்தபெருங் கழனி யாக்க
 நிதம்அவரைப் பயன்படுத்த மக்கள் குன்றி
ஒல்லிபோ லுடல்ஒட்டும் நெடுந்தீ வன்னை
 உறுந்துயரம் நாவெடுத்தே யுரைக்க லாமோ ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பாங்கான தினைசாமி குரக்கன் என்னு
பயற்றெடுகேழ் வரகென்ற பலதா னியங்கள்
நீங்காமற் செய்துசுகங் கண்டு பூமி
நீடுழி வாழ்ந்தபெரு மக்கள் நாடு
ஓங்கிவரு நன்னீரோ மாறி யிந்நாள்
உவர்நீராய்ப் பரவிஅச் சுறுத்தக் கண்டோம்
தேங்கிவரு கடல்நீரைத் தடுப்பார் யாரோ
தெய்வமே! ஒரு புதுமை செய்வாய்! செய்வாய்!

6. நச்சுமணஞ் சுவறுத ஞானத் தீவாய்
நாடுபுகழ் சான்றோரை யீன்ற தீவாய்
உச்சிமிசை பாராட்டுஞ் செல்வத் தீவாய்
உளம்மலர்ந்து விருந்தூட்டும் உணர்ச்சித் தீவாய்
மெச்சுபுகழ் பரிமளித்த நெடுந்தீ வின்று
மேலுரைத்த பலவாலுஞ் சுருங்கி மற்றோர்
கச்சுதீவாய் மாறுத வண்ணங் காத்தல்
கடனென்றே மக்களெலாந் திடன்கொள் வீரே.

★


ராதா மணி மார்க்

கேசரோக நிவாரண தைலம்

கூந்தல் உதிர்தல், பூச்சிவெட்டு, புழுவெட்டு, ஆகிய கேசரோகங்களைக் குணப்படுத்தி பாதிக்கப்பட்ட இடங்களில் தலைமயிரை வளர்க்கும் சக்திவாய்ந்த கூந்தல் தைலம் எம்மிடம் உண்டு. இத்தைலத்தைப் பாவித்துவந்தால் கூந்தல் நீளமாகவும் அடர்த்தியாகவும் வளரும். மேற்கூறப்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்ட அநேகர் இத்தைலத்தைப் பாவித்து குணமடைந்துள்ளனர்.

எப்பொழுதும் எம்மிடம் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள் :

ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏக விநியோகஸ்தர்கள்

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும்
மொத்த சில்லறை வியாபாரிகளும்)

53, கே. கே. எஸ். ரோட்,
பெரியகடை,
யாழ்ப்பாணம்.
போன் : 541 Residence : 7068

"பாலேந்திரா பில்டிங்"
160, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.
போன் : 35825.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூர் உற்பத்திகளை வாங்கி விற்பனை செய்தும்,

உற்பத்திப் பொருட்களை மலிவாக விற்பனை செய்துவரும்

ஒரே தாபனம்

# "புதுக் கடை"

நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு.


உரிமையாளர் :

வ. ஐ. நல்லதம்பி

# SATHIYAH & CO

JEWELLERS

229A, K. K. S Road, Jaffna.



## சத்தியா அன் கோ

நகை வியாபாரமும் அடைவு பிடித்தலும்

கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

When You are in Colombo

**SHOP** at

# CHANDRA GROCERIES

GENERAL MERCHANTS

**NO. 480 HAVELOCK ROAD,**

**COLOMBO-6**

***All your Requirements of :***

GROCERIES, PROVISIONS,
SUNDRY GOODS, ICE CREAM
FROZEN MEAT. VEGETABLES.
BABY FOODS, BATTERIES. &
DAILY NEEDS, Etc.

வெள்ளி விழா மலர் சிறப்புற எம் அன்புகனிந்த
வாழ்த்துக்கள்

## சந்திரா குறோசறீஸ்

480, ஹவலோக் டவுண்,

கொழும்பு-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவின் பொருளாதார அபிவிருத்தி

சு. இ. பசுபதி
கணக்காளர்
(தொழிற் திணைக்களம், கொழும்பு.)

ஒரு நாட்டின் இயற்கை வளமாக அமைந்துள்ள மூலப்பொருட்களை உற்பத்திக்குப் பயன்படுத்தித் தேசிய வருமானத்தை உயர்த்துவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்தும் முயற்சியையே பொதுவாக நாம் இங்கு பொருளாதார அபிவிருத்தி என்கிறோம். இம் முயற்சிக்குச் சிறந்த போக்குவரத்து வசதியும், மக்களின் கல்வி முதிர்ச்சியும் இன்றியமையாத சாதனங்களாகும். முதலில் நாம் அபிவிருத்தி செய்யக் கூடியதாக நம் தீவகத்தில் காணப்படும் மூலப் பொருட்கள் எவை, எவை என்று கவனிக்கும்போது, நாலாபக்கமும் எம்மைச் சூழ்ந்துள்ள கடலையும், எங்கும் தேங்குக்கிடக்கும் கற்குவியல்களையும், நன்னீர் வளமற்ற கற்பூமியையும், பேணுவாரற்று அலைந்து திரியும் மந்தைக் கூட்டங்களையும், எங்கும் வானளாவி வான்பயிராக வளரும் பனைகளையுமே காணக்கூடியதாக இக்குகின்றது. இவைகளை நாம் எவ்வாறு அபிவிருத்தி செய்யலாமென்பதை இங்கு ஆராய்வோம்.

## கடற்றொழில் அபிவிருத்தி

எமது கடலில் இருபருவ காலங்களிலும் மீன்பிடிக்கக்கூடிய வசதியும் வளமும் உண்டு. ஆனால் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களோ போதிய வருமானமின்றிப் பின்தங்கிய வாழ்க்கையை நடத்துபவர்களாக இருக்கின்றார்கள். போதிய இயந்திரப் படகுகள், நவீன மீன்பிடி உபகரணங்கள், ஆழ்கடல் மீன்பிடிக் கலையிற் போதிய அனுபவம், சுகாதார வசதியுடன் கூடிய வீடு முதலியன இன்மையே இந்நிலைக்குரிய முக்கிய காரணங்களாகும். இத்தொழிலுக்குரிய அபிவிருத்தித் திட்டம் இக்குறைகளை நீக்கி தொழிலாளியின் நாளாந்தச் சராசரி மீன்பிடியை அதிகரிக்கச் செய்வதாக இருக்கவேண்டும். நீர் கொழும்பிலுள்ள மீன்பிடித்தொழிற் பயிற்சிநிலையத்தில் ஆழ்கடல் மீன்பிடித் துறையிலும், மீன்பிடிப்படகு இயந்திரம் பழுதுபார்க்கும் துறையிலும் இவ்வூர் மீனவர்களுக்குப் பயிற்சியளிக்க விசேட சலுகைகளைப் பெறவேண்டும்.

இப்பொழுது பிடிக்கப்படும் மீன் பெரும்பாலும் கருவாடுபோடவே பாவிக்கப்படுகிறது. கருவாட்டிலும் பார்க்கப் பழுதடையாது குளிரூட்டிய (ஐஸ் போட்ட) ஈரலிப்பான மீனுக்கு இலங்கையின் ஏனைய பகுதிகளில் வருடம் முழுவதிலும் நல்ல விலையும் மிதமிஞ்சிய தேவையும் இருந்து வருகிறது. எனவே குளிரூட்டிய மீனை உடனுக்குடன் சந்தைப்படுத்தி மீனவர்களின் வருமானத்தை அதிகரிக்க வழி செய்யவேண்டும். இதற்கு உதவியாகப் பனிக்கட்டி உற்பத்தித் தொழிற்சாலை (Ice factory) ஒன்று இங்கு நிறுவப்படவேண்டியது அவசியமாகிறது. மின்சக்தி உள்ளஊரில் கிடைக்குமிடத்து இத் தொழிற்சாலைக்கு அதிக முதலீடு தேவைப்படாது.

## கல்வள அபிவிருத்தி

வயிரக்கல், முருகைக்கல்லென இங்குள்ள கற்களில் இருவகையுண்டு. வீதிகள், ஒழுங்கைகளுக்குப் போடுவதற்கும், கட்டிடத் தொழிலுக்கும் உபயோகிக்கப்படுவதால் இங்குள்ள வயிரக்கற்களுக்கு இப்பொழுது அதிக தேவையேற்பட்டிருக்கிறது. இக்கற்களை அகழ்வதற்கும் பாவனைக்குவேண்டிய தரத்தில் உடைப்பதற்கும் மின்சக்தியால் இயக்கப்படும் இயந்திரங்களைப் பயன் படுத்தி இதனை மேலும் இலாபகரமான தொழிலாக வளர்ச்சியடையச் செய்ய வேண்டும்.

எல்லாவகையான முருகைக்கற்களும் சுண்ணாம்பு உற்பத்திக்கு பயன்படுத்தலாம். ஆனால் இன்றேடு மிகக்குறைவாக இங்கு கிடைக்கும் ஒருவகை வெள்ளை நிறமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகைக்கற்களே சுண்ணும்பு உற்பத்திக்குப் பாவிக்கப்படுகிறது. இதனுல் எமது உள்ளூர்த் தேவைக்கே சுண்ணும்பு போதாமை இருப்பதோடு அதிக விலையும் கொடுக்கவேண்டியிருக்கிறது. மின்சாரத்தினுல் இயக்கப்படும் சூளைகளை அமைப்பதன் மூலம் எல்லா வகையான முருகைக் கற்களையுமே சுண்ணும்பு உற்பத்திக்குப் பயன்படுவதோடு தற்பொழுது சூளைவைப்பதற்குத் தேவைப்படும் விறகுத் தட்டுப்பாட்டையும் தவிர்த்துக் கொள்ளலாம். இதனுற் கிடைக்கும் மேலதிக சுண்ணும்பை இலங்கையின் ஏனைய பாகங்களுக்கு இலாபகரமான விலைக்குச் சந்தைப்படுத்தக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

## கமத்தொழில் அபிவிருத்தி

மண்ணுள்ள பகுதிகளில் உவர்நீரையும் நன்னீர் உள்ள பகுதிகளிற் கற்தரையையுமே இயற்கை எமக்குக் கொடுத்துள்ளது. இந்நிலைக்குப் பிரயாண வசதிக்காக இங்குள்ள நன்னீர் வாவிகளைக் கடலுடன் இணைத்து ஒல்லாந்தரால் கட்டப்பட்ட வாய்க்கால்களும் ஒரு அடிப்படைக் காரணமாகும். இவ்வாய்க்கால்களாற் கடல்நீர் உட்புகுந்து நன்னீர் வாவிகளை உவர் நீர்க் கழிகளாக்கிவிட்டன. அல்லாமலும் அவை பெய்யும் மழைநீரை ஆங்காங்கு தேங்கி நின்று நாட்டின் நன்னீர் மட்டத்தை (Water table) உயர்த்த உதவாது உடனுக்குடன் கடலையடைய உதவுகின்றன. இதனுற் பல ஆண்டுகளுக்கு முன் நன்னீர்க் கிணறுகளாக இருந்தவை இப்பொழுது உவர்நீராக படிப்படியாக மாறிக் கொண்டு போகின்றன. சில ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்துப் பூர்த்தியடையாத நிலையிலுள்ள கடல்நீர் உட்புகாது தடை செய்யும் திட்டம் பூர்த்தியாக்கப்படுமிடத்து இப்பிரச்சனைகளுக்கு நாம் தீர்வு காணமுடியும். அப்போது இன்று கழிகளாகக் காணப்படும் வாவிகள் நன்னீர் ஏரிகளாக மாறிவிடும். அதன்மேல் குறைந்த அளவில் மிகுந்த உழைப்புடன் தற்போது செய்கை பண்ணப்பட்டுவரும் மிளகாய், உருளைக்கிழங்கு, வெங்காயம் முதலிய உப உணவுப்பயிர்கள் பெருமளவில் பயிரிட வாய்ப்பு ஏற்படலாம். அல்லாமலும் வெட்டுக்கழி, வெல்லைக்கழி முதலிய ஏரிகளையடுத்துள்ள பகுதிகள் நெல் செய்கை பண்ணுமிடமாக மாறும் வாய்ப்பும் ஏற்படலாம்.

## மந்தை வளர்ப்பு அபிவிருத்தி

முன்பெல்லாம் பசுத்தீவு, பாற்தீவு என்றழைக்கப்பட்ட இவ்விடத்தில் இன்று பால்கிடைப்பது வெகுவாக அருகிவிட்டது. இந்நிலைக்கு இங்குள்ள மந்தைகளின் வளர்ச்சிக்குறைவும் அவற்றின் பாரமரிப்புக்குறையுமே காரணமாகும். இதற்குரிய காரணங்கள் பல. மந்தைகள் காற்று, மழை, வெய்யில், முதலாம் இயற்கை ஏதுக்களாற் தாக்கப்படுகின்றன. இவற்றின் மேய்ச்சற்றரையும் நீர்வளக்குறைவால் வருடாவருடம் அருகிக் கொண்டேபோகிறது. வரட்சிக்காலத்தில் உரமாகவீசும் சோளகக் காற்றும் மண்ணை அரித்துச்செல்வதனுல் மண்ணுக்குக் கீழுள்ள கற்பார் மேலுக்கு வருகிறது. இதனுல் புற்றரை கற்பார் நிரம்பிய வெறும் தரையாக மாறிக்கொண்டேபோகிறது. தென்பகுதி மரங்களற்ற வெளியான பிரதேசமாக இருப்பதும் மண்ணரிப்பை மேலும் துரிதப்படுத்துகிறது.

இக்குறைபாடுகள் பலவற்றையும் நீக்க தெற்குக்கரையோரமாகக் காற்றுத்தடையை உண்டுபண்ணக் கூடியதாக மரங்களை வளர்ப்பது ஓர் மிகச்சிறந்த திட்டமாகும். இதன்கீழ்வளர்க்கக்கூடியமரம், வரண்டபிரதேசத்தாவரமாகவும், உயர்ந்து வளரக் கூடியதாகவும், காற்றின் வேகத்தைக் குறைக்கக்கூடியதாகவும், காற்றினுல் பாதிக்காததுமாக இருக்கவேண்டும். சவுக்குமரம் இதற்கு உகந்தது. இத்திட்டம் பலன்கொடுக்க மரங்களைச் சாமித்தோட்டப் பிட்டியிலிருந்து குந்தாவரை கரையோரமாக நடவேண்டும். மரங்களை 50 யார் தொடக்கம் 100 யார் வரை அகலத்துக்கு அடர்த்தியாக நட்டால் வரட்சியான சோளகக் காற்றுக்காலத்தில் மழைபெய்யக்கூடிய சுவாத்தியமும் உண்டாகலாம்.

புல்வளத்தைப்பெருக்குவதோடு நின்றுவிடாது இறக்குமதி செய்த நல்லினக் காளைகளை உள்ளூர் மந்தைகளுடன் இனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலப்புச்செய்து அவற்றின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தவேண்டும். இந்நடவடிக்கைகளால் பால் உற்பத்தி அதிகரிக்கும். குளிரூட்டப்பட்ட நவீன சாதனங்களைப் பயன்படுத்துவதால் பாலை ஏனைய இடங்களுக்கு அனுப்பலாம்.

பால் தரும் மந்தை வளர்ப்பிலும் இறைச்சிக்காக ஆடுமாடுகளை வளர்ப்பது எம்மூர்ச்சுவாத்திய நிலையில் மிகவும் இலகுவான ஒரு தொழிலாகும். ஆனால் இறைச்சிக்காக வேண்டப்படும் மாடாடுகளுக்கு இப்பொழுது நல்ல விலை கிடைப்பதில்லை. இக்குறையை நிவர்த்தி செய்ய அரசாங்கத்தால் சமீபத்தில் நிறுவப்படவிருக்கும் மந்தை அபிவிருத்திச்சபையின் கொள்வனவு நிலையமொன்றை இங்கு நிறுவுவிக்க ஆவன செய்யவேண்டும்.

## பனம் பொருள் அபிவிருத்தி

பனை இங்கு பெரும் தொகையாக வளரும் ஒரு வான்பயிர். இதன் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் பல வகை உணவுப் பொருட்களையும் கைத்தொழில் மூலப் பொருட்களையும் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

பனங்கிழங்கிலிருந்து பெறப்படும் புளுக்கொடியலுக்குத் தென்னிலங்கையில் நல்ல விலையும் அதிக தேவையும் இருக்கிறது. ஆனால் எம்மவரோ, புளுக்கொடியல் போடுவதற்கு ஏற்படும் சிறு சிரமத்துக்காக வருமானக்குறைவையும் சந்தைப்படுத்த முடியாமையையும் பொருட்படுத்தாது, ஒடியல் போடவே முன் வருகிறார்கள். இம்மனப்பான்மையை மாற்றிப் புளுக்கொடியல் போட்டு அதிகவருமானத்தைப் பெற முயற்சிக்கவேண்டும்.

பனம்பழச் சாற்றில் பல முக்கிய உயிர்ச்சத்துக்கள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். பனம் பழத்திலிருந்து பனாட்டு செய்யும் வழக்கம் இப்பொழுது அருகிவிட்டது. எனவே பனம்பழச்சாற்றிலிருந்து "ஜாம்" செய்யும் சாத்தியக்கூறு ஆராய்ந்து அமுல் நடத்துவதன் மூலம் வருவாயை அதிகரிக்க வேண்டும்.

பனை விதையிலிருந்து பெறப்படும் தும்புச்கு, தூரிகை (Brush) செய்யும் கைத்தொழில் நிலையங்களுக்கு விற்கக் கூடிய வசதியிருக்கிறது. இதே போல கங்குமட்டையிலும், பனைமட்டையிலும் இருந்து எடுக்கப்படும் தும்புக்கும் அதிக விலையும் மிகமிஞ்சிய தேவையும் இருக்கிறது. எனவே இவற்றின் உற்பத்தியை அதிகரித்து வருவாயைக் கூட்டுவதோடு காலகதியில் இவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு கைத்தொழிலையும் ஆரம்பிக்க முயற்சிக்க வேண்டும்.

வெங்காயக் கூட்டுச் செய்கை இப்பொழுது இங்கு முற்றாக மறைந்து விட்டது. எனவே பனையோலையை மூலப் பொருளாகக்கொண்ட வேறொரு குடிசைக் கைத்தொழிலை ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகிறது. பாயிழைப்பு இங்கு பண்டைக்காலம் தொட்டு இருந்துவரும் ஒரு குடிசைத்தொழில் ஆகும். பனையோலைப் பாயைப் படுக்கைவிரிப்பாகப் பாவிக்கும் வழக்கம் இப்பொழுது மிகவும் குறைந்து விட்டது. எனவே இத்தொழிலுக்கு போதிய ஊதியம் கிடைக்கக் கூடியதும் உடனுக்குடன் சந்தைப்படுத்தக் கூடியதுமான புதிய தேவைகளை நாம் காண வேண்டியது அவசியமாகின்றது. முற்காலத்தில் யாழ்ப்பாணப் புகையிலை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டபோது அதனைக் கட்டியனுப்ப ஓலைப்பாயே உபயோகிக்கப்பட்டது. இதே போன்று இன்று ஏற்றுமதியாகும். அநேக பாரம்பரியமற்ற உற்பத்திப் பொருட்களைக் கட்டியனுப்ப ஓலைப்பாயை பயன்படுத்தலாமா என்ற சாத்தியத்தை நாம் ஆராய வேண்டும். இம் முயற்சியில் ஏற்றபலனைப் பெற நாம் இலங்கைக் கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையம், வர்த்தக சங்கங்கள் போன்றவற்றின் உதவியை நாடவேண்டும்.

அரசினரால் நிறுவப்பட இருக்கும் பனம் பொருள் ஆராய்ச்சி நிலையம் பனம் பொருள் அபிவிருத்தியில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தலாம். அப்பொழுது நாமும் விழிப்புடனிருந்து அவற்றால் அடையக்கூடிய பலனைப்பெற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் எண்ணெய்வள ஆராய்ச்சி இலங்கையின் வடக்கு, வடமேற்குக் கரையோரத்தையடுத்து எண்ணெய்ப்படிவு (oil - Deposit) இருப்பதை வெளிப்படுத்தியுள்ளது. எண்ணெய் அதிகமாகக்காணப்படும் இடங்களில் நெடுந்தீவும் ஒன்றெனக் கூறப்படுகிறது. வர்த்தகரீதியில் எண்ணெய் உற்பத்தி செய்யுமிடமாக எம்மூர் தெரிவு செய்யப்படுமிடத்து அதன் பொருளாதார அபிவிருத்தியில் ஒரு புரட்சிகரமான மறு மலர்ச்சி ஏற்படலாம்.

மேலே கூறப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்களுக்கும் மின் சக்தி இன்றியமையாததென்று அவ்வப்போது குறிப்பிட்டோம். வைத்திய சாலைக்கும் சாருப்பிட்டிக் குழாய் நீர் விநியோகக் கிணற்றுக்கும் நிறுவப்பட்டிருக்கும் மின்சக்தி இயந்திரங்களில் இருந்து மேலதிக மின்சக்தியைப் பெறக்கூடிய சாத்தியம் இருக்கிறது. இம் மேலதிக சக்தியை உடனடியாக அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பாவிப்பதற்கு பெறக்கூடிய ஒழுங்கைச் செய்ய வேண்டும். மின்சக்தியின் பாவனை அதிகரிக்கும்போது தனியாக ஒரு திட்டம் தேவைப்படும். மின்சக்தி உற்பத்தியியந்திரங்கள் மூலம் பெறும் மின்சக்திக்கு (Thermal power) வருடாவருடம் செலவிடவேண்டிய முதல் அதிகமாகும். எனவே நீர்வீழ்ச்சியிலிருந்து பெறும் மின்சக்தித் திட்டத்தையே (Hydral Power) நாம் அமைக்க முயலவேண்டும். இத்திட்டத்தைப் புங்குடுதீவுடன் இணைப்பதற்குரிய செலவைவிட வேறு அதிக செலவுகள் ஏற்படா. தினமும் விஞ்ஞானம் ஏற்படுத்திக் கொண்டு போகும் நவீன மாற்றங்கள் இச்செலவையும் குறைக்க வழி காட்டலாம்.


எம்மூர்ப்பிரதேச அபிவிருத்தி மன்றம் எமக்குரிய திட்டங்களை வகுக்கும்போது மேற்கூறிய கருத்துக்களையும் ஆராயுமென்பது துணிபு. அப்படிவகுத்த திட்டங்களை ஒவ்வொன்றினதும் முக்கியதத்துவத்துக்கேற்ப நிரைப்படுத்த வேண்டும். பின்னர் இப்போதுள்ள அரசாங்கத்தின் கொள்கைக்கேற்பப் பிரதேச வாரியாக வரவு செலவுத் திட்டத்தில் எமக்கு ஒதுக்கும் நிதியைக் கொண்டு வகுத்த திட்டங்களைக் குறைந்த செலவில் கூடிய பலனைப் பெறக்கூடியதாகச் செயற்படுத்துவோமாக.

---

மனிதனின் மாறும் மனம் எதனுலும் நிரந்தரமாகத் திருப்தியடைவதில்லை. ஒரு சமயம் விரும்புவதை மறு சமயம் விரும்புவதில்லை. எப் பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க ஒரேவழி கடவுள் விருப்பத்திற்கிணங்கி அவர் எனக்கு அளித்துள்ள வற்றிற் திருப்தி காண்பது தான். மாறுதல்களால் இன்பம் காணமுடியாது. ஆனந்தம் நமக்குள்ளேயே இருக்கிறது.


— மகாத்மா காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**BOARD OF DISCIPLINE** ஒழுங்குச் சபை

## ஆசிரியர்கள் அல்லாத ஊழியர்கள்



திரு. வே. மதியாபரணம்
(இராக்காவலாளர்)



திரு. கி. பத்தன்
(சௌக்கியத் தொழிலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் கல்வி

**அ. சு. மார்க்கண்டு**
*நில அளவையாளர்*
*(விரிவுரையாளர், பல்தொழில் நுட்பக்கல்லூரி, கொக்குவில்.)*

**எ**ந்த ஒரு நாடு தொழிற் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றதோ, அந்த நாடு பொருளாதாரத்தில் முன்னேற்ற மடைந்து வருவதைக் காணலாம். சீனு, யப்பான் போன்ற நாடுகள் இதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. ஆனுல் எமது ஈழம் பொருளாதாரத்திற் பிற்போக்கடைந்தமைக்கு, அரசாங்கம் இதுவரை காலமும் தொழிற் கல்வியை ஊக்குவிக்க முன் வராமையும் ஒரு காரணமாகும்.

பண்டைக் காலத்து மக்கள் தொழிலைப் பல வகையாகப் பிரித்து, அவற்றைச் செய்யும் மக்களையும் பல சாகியத்தவர்களாக வகுத்து விட்டிருந்தனர். உதாரணமாகக் கமத்தொழில் செய்பவன், கமக்காரன் என்றும், மரவேலை செய்பவன் தச்சன் என்றும், மீன் பிடிப்பவன் மீனவன் என்றும் இன்னும் பலவாறுகத் தொழில் அடிப்படையிற் சாதியையும் உண்டாக்கிக் கொண்டார்கள். இதன் காரணமாக ஒருவனின் தொழிலை மற்றவன் செய்ய வெட்கப் பட்டான். இதனுற் குடும்பக் கௌரவமே குறைந்து விடுமென எண்ணினுன். இவ்வித தப்பெண்ணம் காரணமாகச் சாதி, மத, பேதம் தலை தூக்க ஆரம்பித்தது. தீண்டாமை என்னும் நோய் இவ்வளவு தூரம் பரவியமைக்கு இதுவும் ஒரு காரணம் என்முல் மிகையாகாது.

ஆனுல் இன்று நிலைமை பெருமளவில் மாறி விட்டது. தொழிலைக் கொண்டு உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்று எண்ணிய காலம் மலையேறி விட்டது. ஒருவனின் ஆற்றலுக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப கல்வி அமைய வேண்டும் என்பதையும் மக்கள் உணர்ந்துவிட்டனர். சர்வ கலாசாலை சென்று வந்த பின்பும் கூட ஒருவன் தனது வாழ்க்கையை நிர்ணயிக்க முடியாத நிலை அன்றிருந்தது. அதற்குக் காரணம் ஒரு தொழிலுக்கான கல்வி புகட்டப்படவில்லை. அன்றியும், பிள்ளையின் ஆற்றலுக்கேற்பக் கல்வி கற்பிக்காமற் பெற்றேரின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையில் கல்வி கற்பிக்கப்பட்டது. எந்திரவியலில் நாட்டம் கொண்ட ஒரு பிள்ளையை, அவனின் பெற்றேர் அவனை ஒரு வைத்திய நிபுணனுக்க வேண்டுமென்ற ஆசை மேலீட்டினுல், அவனின் திறமைக்கும், ஆற்றலுக்கும் மாறுகக் கல்வி கற்பிக்க முனைந்து அவனை இரண்டுங் கெட்டான் நிலைக்காக்கிய குடும்பங்களும் எமது மத்தியில் இருக்கத்தான் செய்கின்றன. இவ்வித எண்ணங்கள் ஒவ்வொரு பெற்றுரின் மனதிலிருந்தும் மாறவேண்டும். எனவே ஒரு மாணவனின் ஆற்றலுக்கேற்ப அவனது கல்வி அமைய வேண்டும். அவனது நாட்டம் எத்துறையிற் செல்லுகின்ற தென்பதை இளமையிலிருந்தே நோக்கி, அவனை அத்துறையிலே செல்ல ஊக்குவிப்பது பெற்றேரினதும், ஆசிரியரினதும் தலையாய கடனுகும்.

இன்றைய கல்வி நிலையிற் சில முன்னேற்ற மளிக்கக்கூடிய மாற்றங்கள் இடம் பெற்றிருப்பதைக் கண்டு யாரும் பெருமைப்படாமல் இருக்க முடியாது. ஒவ்வொரு பாடசாலையிலும், மரவேலை, நெசவு வேலை, கமத்தொழில் போன்ற பலவகையான தொழிற்கல்வி போதிக்கப்பட்டு வருகின்றது. இயந்திரத்தின் உதவியாலும், இரசாயனத்தின் முன்னேற்றத்தினுலும், இன்று ஒவ்வொரு தொழிலும் குறிப்பிடத்தக்க அளவு முன்னேறி வருகின்றது. உதாரணமாக அன்று 40 புஷல் நெல் விளைவித்த நிலத்தில் இன்று 140 புஷல் நெல் விளைவிக்கக் கூடியதாக இருக்கின்றது. இது போன்றே, கைத்தறி கொண்டு பல நாட்களில் ஒரு சேலையை நெய்தெடுத்தவர்கள், இன்று எந்திரத் தறியின் உதவியுடன் ஒரு நாளையில் பல சேலைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். எனவே தொழில் வளர்ச்சிக்கு இரசாயன முன்னேற்றம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதனால் இன்று பெரும் பாலான மக்கள் அன்று போல் சில குறிக் கப்பட்ட அரசாங்க உத்தியோகங்களை நம் பியிராமற் தொழிற்கல்வி பயின்றதன் மூலம் அதிக ஊதியத்தையளிக்கும் தொழி லையே மேற்கொள்ளுகின்றார்கள்.

இதனை ஊக்குவிக்கு முகமாக இன்று அரசாங்கம் பல தொழில் நுட்பக் கல் லூரிகளையும், பல்தொழில் நுட்ப நிறு வனங்களையும் இலங்கையின் பல பாகங்களி லும் நிறுவியுள்ளது. இந் நிறுவனங்களிலே, வர்த்தகம், கமத்தொழில், எந்திரவியல், அளவையியல், மரவேலை, தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் போன்ற இன்னும் பல விதமான தொழிற்கல்வி போதிக்கப் படு கின்றது. இதனால் ஒரு மாணவன் தனது ஆற்றலுக் கேற்ற ஒரு தொழிலைத் தேர்ந் தெடுத்து, அதனை நன்கு கற்று அதிற் பாண்டித்தியமுமடைய ஏதுவாகின்றது. இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ஒவ்வொரு மாணவ, மாணவியும், தனது திறமைக் கேற்ற தொழிற் கல்வியைக் கற்று அதனைச் செயற்படுத்தினால் எமது ஈழமும் கூடிய கெதியில் ஒரு தன்னிறை வுடைய நாடாகத் திகழுமென்பதிலைய மில்லை.

*


**THURAI & CO**

**JAFFNA**

தரத்திற்கும் நீடிய உழைப்பிற்கும்
சிறந்த வெளிச்சத்திற்கும்
உலகப்பிரசித்தி பெற்ற

"டெக்னைற் பற்றறி பாவியுங்கள்"

விநியோகஸ்தர்கள் :

**துரை & கோ**

யாழ்ப்பாணம்

கிளை
கண்டிரோட்,
பரந்தன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உல்லாச புரியாக . . . !

## க. கனகரத்தினம், பி. எஸ். சி.,

(ஆசிரியர்)

**ஆ**ழித் திரைகடல் மத்தியிலே; ஆணிப்பொன்முத்தென; முப்பத்தைந்து மைல் விசாலமுள்ளதும்; ஆற்றல் மிக்க வெடியரசன் ஆட்சிசெய்ததும், பழமை தொட்டுப் 'பசுந்தீவு' பால்தீவு; பசும் புற்றரை நிரம்பிய 'டெல்வ்ற்' என்றும் ஐரோப்பிய ஆட்சிக்காலத்தில் அழைக்கப்பட்டது நெடுந்தீவு.

யாழ்ப்பாணத்தலைநகர் தொடர்பு கொள்ளும் நோக்கமாய் இதன் வட கடல் அண்மையில் குடியிருப்பை அமைத்து வாழ்கின்றார்கள் மக்கள். தென்கடல் தொட்டு வெறும் புற்றரைகளையும், குளங்கள், கழிகள், கேணிகள், பற்றைநிரம்பியகாடுகள் உடையது இப் பெரும்பகுதி. கோட்டைக்காடு, வெல்லை, மணற்றுறை என்பன காட்டி நிற்கும் சரித்திரத்தொன்மை இங்குதான். சைபீரியா, இந்திய உபகண்டம், அவுஸ்திரேலியா போன்ற தேசங்களில் இருந்து வருகின்றன குடிபெயரும் பறவைகள்.

விலங்குகளில் பல வகுப்புக்களான வை தம் இனப் பெருக்கப் பழக்கங்களோடு பால் உணர்வுத் தொடர்பு கொண்டு நிகழ்த்தும் ஒழுங்கானபருவ காலத்தில் இடம் விட்டு இடம் பெயர்தலே குடிப் பெயர்வாகும். குடிப் பெயர்வை பெரும்பாலும் செய்கின்றனபறவை இனங்களே. கால நிலைக்கும், சூழ் நிலைக்கும் ஏற்ப உணவு, வயது என்பன கருதி மாற்றிக் கொள்கின்றன தம் வாழ்க்கையை. நாடு விட்டு நாடும், காடுவிட்டுக் காடும், கண்டம் விட்டு கண்டமும் பறந்து சென்று சிறப்படைகின்றன. அதி உயர்மலைகள் பெருநீளக்கடல்கள் போன்ற இயற்கை ஏதுக்கள் இவற்றிற்கு எதிரிடையாகா. எனினும் சில குறிப்பிட்ட புள்ளினங்கள் மட்டுமே குடிப் பெயர்வை நிகழ்த்துகின்றன.

சிறப்பான இனப் பெருக்கு நிகழ்த்த வசதி, உணவு, காலநிலை, அமைதி, தனிமை என்பன உப காரணிகள். சாதாரணமாகக் குடிப் பெயர் பறவைகள் 25—40 மைல் வேகத்தில், 1500'—4000' உயரத்தில் வசந்த, இலையுதிர் காலங்களில் உத்தராயன, தட்சணாயனப்பகுதிகளில் நிகழ்கின்றது குடிப் பெயர்வு. இலங்கையை ஒல்லாந்தர் ஆட்சி செய்த காலத்தில் குதிரைகளை இறக்குமதி செய்து இத்தீவகத்தின் புற்றரையில் வளர்ந்தார்கள் என கூறப் படுகின்றது. குதிரை லாயக்கட்டிடம், நாட்டு மக்கள் புகழ் கேட்டுநிற்கும் கட்டிடம் உள்ளது சாருப்பிட்டிக்கண்மையில். ஆண்டுகள் பல உருண்டோடிட ஆயிரம் குதிரைகள் பலுகிப் பெருகின. பரியினக்கூட்ட ஒட்டச்சிறப்பினைக் கண்டு மகிழ்ந்தனர் உல்லாச பயணியர் கூட்டம். சுற்றுலா மக்கள், மேயும் புல்லை மறந்து பாயும் குதிரைக் கூட்டங்கள் அணிவகுப்பில் ஒரு தலைவனின் கீழ் நெடுந்தரவைகளில் திரிவதையும் கண்டு களித்து வியப்படைவர்.

இன்றும் வேட்டைப்பிரியர் இத்தீவகம் வருகை தந்தால் மூன்று, நான்கு நாட்கள் பரவசப்பட்டு இன்பத்தில் ஆழ்ந்திருக்க அமைந்திருக்கும் இயற்கைகளை எவ்விதம் கூறுவது. மனிதனுக்கு மகிழ்வூட்டுவன வென்றால் உணவுக்குகந்த சுவை மிகுதியுமான பறவை இனம் என்பது ஓர் கூற்று. புரட்டாசி தொடக்கம் தைவருடப்பிறப்பு வரை குடிபெயரும் பறவையின அழகைக் கவர்ந்தவற்றில் முக்கிய இடம் பெறுகின்றது இத்தீவகம். சைபீரியன்வாத்து, குதிரைமலைக் கோட்டான், கூளக்கிடாய் பவளக்காலி, குருகுநாரை, பொடிக் குருவி, வருகைதரும்பறவை இனங்களாகவும் தீவகப் பறவை இனத்தில் மணிப்புறு, கௌதாரி, ஆள்க்காட்டி, முயற்கிணுந்தி சுவைமிகு மேசை உணவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


களாகவும், கிளி, மைனு குயிற்கூட்டங்கள் வாழ்த்தொலி செய்யும் இனங்களாகவும் மிளிர்கின்றது.

இத்தீவின் தென் தொகுதியிலே ஆடு மாடு குதிரைகளின் சாணம் சேர்ந்து அதில் உண்டாகும் புழுக்களை நீண்ட கால அளவு கொண்ட பகல் உணவு உண்பதற்கு வருகை தரும் பறவைகள். கூட்டமாக இரைச்சலுடன் மக்கள் "பறக்கும் தட்டுகளோ" என வியப்படையும் வண்ணம் வானளாவிப் பறந்து குளம் குட்டைகளில் தம் காதற் கீதங்களை ஒலித்த வண்ணம் மெய்மறந்து நீந்துகின்றன.

வேட்டைக்காரர் பலர், அயற்கிராமத்தவர் சிலர், உல்லாச சுற்றுலாநபர் பலர், படைவீரர் போன்று தங்கள் துப்பாக்கிகளுடன் பறவைகளின் வதிவிடங்களை நாடுகின்றனர். மாரிபொழிந்து மழைநீர் தேங்கிய இடங்களைத் தாண்டுகின்றனர் தமது பாதங்களால். பதுங்கி வெடி தீருகின்றனர் துப்பாக்கிகளால். கண்ணி வைத்தும் பிடிபடுகின்றன 'சினைப்ஸ்' போன்ற பறவைகள்.

வேட்டைக்காரர்களை ஏமாற்றி நீரில் அமிழ்ந்தி நெடுந்தூரம் நீந்துகின்றன சைபீரியன் தாராக்கள். போட்டியாக இரு துவாரம் செய்த இருபானைகளைக் கவிழ்த்து மிதக்க விடுகின்றனர் மாற்று வேட்டையாளர்கள். மிதந்துவரும் பானைகளை அலட்சியமாக இப்பறவைகள் கருதி விடுகின்ற சமயங் கண்ணருகில் இரு துவாரமிட்ட பானையைத் தலையில் இட்டு உடல் மறைந்து இறங்கி நீரில் தவழ்கின்றனர்: அவைகளின் மத்தியில் சென்று பத்துக்கு மேலான பறவைகளைக் கால்களில் பிடித்து களிப்படைகின்றனர்.

நெடுந்தூரம் பகல் இரவாய் ஓய்வின்றிச் செய்த பயணக்களைப்பைத் தீர்க்கின்றாள் தீவக அன்னை, தூக்கமின்றி மேற் கூறிய வேட்டைக்காரர்களுக்கு களிப்பூட்டுகின்றாள் மறு புறம். மாதகல் மயிலிட்டி போன்ற இடங்களில் இருந்து வந்து பெருந்தொகை மீன்களைப் பிடித்து பெரும் பணம் திரட்டுகின்றனர் மீனவர்கள். சகாய விலை மீன் பெற்று சந்தோஷ மடைகின்றனர் நம்தீவக மக்கள். இக்கால ரீதியில் "திரை கடலோடியும் திரவியம் தேடச் சென்ற மக்களையும் வாவென்று அழைக்கின்றன விரும்பிய சுவை மீன்கள். இப்பேர்ப்பட்ட தனிச் சிறப்பியல்புகளைக் கொண்ட எம் தீவகம் சுருங்கக் கூறக் கூடிய பழமை புராதன சரித்திரத் தொடர்புகளும் வெடியரசன் மீகான் கோட்டைகளும் கல்வெட்டுக்களும் அகழிகளும் நோளன் துரையின் அழியாச் சந்ததியினரையும் பூதம்பொழி நன்னீர்ச் சாருப்பிட்டிக் கிணறுகளும் இந்திய நாட்டுத் தனுஸ்க்கோடியைக் கண் முன்னே நிறுத்தி வைக்கும் பெரிய துறைக் கோரியும் குயிந்தாபோன்ற கட்டிடங்களையும் கண்டு 'வியப்புற்று களிப்புற்றோரைத் தெங்கின் இளநீரும் நுங்கின் பத நீரும் சுவைத்துவிட்டால் எவரும் இங்கு வதிவதையே விரும்பி உல்லாச புரியாக மாற்ற மக்கள் அரசாங்கத்தை வேண்டுவர் என்பது வெள்ளிடைமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவில் நிலைத்து நிற்போர்
# to be Ever Remembered



திரு. M. A. கந்தப்பு அவர்கள்
**M. A. Kandappu Esq.**
(1-8-47 — 30-12-53)



பண்டிதர். N. கந்தையா அவர்கள்
**Pandit N. Kandaiah Esq.**
(13-5-46 — 30-6-56)



திரு. K. செல்லையா அவர்கள்
**K. Sellaiah Esq.**
(1-5-48 — 30-4-58)

(13-5-46 — 1-12-51)

*Mr. S. Rasaiah*
*,, P. Kanthainar*
*,, N. Kandasamy Iyer*
*Mrs. J. Mills*

*Mr. R. Puvaneswararajah*
*,, K. Velauthampillai*
*Miss. S. Nagapper*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வை விரிவு

ச. அமிர்தநாதர்

ஏற்றம் மிகுந்த எமது தலைமுறையின்
போற்றுதற்கான புதிய மலர்ச்சி எங்கும்!
காலத்துக் கொவ்வாக் கயமை வழமைகள் தங்
கோலங் கிழிந்து குற்றுயிராய் மாயுதெங்கோ!
எண்ணச் சிறப்பும் இலட்சியப் புது நோக்கும்
மண்ணுலகை நன்கு மாற்றி அமைத்திடவே
பூக்கத் துடிக்கும் புதுயுகத்தின் தத்துவங்கள்!
ஆக்கத்துக்கான அயரா முயற்சி பல!
நின்றும் இணைந்தும் நேசக்கரங் கொடுத்து
ஒன்றாய் அடியெடுத் துயருகின்ற மாந்தரினம்!

பார்வை விரிவும் பாய்கின்ற சிந்தனையும்
ஏதோ உலகை -- இனிய தோர் உலகை
இக்காலம் கண்டு 'எல்லோர்க்கும் வாழ்வு' எனும்
பொற்காலம் காணும் புதிய நிலையினிலே
கீதம் இசைக்கக் கிளர்ந்த உணர்வின் மொழி
நாதம் பெருகி நாற்றிசையும் போய் முட்ட
என்ன எழுச்சி!......இத்தனைக்கும் பின்னணியில்
முன்னைப் பெருமைக்கே முற்றும் உரித்தான
ஆவூர் -- நெடுந்தீவில் அடியெடுத்து வைக்கின்றேன்.

தூய உணர்வொன்று தோன்றிச் சிலிர்த் தென்னுள்
பாய நினைவுப் பசுமை மலர்கிறது......

பாதை புதியதுவோ! பயணம் புதியதுவோ!
மீதமெல்லாம் கால வேகப் புதுமையதோ!
ஒன்றைவிட ஒன்று உயர்ந்த தலைமுறையாச்
சென்று சென்று உயரும் செயலுடைத்திவ்வுலகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தே கால உணர்வுத் துடிப்பெல்லாம்
அள்ளி அள்ளிக் கொண்டு அதற்குத்தமை அர்ப்பணிக்கும்
இற்றைத் தலைமுறையின் எழுச்சி மிகப் பரந்து
பற்றும் புதுவேகம்! பார்வை விரிவு கொள்ளச்—
சென்ற தவறெல்லாம் சீர்ப்படுத்திச் சீர்ப்படுத்தி
'இன்றே புதிதாய்ப் பிறந்தோம்' எனும் பாங்கில்
நின்று சிறக்கும் விழைவு! .....


சிந்தைத் தெளிவும் தெளிந்த ஒரு நோக்கும்
முந்தியதை வென்று முழுமை நிறைவு பெற
ஏகுகின்றார் எம்கால இலட்சியங்கள ளாவி;
பாதை அமைக்கின்றார்; பார்க்கின்ற பக்கமெல்லாம்
நீதி தனித்துவமாய் நின்று ஒளிர்ந்திடவே
வீதி யெங்கும் அன்பு விளக்கம் பெறுகிறது.

ஒட்டிக் கிடக்கும் உயர்ந்த மனிதப்பண்பு
விட்டு—கிளைவிட்டு வேரோடிப் பாய்கிறது! .....
இத்தனைக்கும் மேலால் எங்கள் யுகத் தேவை
அத்தனையுங் காணும் ஆர்வப் பெருந் துடிப்பு!

நெஞ்சத்து ஏறி நினைவில் இனிப்பதற்குக்
கொஞ்சமோ—இல்லை; கோடி நலங்கிளர்ந்து
பொங்கி இந்தவாழ்வுப் பூமியெல்லாம் தூய்மைசெய்ய
இங்கு பணி காண்பீர் இனிது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Mr. S. NAGENDIRAR,** *J. P.*

**திரு. சு. நாகேந்திரர் J. P. அவர்கள்**

இவர் 1946-ல் முன்னைநாள் சபாநாயகர் சேர். வைத்தியலிங்கம் துரைச்சாமி அவர்களையும், இலவசக் கல்வியின் தந்தையான C. W. கன்னங்கரா அவர்களையும் எமது தீவகத்துக்கழைத்து ஆங்கிலப் பாட சாலை ஒன்று வேண்டுமென கேட்டு பாடசாலை அமைப்பதற்கு மிகவும் உழைத்தவர். ஆரம்ப காலத்தில் நிரந்தரமற்ற பாடசாலை அமைப்பதற்குத் தமது காணியை தற்காலிகமாக மனமுவந்து அளித்தவர். இவர் முன்னாள் தலைமைக்காரராகவும், கிராமசபைத் தலைவராகவும் பணியாற்றியவர். தற்பொழுது சமாதான நீதவானாக இருக்கும் இவருக்கு எம் மாவித்தியாலயம் வெள்ளி விழா எடுக்கும் இவ்வேளையில் தனது நன்றியைக் கூறிக்கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவின் புவிச்சரிதவியலும் நீரும்

மு. சு. குமாரசாமி, B. A.

யாழ்ப்பாணக் குடாநாடும் அதனைச் சார்ந்த தீவுகளும் புவியியல், புவிச்சரிதவியல், பண்பாடு, கலாச்சாரத் துறைகளில் தனித்துவம் உடையன. யாழ்ப்பாணத்திற்கு மேற்கே பரந்து காணப்படும் தீவுக்கூட்டங்கள் இயற்கை வளமற்றுக் காணப்பட்டாலும் வனப்பு மிக்கவை. இவற்றுளொன்றான நெடுந்தீவு, எல்லாத் தீவுகளினின்றும் வேருக, தென் மேற்கே வங்காளக் கடலும் மன்னார் கடலும் கலக்குமிடத்தில் தனியே எழில்மிகு தோற்றத்துடன் அமைந்துளது. இப்பகுதி கடல்களினதும் காற்றுக்களினதும் சந்திப்பு மையமாக இருப்பதால் வருடத்தின் பெரும் பகுதி பெரிய அலைகளைக் கொண்டதாகவும் போக்கு வரத்திற்கு வில்லங்கங்கள் கொடுப்பதாகவும் அமைகிறது. இலங்கையைப் புவிச்சரிதவியல் அடிப்படையில் பிரிக்கும்போது யாழ்ப்பாணக் குடாநாடும் தீவுகளும் மயோசீன் காலச் சுண்ணக்கற் பிரதேசம் எனப்படுகிறது. நெடுந்தீவும் இப்பிரதேசத்தில் அமைந்தாலுங்கூட அதற்கும் பிரதேசத்தின் ஏனைய பகுதிக்கும் குறிப்பான வேற்றுமைகளுங் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் அமைப்பு மட்டுமன்றி பிரதான நிலப்பரப்பிலிருந்து தனித்தியங்குந் தன்மையுமாகும். குறிப்பான வேற்றுமைகளைச் சிறப்பாக பண்பாட்டுத்துறையிற் காணமுடியும்.

நெடுந்தீவின் பண்டைய வாழ்க்கை முறையும் வளமும் இன்றைய நிலையை விட முற்றிலும் வேறு விதத்திலமைந்திருந்ததென்பது வரலாறு கண்ட உண்மையாகும். கிராமியப் பொருளாதாரத்தின் அடிப்படைப் பண்பான மந்தைவளர்ப்பு அக்காலத்தில் பரந்த முறையில் நடைபெற்றதுமன்றி மக்கள் வாழ்க்கையின் தவிர்க்க முடியாததாக அமைந்திருந்ததென்பதும் 'பசுத்தீவு' எனும் பண்டைய பெயரால் அறியப்படுகிறது. அதனுடன் தொடர்பான இடப்பெயர்களுங் கூட பண்டைய வளனை எடுத்துக் காட்டுகின்றன. 'தலையாறும் பெரியதுறையும் நெடுந்தீவின் வரலாற்றை அறியாதோருக்கு வியப்பையளிக்கலாம். இதற்குக் காரணம் தீவின் வரலாறு முழுமையாக அறியப்படாததேயாகும். வரலாற்று ஆசிரியர்களும் மாணவரும் நெடுந்தீவின் வரலாற்றைச் சிறந்த முறையில் யாவருமறியும் பொருட்டு தெரிவிக்க முயற்சியெடுக்க வேண்டும். விவசாயமும் மந்தை வளர்ப்பும் உன்னத நிலையிலிருந்த காலப்பகுதி தான் தீவின் பொற்காலம் எனலாம். இதற்கு உறுதுணையாக அமைந்தது அன்றைய நீர் வளமாகும். கிடைக்கப்பெறும் மழைநீர் முழுவதும் வீணே கடலில் கலந்து விடாது அல்லது ஆவியாகிப் பிரயோசன மற்றுப் போகாது தீவிலேயே தங்கியிருக்கக் கூடிய பொறிமுறை யமைப்பொன்றை அக்கால மக்கள் ஏற்படுத்திக் கொண்டனர். இவ்வமைப்பானது, மழையாற் கிடைக்கும் நீர் முழுவதும் தரையில் தங்கியிருக்கச் செய்ததால் 'தலையாறு' போன்ற நீர்ப் பரப்புக்கள் ஏற்படவிடமாகியது. நீர் வளம் நன்கமையவே மந்தைவளர்ப்புத் தொழிலும் உன்னத நிலையிலிருந்தது. இதைப் பசுத்தீவு என்னும் பண்டைய பெயர் மாத்திரமின்றி, அத்தொழிலுடன் தொடர்பான தமிழ்ச் சொற்களும் விளக்குவன. பேச்சுவழக்கில், வேறெப்பகுதியிலும் காணப்படாத பல தமிழ்ச் சொற்கள் இன்றும் இங்கு பேச்சுவழக்கிலுள்ளன. கடையால் என்ற சொல் நெடுந்தீவில் பரக்கப் பேசப்படுவதுடன் அங்குள்ள மக்களால் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. தீவின் விவசாயமும் மந்தைவளர்ப்பும் சிறந்து விளங்கிய தன்மை வியாபாரத்தில் அதை முக்கியமடையச் செய்தது. 'பெரியதுறை' 'பள்ளிவாசல்' என்ற இடப்பெயர்கள் இதை விளக்குவன.

நெடுந்தீவின் பூர்விக மக்கட் குடியேற்றம் அப்போதைய இயற்கை வளத்தால் கவரப்பட்டதாயினும் இன்று அங்கிருந்து வெளியேறும் குடிப்பெயர்ச்சியின் போக்கையே காணமுடிகிறது. கடந்த 20 வருட காலத்தில் வேறுபகுதிகளுக்குப் பெயருஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்தொகை அதிகரித்து வந்துள்ளதைப் புள்ளிவிபரங்கள் காட்டுவன. இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் 3,906 ஆக இருந்த சனத்தொகை 1946 ஆம் ஆண்டு 6,338 ஆக அதிகரித்தது. அதாவது அரை நூற்றுண்டளவில் சனத்தொகை வளர்ச்சி இருமடங்காகியது. ஆயினும் இதன்பின்பு குடித்தொகை குறைந்து செல்லும் பண்பையே காணலாம். இதை 1953 ஆம் ஆண்டில் 5,987 ஆகவும் 1963 ஆம் ஆண்டில் 5875 ஆகவும் 1971 ஆம் ஆண்டில் 5607 ஆகவுமிருந்த சனத்தொகையால் அறியமுடிகிறது. இப்பண்பிற்குப் போக்குவரத்து வசதிக்குறைவே காரணம் எனக் கருதப்பட்டாலும் அது அவ்வளவு பொருத்தமான கருத்தல்ல என்பதை, இன்றைய வசதிகளைக் காட்டிலும் எதுவித வசதிகளற்ற அக்காலத்தில் மக்கட் பெயர்ச்சியானது நெடுந்தீவை நோக்கியமைந்ததிலிருந்தே அறிய முடிகிறது. ஆக, பொருத்தமான காரணம் அரசாங்கத்தால் காலந்தோறும் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களாகும். நீர், நில வளங்களற்று பொருளாதாரப் பிரச்சினைகளுடன் போராடிக்கொண்டிருந்த மக்களை குடியேற்றத்திட்டங்கள் கவர்ந்து கொண்டதில் ஆச்சரியமில்லை.

இயற்கையால் அளிக்கப்பட்ட சமநிலைத் தன்மை பாதுகாக்கப்படட வேண்டிய வேளையில் மனிதனின் முன்ஞேக்கற்ற செயல்களினுல் பெயர்த்தெறியப்பட்டது. வருடத்தின் ஒருசில மாதங்களில் கிடைக்கும் மழைநீர் முழுவதையும் பாதுகாத்துத் திறம்பட பிரயோசனப்படுத்தும் செவ்விய முறையை கடந்த ஒரு நூற்றுண்டு காலத்து நெடுந்தீவு மனிதன் கவனியாது விட்டுள்ளான். மழைமூலங் கிடைக்கும் நீர் முழுவதையும் இயற்கையாகவே அமைந்த 'புனல்' வழிகள் மூலம் நிலத்தின் கீழே ஊடுருவச் செய்து தேவைக்கேற்பத் தரைக்கீழ் நீராக அதை உபயோகப்படுத்த வேண்டிய வேளையில், வெள்ளமேற்படுங் காலத்தில் கால்வாய்களமைத்துக் கடலுக்குத் திருப்பப்பட்டது. இம்முறையானது தீவின் அமைப்பிற்கே பொருந்துவதாக அமையவில்லை. தீவில் அமைந்திருக்குங் கால்வாய்கள் கிடைக்கும் மழைநீரின் பெரும்பகுதியைக் கடலுட் செலுத்தி, உயிர் வாழ்க்கையை நிச்சயமற்றதாக்கியதுடன் குடிசனப் பெயர்ச்சிக்கும் வழி வகுத்தது. மழைகாலங்களில் இயற்கையாகவே நிலத்தின் கீழ்ச் சென்ற சிறிதளவு நீரும் மற்றைய காலங்களில் கிணறுகள் மூலம் பயன்படுத்தப்படவே படிப்படியாகக் குறைந்து வந்த நன்னீர் மட்டமானது முற்றுக அற்றுப்போகுமோ என எண்ண வேண்டியுள்ளது. சாருப்பிட்டி போன்ற நன்னீரூற்றுக்களின் நன்னீர்த் தன்மை குறைய உவர்த் தன்மை அதிகரித்து வருவதைப் பார்க்கும் போது குடிப்பதற்குக் கிடைக்கும் சிறிதளவு நீருங்கூட அற்றுவிடுமோவென அஞ்சவேண்டியுள்ளது.

''நாடு வளம்பெற வேண்டுமாயின் உற்பத்தி அதிகரிப்பதுடன் அதனை அனைவரும் அனுபவிக்கக் கூடிய அமைப்பு இருக்க வேண்டும், அதாவது சமதர்மம் நிலவ வேண்டும்'' எனப்படுகிறது. உற்பத்தி அதிகரிக்க வேண்டுமாயின் மூலவளங்கள் சாதகமாக அமையவேண்டும். ஆதலால் நெடுந்தீவின் நீர் வளத்தின் பாதகமான போக்கைத் தொடர்ந்து நீடிக்க விடாது தடுத்தற் பொருட்டு விரிவான செயற்றிட்டம் ஒன்று உடனடித் தேவையாகவுள்ளது. மழை காலங்களில் கிடைக்கும் நீர் முழுவதும் சுண்ணும்புக்கற் பாறைகளிடையே கசிந்து நிலத்தின் கீழ்ப் பகுதியைச் சென்றடையக்கூடிய வழிகள் யாவை எனக் கண்டு செயற்பட்டாற்றுன் தரைக்கீழ்ப் பகுதியிற் போதியளவு நீரைப்பாதுகாத்து வைத்திருக்க முடியும். தரைக்கீழ் நீர் தரைமேலுள்ள நீரிலும் பாதுகாப்பானது. வறண்ட வலயத்தில் பரவலாகக் காணப்படும் நிராவியாக மாறுஞ் செயற்பாடு தரைக்கீழ்நீரில் ஏற்படுவதில்லை. எவ்வளவு தூரம் தரைக்கீழ் நீரைப்பாதுகாத்து வைத்திருக்க முடியுமோ அவ்வளவு தூரம் பாதுகாத்து வைத்திருத்தல் நெடுந்தீவைப் பொறுத்த வரையில் அவசியமாகிறது. அதன் சுண்ணும்புக் கற்பாறையமைப்பானது, அதிர்ஷ்டவசமாக நீரைச் சேகரித்து வைத்திருக்குந் திறனைக் கொண்டுள்ளதுடன் நீரைக் கீழ் நோக்கிக் கசியவைக்குந் திறனையுங் கொண்டுள்ளமை நீர் மட்டத்தை உயர்வாக வைத்திருக்க உதவுகிறது. சுண்ணும்புக் கரைசலாலும் மனிதனுலும் உருவாக்கப்பட்ட தீவு முழுவதுங் காணப்படும் சிறு குளங்களும் நீர்ப் பள்ளங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் மழைநீரைக் கீழ் நோக்கிக் கசிய வைக்கும் புனல்களாக அமைந்துள்ளன. இவை சிறப்புறச் செயற்பட வேண்டு மாயின் அவற்றின் அடித்தளங்களில் சேறும் களியும் மண்டியும் படிந்து நீர் கசியுந் தன்மையைத் தடுக்காதவாறு பாதுகாக்க வேண்டும். இம்முறை நம் மூதாதையரால் நன்கு பேணப்பட்டமை தான் பண்டைய செழிப்பிற்குக் காரண மாகும். ஆனால் இன்று அவை தேடு வாரற்ற நிலையிலுள்ளன. உள்ளூராட்சி மன்றம் குளங்களைத் துப்புரவாக வைத் திருக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற் கொண்டாலுங்கூட நீர்வளத்தைப் பேணும் விரிவான திட்டமாக அது அமையவில்லை. குளங்களும் நீர்ப்பள்ளங்களும் சேற்றாலும் மண்டியாலும் மூடப்பட்டுக் காணப்படு கின்றன. இவையாவுந் துப்புரவாக அமைய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றம், விவ சாயக் குழுக்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் மற்றும் இளைஞர் கழகங்கள் ஆகியன உதவ வேண்டும். இம்முறையில் கிடைக்கும் மழை நீர் விரைவாகத் தரைக் கீழ்ச் செல்ல முடிவதால் வெள்ளப் பெருக் கையுந் தடை செய்ய முடிகிறது. அத் துடன் நிலத்தில் விழும் நீர் முழுவதும் வேறுவழியாக வடிந்தோடாமல் தரையிற் றங்கிநிற்க வகை செய்தல் வேண்டும்.

நெடுந்தீவின் மத்தி தாழ்ந்தும் கரை யோரம் சற்று உயர்ந்தும் நீர் தங்கி நிற்கக் கூடிய அமைப்பானது, கொடை யாகவிருந்தாலும் மனிதனாலும் வானிலை யாலும் ஆக்கப்பட்ட கால்வாய்கள் கிடைக்கும் மழைநீரின் பெரும் பகுதியைக் கடலுட் செலுத்தும் வழிகளாக அமைந் துள்ளன. சில வேளைகளில் அவை கடல் நீரைத் தரையுட் சேர்த்து உவர்த் தன்மையை அதிகரிக்கவுஞ் செய்கின்றன. ஆதலால் நெடுந்தீவின் நீர் வளத்தைப் பாதுகாக்குந் திட்டத்தின் முன்னோடியாகக் கால்வாய்கள் யாவற்றிற்கும் குறுக்கே அணைகள் கட்டப்படல் வேண்டும். இவ் வாறான ஒரு திட்டம் 10 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டாலும் ஈற்றில் தோல்வியையே கண்டதென்பது ஈண்டு குறிப்பிடற்பாலது. மழை நீர் கடலையும் கடல் நீர் தரையையும் அடையாதவாறு மேற்கொள்ளப்படும் நடவடிக்கையானது கிராமத்தின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் முயற்சியாக அமைகிறது. எனவே நெடுந்தீவிற்கு அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குவோர் அதன் மூலவள விருத் திக்கு முதலிடம் கொடுக்கத் தவறுவார் களேயானால் தோல்விக்கு வித்திட்ட வராவர்.

நெடுந்தீவின் எதிர்கால உயிர் வாழ்க்கை நிச்சயமற்றதாகவுள்ளது என்ற கருத்தும் நிலவும் இந்நேரத்தில், அதன் மூலவளப் பிரச்சினைகளைப்பற்றியும் அவற்றை எவ்வாறு தீர்த்துக்கொள்ளலாம் என்பது பற்றியும் ஆய்வுகள் நடைபெறல் அவசியம். அத்துடன் அவற்றின் முடிவுகள் கட்டுரைகள் மூலமும் அறிக்கைகள் மூல மும் வெளியிடப்படுவதுடன் அவற்றைச் செயற்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். இன்னும் இந்தவகை யான ஒரு கட்டுரையில் முக்கியமான சில பிரச்சினைகளும் அவற்றுக்கான மாற்று நடவடிக்கைகள் பற்றியும் சுருக்கமாக ஆராயலாமே தவிர விரிவான ஆய்வு இயலக் கூடியதன்று. இக்கட்டுரை, ஓரள விற்கு ஒரு சிலரையாவது ஊக்குவித்துச் செயற்படத் துண்டுவதாக இருந்தால் அதுவே இக்கட்டுரையின் நோக்கத்தின் பெரும் வெற்றியாகும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOR ANYTHING AND EVERYTHING IN

# JEWELLERY

DIAMONDS OF THE BEST QUALITY


ALWAYS IN STOCK

**ORDERS PROMPTLY EXECUTED**

*VISIT*

# RANEE JEWELLERS

**224, K. K. S. ROAD, — JAFFNA.**



எப்பொழுதும் நீங்கள் விரும்பும்

தங்க வைர

நகைகளை

திருப்தியுடன் பெறுவதற்கு உகந்த இடம்

# ராணி ஆபரண மாளிகை

**224, கே. கே. எஸ். வீதி,**

**யாழ்ப்பாணம்.**

**ஆடர் நகைகள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OUR STUDENTS



விஞ்ஞான கூடத்தில்

***at work in the Science Lab***



நெசவு வகுப்பில் ***At work in the Weaving Class***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுராணம் பெருங்காப்பியமா

செ. சிவபாதம் B. A.
(Spl. in Geo. Ceylon)

காலத்தின் போக்கிற்கிணங்க மக்களின் வாழ்க்கை மாற்றமுற்றுச் செல்கின்றது. எனவே மக்கள் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எழும் இலக்கியங்களும் காலத்தின் போக்கிற்கிணங்க, மக்கள்தம் உடனடித் தேவையைப் பூர்த்தி செய்யுமுகமாக எழுகின்றது. காலச் சூழ்நிலையைப் புறக்கணித்து விட்டு கலையோ, இலக்கியமோகூட உருவாக முடியாது. அந்தந்தக்கால அனுபவங்களைக் கொண்டே கலையும் இலக்கியமும் உருவெடுக்க வேண்டும். சமுதாய நிலையினின்று முற்றும் மாறுபட்டு எந்தக் கருத்தோ கற்பனையோ சிந்தனையோ திட்டமோ உருவாகி வளரமுடியாது. கற்பனுவாத சோஷலிசம்பற்றி நூல் எழுதியவர்களும், பிளேட்டோவின் குடியரசும்கூட தாம் வாழ்ந்த சமுதாயத்தைச் சிந்தனையின் அடித்தளமாகக் கொண்டே ஏற்பட்டது.

சேக்கிழார் பெரிய புராணத்தைப் படைக்கும் போது அதனைப் பெருங்காப்பியமாகப் படைக்கவேண்டும் என்ற நோக்குடன் படைக்கவில்லை என்பதற்கு அக்காலச் சூழ்நிலை போதிய சான்றாகும். நிறைகளைவிடக் குறைகளே மனிதமனத்தை அதிகம் உறுத்தும். குறைகள் பெரிதாக விருந்தால் அவற்றைக் கண்டித்து நிவர்த்தி செய்யும் நோக்கில் நூல்கள் எழலாம். சமுதாயக் குறைகள் சமுதாயத்தின் மேல் அன்பும் அக்கறையும் கொண்டவனுமாகிய கலைஞனையோ எழுத்தாளனையோ அவை எவ்வளவு உறுத்தும் என்று சொல்ல வேண்டியதில்லை

பல்லவர்காலம் போலன்றி சமயப் பொறை நிரம்பிய சோழர் காலத்திற் சமண, பௌத்த மதங்கள் எழுச்சியுற்றன. இவர்களைக் கண்டிக்கும் முகமாகவோ அல்லது சைவத்தின் பெருமையையோ தத்துவச் சிறப்பையோ வெளிப்படுத்துவதற்காகவே சோழர் காலத்திலும் நாயக்கர் காலத்திலும் புராண இலக்கியங்கள் தோன்றின. இதிற் பெரிய புராணமே முன்னிற்கின்றது. இப்படியாக எழுந்த இந்நூலினைச் சிந்தாமணிக்குப் போட்டியாக எழுந்த காப்பியம் என்பர் ஒரு சாரார். அது எப்படிப் பொருத்தமாகும்.

சிந்தாமணியைப் பின்பற்றிப்போலும் சேக்கிழார் பெரிய புராணத்தினைப் பதின் மூன்று சருக்கமாகவும், விருத்தப் பாவாகவும் அமைத்த போதிலும், பெரிய புராணம் பாடிய நோக்கம் சிந்தாமணிக்குப் போட்டியாகவன்று. பல்லவர்காலத்துப் பக்தி இயக்கத்தை உணர்த்திய நாயன்மார் வரலாறு சோழர் காலத்திற் புராணமாக எழுந்தது. கி. பி. 897-ல் சமணரால் மகாபுராணம் எழுதப்பட்டதென்றும் அதில் அறுபத்து மூன்று சமணப் பெரியார் வரலாறுகூறும் மகா புராணத்தைப் பின்பற்றிய தென்றும் கூறுவர். இது நம்பத் தகுந்ததாகவும் உளது. ஏனெனில் இந்த இரு நூல்களிலேயேதான் ஒற்றுமையும் காணப்படுகின்றது. இதனால் காப்பிய நோக்குடன் படைக்கப்படவில்லை என்பதற்கு இந்நூலே சான்றாகும்.

இத்தன்மை வாய்ந்த பெரிய புராணம் பெருங்காப்பியப் பண்புகட்கமைய எழுதப்பட்டுள்ளதா? என்பது ஆராய்ந்து பார்க்க வேண்டிய விடயம். தண்டியாசிரியர் கூறியது போன்று ''பெருங்காப்பிய நிலை பேசுங்காலை, வாழ்த்து வணக்கம் வரு பொருளிவற்றி னொன் றேற்புடைத்தாக'' .. ......என்று தொடங்கி தன்னிகரில்லாத் தலைவனது இயல்புகளையும் பெருமைகளையும் கூறி, அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் பயப்பதாக முடிய வேண்டும். ஆனல் பெரிய புராணத்திற் காப்பிய இலக்கணப்படி பல குறைபாடுகள் தென்படுகின்றன. பெருங்காப்பிய இலக்கணங் கட்கமைய சேக்கிழார் இதனை அமைக்க முயன்றுள்ளார் போற் தெரிகின்றதெனினும், நூல் முழுவதையும் ஆராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றபோது பெருங்காப்பியப் பண்புகள் பொருந்தியது எனக் கூறுதல் பொருத்தமற்றதாகவே தெரிகின்றது.

பெருங்காப்பியம் போல முதலிலே நாட்டு வர்ணனையே கூறப்படுகின்றது. சோழ நாட்டை வர்ணித்துக் கொண்டு போகின்றார், பின்பு 'சொன்ன நாட்டிடை' என்று தொடங்கி திருவாரூரை நகராக வர்ணிக்கின்றார். இதனைப்பார்த்து நாட்டு நகர் வர்ணனையிருப்பதால் இதிற் பெருங் காப்பியப் பண்பு இருக்கின்றது என்று கூறுவார்கள். ஆனால் இராமாயணத்தில் இராமரது நாடாகிய அயோத்தியை வர்ணிப்பது போலன்றி, சோழநாடு, திருவாரூர், திருமுனைப்பாடி என்று தொடர்பற்று நாட்டு நகர் வர்ணனை இடம் பெற்றுள்ளது. திருத்தொண்டர் புராணம் பாடப்பட்டதும், சுந்தரர் திருமணம் புரிந்ததும் என்று திருவாரூர் சிறப்பாகக் கொள்ளப்பட்டது பொருத்தமற்றது. அவரது ஊராகிய திருமுனைப்பாடி ஒரு பாடலிலேதான் கூறப்படுகிறது. இதனால் பெருங்காப்பியப் பண்புகளைக் கொண்ட பெங்காப்பியம் என்று கூறல் பொருத்தமற்றதாகும்.

தன்னிகரில்லாத் தலைவனை உடையதும் பெருங்காப்பியத்தின் ஓர் அம்சமாகும். இங்கே சுந்தரர் பெருங்காப்பியத் தலைவர் எனக் கூறப்படுகின்றபோதும் அவரைப் பாடல் முழுவதிலுமே காணமுடிவதில்லை. ஒவ்வொரு சருக்க இறுதியிலிருக்கும் பாடல் மூலம் குறிப்பிட்டுள்ளாரே ஒழிய அவரைத் தலைவராகக் கொண்டதற்குச் சான்று அதிகம் காணமுடிவதில்லை. சுந்தரரை முதற் பகுதியிலும் பின்பு நடுப் பகுதியில் ஏயர்கோன் கலிக்காமர் புராணத்திலும் இறுதியில் வெள்ளானைச் சருக்கத்திலுமே கூறியுள்ளார். சுந்தரரைக் கதாநாயகன் என்று சொல்வதற்கு ஆதாரமாக தெய்வமறைத்திருத்தொண்டன் தம்பிரான் தோழர் என்ற அடியே காணப்படுகின்றது. இதில் உள்ள திருத்தொண்டர் என்பது சுந்தரரையே குறிக்கின்றது என்று திடமாகக் கூறமுடியாது. மேலும் பல நாயன்மார்களைப்பற்றிக் கூறியிருக்கின்ற படியால் யாரை அப்படிக் குறிப்பிட்டார் எனத் திடமாகக் கூறமுடியாது. கம்பராமாயணத்தில் இராமனைத் தன்கனிரில்லாத் தலைவனாகக் காட்டும் கம்பர் ஓரிடத்திலேனும் சோடைபோகவில்லை. சுந்தர காண்டம் தொடக்கம் ஏழு காண்டத்திலும் இராமனை நிறுத்திய இடமே கிடையாது. ஆனால் இங்கே கோடிட்டிருக்கும் கண்ணப்ப நாயனார் சரிதத்தையோ வேறு எந்த நாயனார் சரிதத்தினையோ படிக்கும் போது சுந்தரர் நினைவே அற்றுப் போய் விடுகின்றது. மற்றைய நாயன்மார்கள் மனதில் இடம் பிடித்துக் கொண்டு தன்னிகரில்லாத் தலைவனை மறக்கச் செய்கின்றது. எனவே இத்தகைய ஒரு பாத்திரத்தை நாம் தன்னிகரில்லாத் தலைவன் எனக் கூறுதல் சற்றும் பொருத்தமற்ற தொன்றாகும். எனவே பெருங்காப்பியம் என்று பெரிய புராணத்தைக் கொள்ளமுடியா. மேலும் சுந்தரர் வரலாற்றைக் கூறும் பாட்டுக்களின் தொகையைவிட சம்பந்தர் பற்றிப்பாடிய பாட்டுக்களின் தொகையே அதிகமாக உள்ளது. எனவே தொகையைக் கொண்டு சுந்தரரே தலைவன் எனக் கூற முடியவில்லை. ஆகவே சேக்கிழாரது பெரிய புராணத்தில் தன்னிகரில்லாத் தலைவனைக் காணமுடியவில்லை.

புலவன் தலைவனாகக் கொள்ளும் ஒருவனிடம் சிறந்த ஒழுக்கமுறை இருக்க வேண்டும். சிறந்த ஒழுக்கம் என்பது காவியத் தலைவனது சிறப்பான அம்சம். அது எங்கேயும் தளர்ந்து விடக்கூடாது. ஆனால் இயற்பகையார் தன் மனைவியை மாற்றானுக்குக் கொடுக்க முயல்வதும், சிறுத்தொண்ட நாயனார் பிள்ளையைக் கறி சமைத்துக் கொடுப்பதும் வற்புறுத்திக் கூறுவதாக இப் பெரிய புராணம் அமையவில்லை. எனவே இதனைப் பெருங்காப்பியம் என நாம் கருதமுடியாது. வரலாற்றையே கூறிக்கொண்டு செல்லும் ஓர் வரலாற்று நூலாகவும் ஆசிரியர் வரலாற்று அறிஞனாகவுமே தென்படுகின்றான் என்று திரு. வையாபுரிப்பிள்ளை அவர்கள் கூறுகிறார்கள்.


பெரிய புராணத்தில் அக்காலச் சூழ்நிலைக்கேற்ப காவியமரபு இடம்பெற்றுவிட்டதே ஒழிய உண்மையாகக் காவியப் பண்புகளைப் பெறவில்லை. மக்கள் மனதைக் கவரும் பொருட்டு காவிய மரபைப் புகுத்தி கற்பனை வர்ணனை உவமை முதலிய அணிகள் என்ற பாகுபாடுகள் இதற்கு உதாரணமாம். அக்கால வாழ்க்கைச் சம்பவங்களை நுணுக்கமாக பாடலிற் காட்டியுள்ளார். இவர் எடுத்துக் கொண்ட பக்தி நோக்கம் நிறைவேறி வெற்றியளித்துள்ளது. இது ஒரு சிறந்த புராண நூல் எனத் துணியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OUR STUDENTS



வர்த்தக வகுப்பில் ***At work in the commerce class***



மரவேலைக் கூடத்தில் ***At work in the work shop***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்பியும், சிலையும் !

பசுவூர் சு. மகாலிங்கசிவம்

கல்லை உடைத்துக்
கவனத்துடன் செதுக்கிக்
கொள்ளை எழில் உருவம்
கொடுத்துச் சிலை ஒன்றைச்
செல்லும் பல ஆண்டு
செல்ல, தொடர்ந்திட்ட
வல்ல உழைப்பால்
வடித்தான் ஒரு சிற்பி !

கண்ணின் இமைபோலக்
காவலனுமாய் அமைந்து
வண்ணம் பல சேர்த்து
மகிழ்ந்திட்டான் நாளெல்லாம் !

★ ★

சென்றது ஆண்டு சில;
சிற்பி வடித்த சிலை
நின்றது; ஏனோ
நிலையில் களையில்லை !

ஆரணங்காய் அமைந்த சிலை
அழகு சிதைந்திட்ட
காரணத்தை அறிந்தக்கால்
காவலன் இல்லை அங்கு !

நவரத்தினம் பதித்த
நல்லணிகள் ஒளிரவில்லை ;
'அவரை' இழந்தவள்போல்
அமைகிறது அதன் கோலம் !

★ ★

ஆண்டுகள் சில பின்பும்
அடுக்கடுக்காய் ஓடிற்று !
பூண்டுள்ளார் புத்துறுதி;
பொங்கி எழுகின்றார் !
கொள்ளை எழிற் சிலைக்குக்
கோல மெருகூட்டுதற்காய்
துள்ளி எழுந்து
தூயபணி தொடங்குகின்றார் !

பணிகள் நனி சிறந்து
பாங்காய் சிலை மீண்டும்
அணிகள் புதுமை பெற
அமைந்து சிறக்கட்டும் !

★ ★

எந்நாளும் உண்மை ஒன்று ;
இரவுபகல் துஞ்சாது
தன்பேர் முயற்சியினால்
சான்ற உருவமைத்து
அற்புதமாய்ச் செய்த
அணிசிலை உள்ளளவும்
பொற்புடனச் சிற்பியும் இப்
பூதலத்தில் வாழ்ந்திடுவான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோம் டி லைற்ஸ்

மின்சார ஒப்பந்தக்காரர்

மின்சார உபகரணங்கள் விற்பனையாளர்

உங்கள் கட்டிடங்களுக்கு மின்சார இணைப்புகள் செய்ய வேண்டுமா?

மின்சாரம் சம்பந்தப்பட்ட எதுவித பிரச்சனைகளுக்கும்

இருக்கவே இருக்கின்றார்கள்

## ஹோம் டி லைற்ஸ் ஸ்தாபனத்தார்

7, நவீன சந்தை,

ஆசுப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

உயர்ந்த ரக போட்டோக்கள்

தரம் மிக்க புளொக்குகள்



# ஞானம்ஸ் ஸ்ரூடியோ

யாழ்ப்பாணம்

தொலைபேசி - 7067


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்தோம்பும் நெடுந்தீவு

க. ச. சிவம்

நான்குபக்கமுங் கடலால் சூழப்பட்டதும் முப்பத்தைந்து சதுரமைல் விஸ்தீரணங் கொண்டதுமான ஓர் தீவகமே நெடுந்தீவாகும். வடமாகாணத்தின் தலைநகராய்ச் சீரும் சிறப்பும் பெற்று விளங்கும் யாழ்ப்பாணத்திலிருந்து 38 மைல் தொலைவிலும், ஊர்காவற்றுறையிலிருந்து 18 மைல் தூரத்திலும்; குறிகட்டுவானிலிருந்து 7 மைல் தொலைவிலும், நெடுந்தீவு அலை கடல் மத்தியில் ஒளிவிடும் முத்தாய் விளங்குகின்றது.

புராண காவியங்களிலும் இலக்கியங்களிலும் இத்தீவு அதிக தொடர்புடையதாக விளங்கியது என்றும், 'புட்கரம்' என்பது நெடுந்தீவையே குறிப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள் இராம - இராவண யுத்தத்தின் போது கொண்டுவரப்பட்ட சஞ்சீவி மலையிலிருந்து உதிர்ந்த கல், மண் குவியல்களின் ஒரு பகுதியே இத் தீவெனவும், மனிதன் நீடித்து வாழ்வதற்கேற்ற மூலிகைகள் நெடுந்தீவில் காணப்பட்டமையே இதற்குச் சான்றெனவும் சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இன்றும் பொற்சீந்தில்-கருணைவாகை - சாயணி போன்ற சிறந்த மூலிகை வகைகள் பெறக்கூடியதாயிருக்கிறது.

வெடியரசன் நெடுந்தீவில் இருந்து அரசாண்டதாகவும், கற்புக்கரசி கண்ணகியின் காற்சிலம்புக்கேற்ற மாணிக்கத்தைத் தேடிக் காவிரிப்பூம்பட்டினக் கடற்படைத் தளபதி மீகாமன் வந்ததாகவும்; இருவருக்கும் நெடுந்தீவின் வட மேற்குக் கடலில் மிகப்பெரிய கடல் யுத்தம் நடந்ததாக வெடியரசன் நாடகம் கூறுகிறது. நெடுந்தீவு மேற்குப் பகுதியில் வெடியரசன் அரசாட்சி செய்த கோட்டைகள் இடிபாடுற்ற நிலையில் காட்சியளிக்கின்றன.

நயினாதீவைக் கடந்து ஒரு மைல் தெற்கு நோக்கிச் சென்றால் ''மலையடி'' எனப்படும் இடமென கடலோடிகள் எமக்குக் காண்பிப்பர். இவ்விடம் சுழற்சியான நீரோட்டத்தையுடையது. வைகாசி - கார்த்திகை மாதங்களில் நெடுந்தீவுக் கடல் கொந்தளிப்பாக இருக்கும். கடலலைகள் 100 அடிக்கு மேலெழுந்து சரிகின்றன. ''பூதத்தம்பி விலாசம்'' என்னும் நூலில் இக்கடலை ''கொடிய கடல் தானிது நெடுந்தீவு தாண்டி... '' எனக் குறிப்பிடப்பட்டிருப்பதும் நோக்கற்பாலது.

போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றும்வரை நெடுந்தீவு பசுத்தீவென அழைக்கப்பட்டது. ஏராளமான ஆடுமாடுகள் வளர்க்கப்பட்டதாலே இப்பெயர் ஏற்பட்டது நரை மண்ணும் நீர் முருகைக் கற்பாறைகளும் காணப்படுவதால் மாடாடுகள் வளர்வதற்கேற்ற புல் வெளிகள் ஏற்பட ஏதுவாகிறது. சிறிது உவர்த்தன்மையுமிருந்தாலும் கசிவு ஏற்படாததால் புல் கருகுவதில்லை. அடி நீர் நிலமட்டம் உவர்த்தன்மை செறிந்திருப்பினும் மேல்நிலை நீர்மட்டம் உவர்த்தன்மை குறைவாயிருப்பதாலும் பனை, தென்னை வளர்ச்சிக்கு வாய்ப்பளிக்கிறது,

யாழ்ப்பாண அரசர் காலத்தில் நெடுந்தீவு ''பெரியதுறை'' என்னும் துறைமுகம் மூலமாக தமிழகத்துடன் நேரடி வர்த்தகத் தொடர்பு கொண்டு விளங்கியது. காஞ்சிபுரம் பொன்பற்றியூர் இருமரபுந் துய்ய தனிநாயகமுதலி தலைமையில் மக்கள் நெடுந்தீவில் குடியேறினர். நெடுந்தீவு மூலமாகத்தான் புங்குடுதீவு - அனலைதீவு முதலிய தீவுகட்கும் சென்று குடியேறினர் என்பது சரித்திர வல்லுநர் முடிபு. நெடுந்தீவிலிருந்து இராமேச்சுரத்திற்கு ஒவ்வொரு நாளும் உதய பூசைக்கு நாவாய் மூலம் பால் அனுப்பப்பட்டதாகக் கூறுவாருமுளர்.

போர்த்துக்கேயருக்குப்பின் ஒல்லாந்தர் இத்தீவைக் கைப்பற்றினர். குதிரைகள் வளர்ப்பதற்கேற்ற நன்னீரும் புல்வெளிகளும் இருந்ததால் தங்கள் சுயதேசமாகிய ஒல்லாந்திலுள்ள ''டெல்வ்ற்'' (Delft) புல்வெளியின் பெயரைச் சூட்டினர். இன்றும் ஆங்கிலத்தில் இப்பெயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வழங்கி வருகிறது. குதிரைலாயங்கள்-வைரக்கற்பாறைகளிடமாக அமைக்கப்பட்ட கிணறுகள்-தொட்டி வாய்க்கால்கள்-குதிரைகளுக்கு வைத்தியசாலைகள்-குதிரைகள் குளிப்பாட்டும் கேணிகள் முதலியவற்றை அமைத்தார்கள். அவற்றை இன்றும் காணலாம். அத்துடன் ஒல்லாந்தரின் காவற்கோட்டையும், கலங்கரை விளக்கமும் அவர்களின் கலைத்திறனுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன.

கடற்கரைக்கண்மையில் "பெல்லை" 'மணற்றுறை' 'கோட்டைக்காடு' பகுதிகளில் நன்னீர் காணப்படுகிறது. இத்தீவைச் சூழவுள்ள கடலில் உள்ளூர்-வெளியூர் மீனவர்கள் ஏராளமாக மீன்பிடித் தொழிலிலீடுபட்டுள்ளனர். நெடுந்தீவின் தென்கிழக்குப் பகுதியில் விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தின் மருங்கே ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முற்பட்ட ஆலமரம் காணப்படுகிறது. இம் மரத்தின் இலைகளை ஆடுமாடுகள் உண்பதுமில்லை. மரத்திலிருந்து பால் வடிவதுமில்லை. இவவாலயத்தை பாண்டவர்கள் தரிசித்துச் சென்றார்களென்று கர்ண பரம்பரையாகக் கூறப்படுகிறது. இக்கோவிலைச் சுற்றியுள்ள காணிகள் இன்றும் பாண்டவரின் நாமங்களுடன் விளங்குகின்றன.

நெடுந்தீவு மக்கள் பண்பு, அறிவு, ஆற்றல் மிக்கவர்; விருந்தினரை வரவேற்று அகமும் முகமும் மலர உபசரிப்பதில் வல்லவர். நன் செய்நிலங்களின்மையால் பெரும்பாலோர் அரசின் குடியேற்றத் திட்டங்களில் குடியேறியுள்ளனர். இத் தீவில் மட்டுந்தான் சங்கத்தமிழ் மாறுபடாமல் வழங்கி வருகின்றது. படுவான், எழுவான், நாம்பன், நாகு, பகிர், பாதம், மண்டி (நெருங்கி), அதர் (வாய்க்கால்), போன்றன சிலவாகும்.

சென்ற சில ஆண்டுகட்கு முன்பாக பருத்தியிலிருந்து பஞ்சு எடுத்து நூல் நூற்று குழித்தறி மூலம் நெசவு செய்து வந்தார்கள், இத் தொழிலே முன்பு குடிசைக் கைத்தொழிலாக இருந்து வந்தது. இன்று சில இடங்களில் நூல் நூற்கும் உபகரணங்கள் காணப்படுகின்றன. தற்போது போக்குவரத்து வசதியின்மையே இவ்வூர்மக்களைப் பெரிதும் பாதிக்கின்றது. அரசாங்க மோட்டார் வள்ளங்கள் அடிக்கடி பழுதடைகின்றன. வாரம் - மாதக் கணக்கில் இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் போக்கு வரவுத் தொடர்பற்று விடுகின்றன. எனினும் ஏனைய வசதிகள் ஒரு அளவில் கிடைத்துள்ளன. குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரே காரியாதிகாரியின் கீழ் இயங்குகிறது. மகா வித்தியாலயம் மாணவருக்குச் சிறந்த கல்வி வசதியளித்து வருகிறது.


நெடுந்தீவு உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் சிறந்த இடமாகும். அதிசயக் கிணறுகள் வெடியரசன் - டச்சுக்காரர் கோட்டைகள் - குதிரை லாயங்கள். நூற்றுக்கணக்காக குதிரைகள் அணிவகுத்துச் செல்லும் காட்சிகள் தன்னிச்சையாக மேயும் மந்தைக் கூட்டங்கள் - சங்கிலிக் கோர்வை போல் வரும் சைபீரிய தாராக்கள் மீனவர்களால் பிடிக்கப்பட்டு கடற்கரையில் குவிக்கப்பட்டிருக்டிம் பல்வகை மீன்களின் தோற்றங்கள் - சூரியோதய - அஸ்தமனக் காட்சிகள் முதலிய அரும் பெருங் காட்சிகளைக் காணும் வாய்ப்புகளை உல்லாசப் பிரயாணிகளுக்களித்தால் தீவின் வருமானம் பெருகும். நெடுந்தீவின் புகழ் உலகெங்கும் பரவுமென்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



***Students in the Music class***
சங்கீத வகுப்பில்



எமது பாடசாலையிலிருந்து 1962 ஆம் ஆண்டு
க. பொ. த. ப. (உயர்தர) வகுப்பில் திறமையுடன் சித்தியடைந்த முதல் மாணவன்
திரு. M. S. குமாரசாமி, B. A. அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு தோன்றினன் அன்றொரு நாள்

செ. மகேந்திரன்
[பழைய மாணவன், யா/மகாவித்தியாலயம், நெடுந்தீவு]

நீலத் திரைகடல் நால்கரையும் கவி
    நெஞ்சம் இனிக்கும் இசைபடிக்கும்
கோலக் கவிக்குத் தலையசைத்துப் பனை
    கூடிக் கரையெங்கும் ஆடிநிற்கும்
காலம் பொன்னென்பதை நன்றுணர்ந்தோர் மனை
    களிக்க உழைத்து இணைந்திருக்கும்
ஞாலம் புகழுமெம் தீவகத்தில் கல்வி
    ஞாயிறு தோன்றினன் அன்றொருநாள்.

வீரமும் செல்வமும் வீற்றிருக்கக் கல்வி
    விருந்து படைக்கக் கலமேறி
ஆரத் தழுவியெம் செல்வங்கட்கு நவ
    ஆங்கிலக் கல்வி அறிவுதரத்
தீரமுடன் திரை சூழ்ந்திருக்கும் நெடுந்
    தீவினைச் சேர்ந்தொரு பொன்னுளில்
பாரின் நிலமெனப் பார்த்ததிலே வளர்
    பள்ளி அமைத்துயர் வுற்றனரே!

நெட்ட பனைமரம் வெட்டிநல்லோர் பலர்
    நினைவு இனிக்கப் பயன்சிறக்க
கொட்டில் அமைத்துக் கிடுகுகட்டிப் பள்ளிக்
    கூடம் சமைத்துநம் மாணவர்கள்
வட்ட மிருந்து படிக்கவைத்தார் தினம்
    வளர்ந்து பெருகிற்று நல்லறிவு
எட்ட இருந்தும் கடல்கடந்தும் பயன்
    ஏற்றிட வந்தனர் எத்தனைபேர்.

கூட்டம் பெருகிட மாணவர்கள் கல்விக்
    கூடமும் நீண்டது ஓரிரண்டாய்
வாட்டம் கலைந்தது கல்வியிலும் நல்ல
    வளர்ச்சி தெரிந்தது ஆயிரமாய்
ஏட்டோடு நின்றது இல்லையிங்கே கலை
    எல்லாம் ஒளிர்ந்தது ரத்தினமாய்
பாட்டொடு நாட்டியம் நாடகமும் தமிழ்
    பண்பொடு சேர்ந்தது நித்தியமாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டில் உயர்ந்தது கட்டிடமாய் கல்வி
கூடம் சிறந்தது ஒற்றுமையால்
வெட்ட வெளிவளர் சோலையென நன்று
விளங்கி மிளிர்ந்தது ஊக்கமதால்
எட்டுத் திசையும் ஒளிபரப்பிப் புகழ்
ஏணியில் நின்றதின் கல்வியகம்
மட்டற்ற இன்பம் நிறைத்தறிஞர் கல்வி
மான்களை ஈன்றது தூய்மையகம்.

ஆழ்கடல் தாண்டிநல் ஆசிரியர் பலர்
அன்பொடு பண்பொடு அறிவுதந்தார்
வாழ்வொளிர் சைவம் கிறீஸ்தவமும் ஒன்றி
வளர்ந்து மகிழநற் கோவில் தந்தார்
ஏழ்நிலை இல்லையெம் தீவகத்தில் கல்வி
ஏற்றம் பிறந்தது நாளுக்குநாள்
தூள்படத் தீய்ந்த தறியாமை வெகு
துரித வளர்ச்சியில் விஞ்ஞானம்.

விந்தை உலகுயர் விஞ்ஞானம் தூய
விழியைக் கொடுத்தது தீவொளிர
சிந்தை சிறந்ததின் சிந்தனையால் பலர்
சீரிய வாழ்வினைப் பெற்றுயர
எந்தத் தடையும் தகர்த்தெறிந்தே அறிவு
என்றும் தழைத்திட ஆசிதந்தே
முந்திப் பிறந்தவெம் தாய்த்தமிழ் நாதமின்
முத்தமிட் டெம்மறி வேற்றியது.

சீரும் சிறப்பும் பெருகிவரக் கல்வி
சேர்த்த பெருமைகள் ஒன்றுயர
பேரும் புகழும் பிறநாட்டார் மொழிப்
பேச்சில் கலந்து மிதந்துவர
ஊரின் பெயரும் உயர்ந்தொளிர குரு
உன்னதர் கல்வி வழித்தொடர
பாரில் உயர்ந்ததெம் கல்லூரி "மிஷன்"
பள்ளியும் சேர்த்திணைத் தொன்றுக.

சித்திரம் கைப்பணி சங்கீதம் கலை
சேர்ந்தநல் நாட்டியம் விஞ்ஞானம்
நித்தம் இனிக்கும் விளையாட்டு தொழில்
நீதி உரைக்குமின் மெய்ஞ்ஞானம்
புத்தகக் கல்வியோ டெத்தனையோ தொழிற்
புத்துணர் வூட்டும் புகழறிவு
மெத்த வளரட்டும் தானீன்ற கல்வி
மேனிலை யாளரை ஒன்றிணைத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோரப்புழுதியின் கொடூர வேதனை

**யோ. கொன்ஸ்ரன்ஸ்**
*தலைமை ஆசிரியர்*

முன்னொருபோது நெடுந்தீவிலே அரண் அமைத்து விகாமன், வெடி அரசன் ஆதியோர் ஆட்சி புரிந்துள்ளார் என்றும் அவர்களின் அரிய படைப்பே கோட்டைகள், கிணறுகள், காலடிகள், ஏரிகள், குயிந்தா என்னும் வழிகாட்டி அழிந்து போன தூணுள்ள அம்மைநோய் ஆஸ்பத்திரி என்றும் கூறக் கேட்கின்றோம்.

அரசன் தம் ஆணையுட் பல பூதங்களை வைத்து வேலை கொண்டு அரிய பெரிய ஆக்கங்களை அமைத்தான் என்றும் அப்படியாக ஆக்கப்பட்ட ஏரிகளே இன்று களிகள் என்ற பெயருடன் மக்கட்குத் துன்பம் செய்து நிற்கின்றது. இந்த ஏரிகளின் அண்மையில் அப்போது விவசாயம் செய்யப்பட்டது என்பதற்குப் பல சான்றுகளும் உண்டு. மழை மிகக் குறைவர்கக் காணப்படும் இத்தீவில் மாரியில் வழிந்தோடி கடலிலே விழும் நீரைச் சேகரித்து வேளாண்மை செய்யவே இந்தக் கழிகள் அகழப்பட்டன என்று பல்லுவிழுந்த பழைய பாட்டன்கள் பகரக் கேட்கின்றோம். அன்று நல்நோக்குடன் தோண்டப்பட்ட இந்தக் கழிகளாகிய வெட்டுக்கழி, பெரிய கழி, பேய்க்கழி, வெல்லைக்கழி, செப்பட்டைக்கழி, இராமளாப்புக்கழி, இரவதைக் கழி, ஆகிய கழிகளையும் இன்னும் அநேக குளங்களையும் நெடுந்தீவிற் காணலாம்.

இக்கழிகள் உப்புச் செய்கைக்காகவும் தோண்டிக் கடல் நீரை உட் செலுத்தி இயற்கையாகவே உப்பு விளைச்சலைப் பெற்றும் இருக்கலாம். எனவே முன்பு உப்பு விழையும் இடங்களில் நெடுந்தீவும் ஒன்றுகக் கருதப்படும். கடல் நீரை உட்செல்லச் செய்யும் வாய்க்கால்களும் உண்டு. இவை நோளன் துரை என்பவரால் உண்டாக்கப்பட்டுள்ளது என்பதற்கு ஆதாரமாக இக்கழிகளுடன் தொடப்புடைய ஏழு வாய்க்கால்கள் நோளன் வாய்க்கால்கள் என்று பெயர் பெறுகின்றது.

இக்கழிகள் தற்போது ஆழம் குறைந்தவையாகவும் பரந்த விஸ்தீரணம் கொண்டனவாகவும் இருக்கின்றன. நிலமே வெண் கழிப் பூமியாகும். மாரியில் இக்கழிகளில் தேம்பி நின்று சித்திரை மாதத்துடன் சிறிதுமில்லாது வற்றிவிடச் சோழகக்காற்றுடன் அந்தக் கழியிலுள்ள உவர்மண் மண்மழையாகப்பெற்று அதன் அண்மையில் உள்ள வீடுவாசல், காணி, பூமி, மரஞ்செடி கொடிகளில்பட்டு அவை அப்படியே கருகி விடுகின்றன. பொதுவாகச் சொன்னால் வீட்டிற் பூட்டி வைத்திருக்கும் பெட்டகத்துள்ளும் இந்தப் புழுதி உறைந்து யாவற்றையும் ஒரே நெர்டியில் உக்கச் செய்தும் விடுகின்றது. எனவே இதன் அண்மையுலுள்ள மக்கள் இன்னுளிற்படும் அல்லோல கல்லோல வாழ்வையிட்டு வர்ணிக்க முடியுமா? அக்காலங்களில் கடல் நீரையாகுதல் உட்புகச்செய்து மண்மழையின் வாதையைப் போக்கி விடுவார்களா என்று அங்கலாய்க்கின்றனர். அண்மையில் உள்ளோர் கோரப் புழுதியே கொடூரப் பிசாசே எனப் பிசத்துகின்றனர்.

இந்த உவர் ஏரியாம் இக்கழிகளால் எவ்வித பயனுமில்லை என்பது வெள்ளிடமலை. இந்தக் கழிகளினுல் மக்கள் வாதை நீங்கிப் பயன் அடைய வேண்டுமானுல் ஒன்றுக்கும் உதவாத இக்கழிகளை விவசாயத் திட்டத்தின்கீழ் நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்தாலன்றி இக் குளங்களினுல் இந் நாட்டிற்கு எள்ளளவு பயனுமில்லை. எனவே இந்தக் கழிகளை இன்னும் சுமார் 3 அடி ஆழத்தில் பதித்து வெட்டி, வெட்டப்படும் மண்ணைக் கழிகளின் ஓரங்களிற் பரப்பி அவற்றினுற் கழிகளின் அண்மையில் மக்கள் பாதிக்கப்படாவண்ணம் கார்த்தல் வேண்டும். குடிமனையின் நீர் உட்சென்று கழிகளை நிரப்ப அவ்விடங்களின் அணைகளில் வாய்க்கால் விடுவதினுல் மக்களின் நிலம் பாதுகாக்கப்படுவதுடன் இந்த நிரப்பப்டும் நீர் காலக்கெதியில் நன்னீர்த்தேக்கமாகி விவசாய விருத்திக்கும் உவப்புடையதாகும் என்பதில் எள்ளளவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகமே இல்லை. இங்கே கடல் நீரை உட்புகாமல் நோளன் வாய்க்காலை அடைத்து துருசுகள் பூட்டப்படவேண்டும். கழிகள் நிரம்பி வழியின் அத்துருசுகள் மூலம் மேலதிக நீர் கடலில் போய்ப் பாய வழி கோலுதலும் வேண்டும். தற்போது இக்கழி நிலத்தில் சில வருடங்களில் சில நாட்கள் மாத்திரம் கடல் நீருடன் சிறிய மீன்கள் வந்து சேரும் இவை வற்றிப்போகும் காலத்திற் பிடிக்கப்படுகின்றனவேயன்றி இந்தக் கழிகளினால் ஆடு மாடுகளோ, குதிரைகளோ, மக்களோ எது வித பயனும் அடைவதேயில்லை.

இக்கழிகளை ஆளமாக்கி நன்னீரைத் தேம்பச் செய்து கடல்நீர் கலக்காது இருக்கச் செய்தால் நிச்சயமாகவே இதன் அண்மையிலுள்ள நிலங்களில் சேனைச் செய்கையோ, அல்லது விவசாய விருத்தி தானும் செய்யலாம் என்பது வெள்ளிடைமலை. ஏனெனில் இந்தக்கழிகளின் அண்மையில் காணப்படும் குன்றுகளாகிய குளங்களில் நன்னீர் தேம்பப்பட அவற்றின் பக்கங்களிலுள்ள நிலங்களில் இலங்கையில் எங்கும் காணப்படாத வகையில் வெண்காயம், மிளகாய், தக்காளி, வெண்டி, கிழங்கு என்பன அபரிமிதமாத விழைவு பெறுகின்றது. இது இச் சிறுகால மழையையும் இக் குழங்களின் நன்னீரையும் நம்பிச் செய்யப்படுவதால் சித்திரையுடன் வற்றித் தண்ணீர் இல்லாமல் போய் விடுவதால் அதிக பயனை அடையவிடாமல் போய் விடுகிறது. இந்தக் கழிகளின் அண்மையிலுள்ள குழங்களை நம்பியும், மழையை நம்பியும் பயனை அடைவோர் இந்த ஏரிகளின் அன்மையிலுள்ள நிலத்திலே பயனடைவதால் விவசாயத்தில் ஈடுபாடுடைய இந்த அரசாங்கம் சிறு நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் இக்கழிகளை ஆழமாக்கினால் இதனால் இவ்வூர் பலமக்கள் விவசாயம் நாடி குடியேற்றத் திட்டங்கட்குச் செல்ல வேண்டிய அவசியமே இல்லை.

இந்நாட்டிலுள்ள மக்கள் மிகவும் முயற்சி உடையவர்கள் என்பதும் சொல்ல வேண்டியதே இல்லை. அப்படிப்பட்ட மக்களை முயற்சியடையச் செய்ய இந்தக் கழிகளை ஆழமாக்கி நன்னீரைத் தேம்பச் செய்து விவசாய விருத்தியை உண்டுபண்ணுதல் சாலச்சிறந்த செயலாகும். நன்னீர் எம் நாட்டில் உண்டேல் நம் நாட்டிற்கு நிகர் எம் நாடேதான். ஆகவே வேறு நாடுகட்கு அலைய வேண்டிய நிலையும் ஏற்படா.

ஆகவே இக்கழிகளின் கோரப்பகுதியின் கொடூர வேதனையை நீக்கி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அந் நாள் எந்நாளோ !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க நம் கலாசாலை

ச. சுப்பிரமணியம்.

1. பூவிலுயர் வளமருவு நெடுந்தீவு மத்திதனில்
பொலிந்த சாலை
காவிலுயர் தோட்டமெலாம் நிறைந் தொழுகிக்
கவின் பெறவே ஓங்கும் சாலை
தேவியெனும் நாமகளார் நோக்கமுற நலந்திழும்
தெய்வச் சாலை
நாவில் மக்களெல்லோரும் நல்லாசி கூறிடவே
நயந்து வாழ்க.

2. சீர் பெறவேயென்று மக்கள் தினம் தினமாய் ஏங்கி
நின்ற செய்கையாலே
நீர் பெறவே யுறத் தோன்றி நெடுந்தீவுச்
சிறுவர் குழாம் நிறைவே செய்த
ஆர்கலி சூழிலங்கையிலு மவனியிலுமிது வேதோ
புதுமை யென்ன
ஏர்பெறவே யிலங்குமகா வித்தியாலயமே நீ
என்றும் வாழ்க.

3. களங்கமிலாக் காரிகைபோல் உலகமெலாம்
களிப்புறவுன் கண் திறந்தே
விளங்குமகா வித்தியாலயமாய்ப் பரிணமித்து
மாணவர்க்கோர் விளக்காகி
உளங் கிளர்ந்து பாலரெலாமுயர் வெய்தவருள்சுரந்த
உண்மைத்தாயே
வளம் கொழித்து நித நிதமும் வாழ்கநீயென்று
மக்கள் வாழ்த்திேனோமே

4. அருள் சுரந்த பெருமக்கள் ஆண்டாண்டு
பலகாலமாசானாகி
மருள்நீக்கி மாணவர்க்கு சற்கருமம் பலவெய்த
வாழ்த்தி விட்டார்
திருவருளின்துணை கொண்டேயின்று சின்னத்
தம்பியெனும் சீரின்செல்வன்
குருவருளின்துணை கொண்டு நடத்துதிறத்
தன்மையது நீடுவாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''குற்றத்தை மறைப்பதற்கு ஒருவனுடைய புத்திக்கூர்மையை உபயோகப்படுத்தலாமென்று தெரிந்தது. உடனே புத்திக் கூர்மைமீதே எனக்கு அருவருப்பு உண்டாகியது''

நெடுந்தீவு மகாவித்தியாலயம் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடும் இவ் வேளையில் எமது நல் வாழ்த்துக்கள்

# S. K. செல்லையா

10-ம் வட்டாரம்
புங்குடுதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு காட்டியவர்


## எஸ். பி. அந்தோனிப்பிள்ளை

ஆசிரியர் நெ. ம. வி.


ஏறக்குறைய முப்பத்தைந்து சதுர மைல் பரப்புடைய நெடுந்தீவில் மக்கள் வசிக்கும் பகுதி குறைவானதே. அதைவிட மிகுதி நிலங்கள் புன் செய் நிலங்களாகவும் உவர் நீர்க் குளங்களாகவும் (கழிகள்) மேச்சற்றரைகளாகவும் இருக்கின்றன. புன் செய் நிலங்களிற் பெரும்பகுதி கற்றரைகளாகவும் தூய நன்னீரற்ற தரையாகவும் இருந்தபோதும், அவற்றைப் பயிர்செய் நிலங்களாக்க மக்கள் துணிந்தனர். இது இலகுவாகச் செய்ய முடியாத காரியமாயினும் எமது முன்னோர் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவராகையால் இந்நிலங்களிற் சிறு தானியங்களான வரகு, மொண்டி, சாமை, எனும் உணவுப் பயிர்களைப் பயிரிட முனைந்தனர். பயிர்களைக் கட்டாக்காலியாள விலங்குகளிடம் இருந்து பாதுகாக்க உறுதியான வேலிகளை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பயிர் நிலங்களில் தரைக்குமேலே உயர்ந்து தெரியும் கற்களைத் தோண்டி, அவற்றை ஒன்றின்மேலொன்றாக அடுக்குவதன் மூலம் வேலிகளை அமைத்தனர். இவ்விதம் அமைக்கப்பட்ட தோட்டங்கள் 4-20 ஏக்கர் வரை பரப்புடையனவாக இருந்ததால் வேலி அமைப்பதற்குப் பல்லாயிரக்கணக்கான கற்கள் பல அளவுகளிற் தேவைப்பட்டன. இவ் வேலையை ஒருவரோ இருவரோ செய்ய முடியாது. கண்டனர் அநுபவ ரீதியாகக் கூட்டு முயற்சியை. பலர் சேர்ந்து கூட்டாக ஒவ்வொரு தோட்டங்களை அமைத்தனர். தோட்டங்களை அமைத்தவர்களே பயிர் செய்து வந்தனர். தோட்டங்கள் அமைக்கப்பட்ட பின்பும் பயிர் செய்வதற்கு வேறுயாரும் விரும்பிக்கேட்கும் போது சேர்த்துக் கொள்வர்.

பிற்பட்டகாலத்திலும் ஏற்கனவேயமைக்கப்பட்ட தோட்டங்களில் ஒருவர் இருவராகப் பயிர் செய்வதில்லை. பலர் சேர்ந்தே செய்து வருவது வழக்கம். இதுவே கூட்டு வேளாண்மை 'எனப்பட்டது. இத்தகைய அமைப்புத்தான் இக்காலம் பொது உடமை நாடுகளில் வளர்ந்து வரும் கூட்டுப் பண்ணை முறைகள். மிகவும் பெரிய தோட்டங்களிற் பயிர் செய்யும்போது கூட்டு வேளாண்மைகள் பல சேர்ந்து இயங்குவதும் உண்டு. இதைக் கூட்டு வேளாண்மை என்றழைப்பர். இதன் வளர்ச்சியே இப்போதுள்ள கூட்டுறவுச் சமாசங்கள். கூட்டுவேளாண்மையில் பலர் சேர்ந்து ஒருவர் பின்ஒருவராக ஏர்உழுது செல்லும்போது மிக அழகான காட்சியாக இருக்கும். முன்னே உழுது செல்பவர் (முன்னேரி உழவன்) தேர்ந்த அனுபவம் உடையவர். அவரின் பின்னே உழுது செல்பவர்கள் அநுபவம் குறைந்தவராக இருப்பினும் முன் செல்பவரின் சால்வழியருகே உழுது செல்வதால் கெதியில் பயிலக்கூடிய வாய்ப்புண்டு. இக்கூட்டு முயற்சிக்கு நடைமுறை விதிகள் ஒன்றுமில்லை. ஆனால் சில சம்பிரதாயங்கள் உண்டு. தகுந்த காரணத்தினால் ஒருவரோ இருவரோ வேலைக்கு வராவிட்டாலும் மற்றவர்கள் குறைகூறுவது கிடையாது. சில வேளை பயிர் அறுவடை செய்யும் வரையும் சுகவீனத்தினால் ஒருவர் வராவிட்டால் பங்குத்தானியம் அவரது வீட்டுக்குக் கொண்டு சென்று சேர்க்கப்படும். சிறு தானிய வேளாண்மை செய்வோரிடையே தொழில் சம்பந்தமான கருத்து வேற்றுமைகள் இருக்கக்கூடாது என்பதுவும் ஒரு சம்பிரதாயம். ஒருவரது சொந்தக் காணியில் கூட்டுமுறையிற் பயிர் செய்யும் போது அதற்குக் காணிச் சொந்தக்காரர் நிலக்குத்தகை பெறுவது இல்லை. புதிய வேலிகள் அமைக்க வேண்டி இருந்தாலும் எதுவித நிபந்தனையுமின்றி அமைத்தபின்புதான் பயிர் செய்வர்.

இத்தகைய வழக்கங்களில் இருந்து கூட்டு வேளாண்மை செய்யும்முறை நெடுந்தீவில் ஏற்பட்டது. ஒருவருக்கு நன்கு வேலி அமைக்கப்பட்ட சொந்தக் காணி இருந்தாலும் அவர் தனியாகச் சிறிய அளவில் பயிர் செய்யமுடியுமாயினும் இன்னும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலரைச்சேர்த்தே செய்வர். சிலரிடம் கலப்பைகள் மாடுகள் சூடு மிதிக்கும் பாய்கள் (களப்பாய்) அதிகமாக இருக்கும். சிலரிடம் ஒன்றோ இரண்டோ இருக்கும். அல்லது ஒன்றும் பாவனைக்கு உதவாமல் இருக்கும். அல்லது குறைவாக இருக்கும். மேற்கூறிய இருவரும் கூட்டுமுறையிற் சேர்ந்து விட்டால் இருவருக்கும் சமனான பங்கே கிடைக்கும். கமவேலைகளிற் செய்து கொடுக்கும் எந்த உதவிகட்கும் கூலியாகப் பணம் பெறுவது இல்லை. தேவைஏற்படும் போது உதவிக்கு உதவி செய்வதுதான் வழமை. இத்தகைய உயர்ந்த பண்பாடுகள் வேறு இடங்களிற் காண்பது அரிது.

உணவுக்காகப் பயிர் செய்யும் காலம் மாறி பிற நாடுகளிற் பணத்துக்காக நெல் வேளாண்மை செய்யும் இக்காலத்திலும் மேலே கூறப்பட்ட உயர்ந்த வழக்கங்கள் சில இருந்தே வருகின்றன. நெடுந்தீவில் இப்போதும் சிறுதானியங்கள் செய்வோரிடையே இவ் வழக்கங்களைக் காணலாம். இத்தகைய உயர்ந்த வழக்கங்களும் கூட்டுறவுத் தொழில்களும் தொன்று தொட்டே இருந்து வந்ததால் சாதிசமயத் தாக்கங்கள் இங்கில்லை.

இரண்டாம் உலக மகாயுத்தம் ஏற்பட்டபோது இலங்கையிலே குறைவாகக் கிடைத்த பாவனைப் பொட்களைப் பலருக்கும் கிடைக்கச் செய்யும் நோக்கமாகவே கூட்டுறவு இயக்கங்கள் தோன்றின. 1837 இல் பிலடெல்பியாவிலும் 1886 இல் சிக்காக்கோவிலும் தோன்றிய கூட்டுறவு இயக்கம் (தொழிற் சங்க இயக்கம்) இலங்கையில் அடுத்த நூற்றுண்டிலேயே அடியெடுத்து வைத்தபோதும் எமது நெடுந்தீவில் தொன்றுதொட்டே இயங்கி வந்திருக்கிறது. மறு இடங்களில் ஒரு குறித்த நோக்கை அடைவதற்காகவே கூட்டுறவு இயக்கங்கள் தோன்றின. ஆனல் இங்கோ பயிர் செய்கை தொடங்கிய காலத்திலேயே சகலரும் பசியும் பிணியுமின்றி வாழத்தக்க தொழிலும் பயனும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்திஞலே தோன்றியது.


நெடுந்தீவின்

ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள்

மின்சார ஒளியமைப்பாளர்கள்

இலங்கைப் புகையிலை, பீடி, சிகறட்,

யானைமார்க் சோடா என்பவற்றின்

ஏக விநியோகஸ்தர்கள்

வெங்காயக்கூடு — கொள்வனவு — விற்பனையாளர்கள்

இன்றே விஜயஞ் செய்யுங்கள்

# சந்தைக் கடை

நெடுந்திவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THE MAHAVIDYALAYA SPORTS MEET 1972



Principal, welcoming guests at the annual inter house Sports meet.



Chief Guest replies

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகக் கல்வியின் முக்கியத்துவம்

சு. சிவநாயகமூர்த்தி
*(வர்த்தக ஆசிரியர்)*

இன்றைய உலகில் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விருப்பது வர்த்தகமே. வர்த்தகமில்லாத நாடுகளே இல்லையென்று கூறலாம். ஒருநாடு தான் உற்பத்தி செய்த பொருட்களை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதும் தனக்குத் தேவையான பொருட்களை மற்றைய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதும் சர்வ சாதாரணமான நடவடிக்கைகளாகும். இதன் காரணமாக நாடுகளுக்கிடையிலே பல வர்த்தக ஒப்பந்தங்களும் இடம் பெறுகின்றன. வர்த்தக ஒப்பந்தங்களின் மூலம் பல நாடுகள் ஒன்றேடொன்று சிநேக பூர்வத் தொடர்புகளை ஏற்படுத்துவதுமன்றிப் பொருளாதார, கல்வி பாதுகாப்புத் தொடர்புகளையுமே ஏற்படுத்திக் கொள்ளுகின்றன. வர்த்தகமே புதிய நாடுகளைக் கண்டு பிடிப்பதற்கும், மேலைத்தேசத்தவர்கள் தமது சமயம் கலாச்சாரம், மொழி, அரசியல் என்பவற்றைக் கீழைத்தேசங்களில், ஸ்தாபிப்பதற்கும் காரணங்களாயிருந்தனவென்பதைச் சரித்திரங்களே எமக்குக் கூறிநிற்கின்றன.

வர்த்தக மென்று சொல்லும் பொழுது வியாபாரம் என்பது மட்டும் தான் அதன் பொருளல்ல. வியாபாரத்தோடு சம்பந்தப்பட்ட நாட்டின் பொருளாதாரத்திற்கு உதவியளிக்கின்ற ஸ்தாபனங்கள் நடவடிக்கைகளெல்லாம் சேர்ந்தே வர்த்தகம் எனப்படும். சுருங்கக் கூறின் வர்த்தகமும் அதற்கான உதவிகளுமே வர்த்தகமெனப்படும். உதவிகளென்று சொல்லும் பொழுது போக்குவரவு சாதனங்கள் வங்கிகள், நட்டவீட்டுக் கம்பனிகள், பண்டகசாலைகள், விளம்பர சாதனங்கள் வியாபாரப் பிரதி கர்த்தாக்கள் என்பனவாகும்.

இன்றைய உலகில் விஞ்ஞான அறிவு ஒரு மாணவனுக்கு எவ்வளவு முக்கியமோ அதைவிடப் பன்மடங்கு வர்த்தக அறிவும் ஒருவனுக்குத் தேவைப்படுகிறது. ஒரு சிறுவன் நடமாடத் தொடங்கி மடியும் வரை அவன் நேரடியாகவோ மறைமுகமாகவோ வர்த்தகத்தின் நடவடிக்கைகளுக்குட்படுத்தப்படுகிறுன். சிறுவனுக விருக்கும் பொழுது அவன்தனக்குத் தேவையான தீன்பண்டங்களைப் பாடசாலைப் பொருட்களை கடைகளுக்குச் சென்று தானே வாங்கிக் கொள்ளுகிறுன். வளர்ந்ததும் தனக்குத் தேவையான பொருட்களை மட்டுமன்றித் தன்தாய்தந்தையருக்குத் தேவையான பொருட்களையும் வாங்கவேண்டியவனுகவும் சில சந்தர்ப்பங்களில் தனதோ அல்லது தன் பெற்றுர்களினதோ பொருட்களை விற்கவேண்டியவனுமாகிறுன். தனியாக ஒரு இடத்திலிருந்து இன்னேரிடத்திற்குப் பிரயாணஞ் செய்ய வேண்டியவனுகிறுன். பொருட்களின் விலைகள், எங்கே மலிவாகப் பெறலாம், மாற்றுப் பொருட்கள் எவை? என்பன வற்றை யெல்லாம் அவன் அறிய வேண்டிய வனுகிறுன்.

பணத்தைப் பெற்றதும் அதை எவ்வாறு பயன்படுத்தலாம், பாதுகாக்கலாம், சிக்கன வழிகளில் எப்படிச் செலவு செய்யலாம் என்றெல்லாம் அவன் அறிய வேண்டியவனுகிறுன். வர்த்தகஸ்தாபனங்களுக்குச் செல்லவேண்டியவனுகிறுன், விளம்பர சாதனங்களை அவதானிக்கிறுன். பொருட்களை உற்பத்தி செய்வதுமட்டுமன்றி அவற்றை எவ்வாறு சந்தைப்படுத்தலாமென்றெல்லாம் சிந்திக்கிறுன். இவ்வாறு ஒருவனுக்கு வர்த்தக அறிவு தேவைப்பட்டுக் கொண்டேயிருக்கின்றது. இதனுல் ஒருவனுக்குக் கட்டாயம் வர்த்தக அறிவு முக்கியமாகும். அமெரிக்கா, இங்கிலாந்து சீனு, யப்பான், ருஷ்யா போன்ற நாடுகளை நாம் எடுத்துக்கொண்டால் அந்த நாடுகளெல்லாம் பொருளாதாரத்தில் முன்னணியில் நிற்கின்றன. அந்தநாடுகளிலெல்லாம் பல ஆண்டுகளுக்கு முன்னரே வர்த்தகக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறுர்கள். இதனுல் அந்தநாடுகளில் சிறந்த பொருளாதார நிபுணர்கள், தொழில் அதிபர்கள், கணக்காளர்கள், திறமையான நிர்வாகிகள் உருவாக வழிவகுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாட்டைநாம் நோக்கிப்பார்ப் போமேயானால் எமது நாடு ஒரு விவசாய நாடாக விருந்தபொழுதிலும் மூன்றில் இரண்டு பங்கு வருமானத்தை வர்த்தகமே எமக்குக் கொடுக்கிறது. எமது நாட்டில் அந்நியர் ஆட்சிக்காலத்தில் தொழிற் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இதனால் அநேக இளைஞர்கள் வேலையில்லாத்திண்டாட்டத்திற்குள்ளாயினர். வர்த்தகத்துறைகளுக்கும் ஏற்ற திறமையான நிர்வாகிகளையோ, தொழிலாளர்களையே உருவாக்கவும் முடியாமலிருந்தது.

இன்று இந்நிலை மாறி எம்நாட்டின் கல்வித்துறையிலும் பலமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன்பயனாக தொழிற் கல்விகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. வர்த்தகக் கல்வியையும் பாடசாலைகள் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை போதிக்க ஆவன செய்யப்பட்டுள்ளது. வர்த்தகக்கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பல தொழில்வாய்ப்புகளிருக்கின்றன. எம்நாட்டின் சிறந்த பொருளாதார நிபுணர்களாகவும் உயர்தரக் கணக்காளர்களாகவும், தட்டச்சாளர்களாகவும், தொழில்நிறுவனங்கள் கூட்டுஸ்தாபனங்கள், கூட்டுறவுஸ்தாபனங்கள், என்பவற்றில் நிர்வாகிகளர்கவும், தொழில் அதிபர்களாகவும் லிகிதர்களாகவும் வர வாய்ப்புக்களிருக்கின்றன.

ஆகவே இன்று இலங்கையில் வர்த்தகக் கல்வியைச் சகலபாடசாலைகளிலும் கற்பிக்க வேண்டியது அவசியமாகின்றது.

எமது நாட்டில் குறுகிய காலத்தில் வர்த்தகப் பாடங்கள் பாடசாலைகளில் போதிக்கத் தொடங்கியதால் எல்லாப் பாடசாலைகளிலும் உடனடியாக வர்த்தகப் பாடங்களைப் போதிப்பதற்குப் போதுமான ஆசிரியர்கள் உபகரணங்கள் பற்றாக் குறையாகவேயிருக்கின்றது. இதனால் வசதி குறைந்த இடங்களிலுள்ள பாடசாலைகளிலும், வசதிகள் நிறைந்த நகரப் பாடசாலைகள் சிலவற்றிலுமே வர்த்தகக்கல்வி தற்பொழுது கற்பிக்கப்பட்டு வருகிறது. எமது பாடசாலையிலும் 1971 ஆம் ஆண்டு தொடக்கம் வர்த்தகக் கல்வி போதிக்கப் பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.


இன்னும் ஆசிரியர்கள் போதியளவு கிடைக்கும் நிலையைக்கொண்டு படிப்படியாக எல்லாப் பாடசாலைகளிலும் வர்த்தகக்கல்வி போதிப்பதற்குக் கல்விப்பகுதியார் ஒழுங்குகள் செய்து வருகின்றனர். வர்த்தக பாடங்களின் முக்கியத்தையுணர்ந்தே புதிய கல்வித்திட்டத்திலும் 1972 இல் இருந்து 6 ஆம் வகுப்பில் தொழில் நெறிப்பாடங்களில் ஒன்றாக வர்த்தகத்தையும் ஆக்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


JAYAPAKAN & Co

Prop : C. Ampikaipakan

JEWELLERS & PAWN BROKERS

225, K. K. S. ROAD, JAFFNA.



ஜெயபாகன் அன் கோ

கே. கே. எஸ். றேட். யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு நெடுந்தீவுக்கே சொந்தம்

நா. இலட்சுமணராசா

(பழைய மாணவர்)

தமிழகத்திற்கும் நெடுந்தீவுக்கும் மத்தியில் அமைந்துள்ள அந்தச் சிறியதீவகம் எவ்வித ஜீவராசிகளும் வாழமுடியாத ஒரு பாலைவனம். ஆயினும் அரசியல் அரங்கில் அது ஒரு முக்கியத்துவம் பெற்ற திடல். ஒரு காலத்தில் இரு நாடுகளின் நட்புறவுகள் பலப்படவோ அன்றிச் சிதைவுறவோ அந்தத் திடலே காரணமாகலாம். கருமண்கொண்ட தீப்பாறைப் பிராந்தியமான கச்சதீவில் எண்ணை வளமுண்டு என்பது சமீபத்தில் ஆராய்ச்சிகளினின்று புலனாகின்றது. எனவே இலங்கை இந்திய அரசுகளுக்கிடையிலான சர்ச்சைகள் அரசியல் நிலைமைகளையிட்டு எதிர்காலத்தில் உக்கிரமடையவும் கூடும். இந்நிலையில் மேற்படி தீவகம் யாருக்குச் சொந்தம் என்பதை ஆராய்தல் பொருத்தமானதும் அவசியமானதும் கூட.

''கச்சதீவு தமிழ் நாட்டிற்கே சொந்தம்--இந்தியாவுக்கே சொந்தம் அதன்மீது உரிமை கொண்டாட இலங்கைக்கு எவ்வித தொடர்பும் கிடையாது'' தமிழக சட்ட மன்றத்தில் எழுந்த கேள்விக்குப் பதிலளிக்கையில் தமிழக முதல்வர் கருணாநிதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதற்குப் போதிய ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் ஒரு குழுவை அனுப்புவதன் மூலம் மத்திய அரசு இந்த ஆதாரங்களைப் பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்த அவர் இலங்கை வலுக்கட்டாயமாகக் கச்சதீவை வைத்துள்ளது என்னும் குற்றச்சாட்டையும் மறுத்துரைத்துள்ளார். முதல்வரின் கருத்துக்கேற்ப மாநில அரசுச் செய்தி ஏடான தமிழரசு தனது பெப். 16 ம் திகதி இதழில் பின்வருமாறு செய்தி வெளியிட்டிருந்தது. ''இராமேஸ்வரத்திற்கு வடக்கில் 10மைல் தூரத்தில் கச்சதீவு இருக்கின்றது. இதன் விஸ்தீரணம் 285 ஏக்கர் (மொத்தம்) அதன் சர்வதேச நம்பர் 1250. இந்தத் தீவு இராமேஸ்வரம் கர்ணத்தின் ஆட்சி வரம்புக்கு உட்பட்டது. தமிழ்நாட்டில் ஜமீந்தார் முறை 1948 ல் ஒழிக்கப்பட்ட பின்னர் இத்தீவு தமிழக அரசின் ஆட்சிக்குட்பட்டதாயிற்று. அங்கு ஒரு கிறிஸ்தவ தேவாலயம் உளது. வாரத்துக்கு ஒரு முறை அங்கு நடக்கும் பூசைக்கு இராமேஸ்வரம் அருகிலுள்ள தங்கச்சி மடம் என்ற ஊரிலிருந்து ஒரு பாதிரியார் படகிற் சென்று வருகிறார். அங்கு மீனவர்கள் சென்று மீன்பிடித்து வருவது ஒரு தொழிலாக இருந்து வருகின்றது. இராமநாதபுரம் தீவுகள் நிறைந்த மாவட்டம் என்னும் தலைப்பில் இவ்வாறு அது எழுதியுள்ளது.

மேற்படி இதழில் எழுதப்பட்டுள்ளதைப்போன்று சட்டசபையிலும் புனித அந்தோனியார் ஆலய உற்சவத்தின்போது இந்தியக் கத்தோலிக்க குருமார் சென்று பூஜைகள் நடாத்துவதாகவும் முதல்வர் கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். இது முற்றிலும் தவறாகும். கச்சதீவு யாருக்குரியது என்பதுபற்றிய சர்ச்சை எழுந்த நாட்தொட்டு இற்றைவரை இலங்கை இந்தியக் குருமார்கள் எவருமே உற்சவத்தில் கலந்து பூஜை நடத்தியது கிடையாது. இம்முறை நடைபெற்ற திருவிழாவில் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த ஒரு குருவும் சங் சகோதரிகள் இருவரும் புனித அதோனியாரை வழிபட்டுச் சென்றனரேயன்றிக் கலைஞர் கருணாநிதி கூறுவது போன்று அவர்கள் பூஜை நடாத்தினர் என்பது முற்றிலும் தவறானது. நெடுந்தீவைச் சேர்ந்த பல மீனவர்கள் அங்கு தங்கித் தொழில் செய்கின்றனர். தமிழரசு ஏடு குறிப்பிடுவது போன்று இந்தியக் குருமார்கள் வாரத்தில் ஒருமுறை அங்கு வந்து பூஜைநடாத்துவதில்லை யென அவர்கள் கூறுகின்றனர்.

1818-ம் வருடம் நெடுந்தீவைச் சேர்ந்த போன்சி அந்தோனி என்பவரும் அவரது சகாக்களும் கட்டுமரத்தில் மீன் பிடிக்கச் சென்றபோது கடுங்காற்றினால் மேற்படி தீவை அடைந்தனர். மனித சஞ்சாரமற்ற அத்தீவில் பயத்துடன் புனித அந்தோனியாரைத் தியானித்தபடி மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் தங்கியபின்னர் நெடுந்தீவுக்கு வந்து தமக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கூறி அடுத்த வருடம் இதே தினத்தில் அவர்கள் கச்சதீவுக்குச் சென்று புனித அந்தோனியாருக்கு ஒரு ஆலயத்தை அமைத்தனர். அதன் பின்னர் வருடந் தோறும் அங்கு சென்று பிரார்த்தனை செய்து வந்தனர். இக்காலங்களில் இந்திய மக்கள் எவருமே அங்கு வருகைதந்தது கிடையாது. நெடுந்தீவுக்குத் தென் மேற்கே கச்சான் திசையில் இது இருப்பதனால் 'கச்சான் திசைதீவு' என முன்னர் வழங்கப்பட்டு வந்ததாயினும் காலப்போக்கில் சச்சதீவாக அதன் பெயர் திரிபு கொண்டது. மேற்படி பெயர்களை இத்திடலுக்குச் சூட்டியவர்கள் நெடுந்தீவு மக்களேயாகும்.

சுமார் 145 வருடங்கள் வரை வாழ்ந்து அண்மையில் காலமான நாகப்பர் காத்திகேசு என்பவரிடம் இத்தீவகத்தைப்பற்றி நான் விசாரித்த போது வெள்ளைக்காரர்கள் இங்கு வருமுன்னர் நெடுந்தீவு தன்னாட்சி பெற்ற தீவகமாக இருந்ததெனவும் கச்சதீவும் எமது ஆதிக்கத்தின்கீழ் இருந்ததெனவும் பெருமிதம் பொங்கக் கூறிய அம்முதியவர் இராமேஸ்வரம் கோவிலுக்குப் பசுப்பாலும் பூக்களும் இங்கிருந்து அனுப்பப்பட்டதாகவும், அக்காலத்தில் கணிசமான மழை வீட்சி இருந்ததால் நெடுந்தீவு மக்கள் கச்சதீவில் விவசாயம் செய்ததுடன் பூமரங்களையும் நாட்டினரெனவும் பெருந்தொகையான பூக்களைத் தினசரி இராமேஸ்வரத்திற்கு அனுப்பிவைத்ததாகவும் கூறினார். இதற்கு ஆதாரமாக வயல் நிலங்களை நாம் இப்போதும் காணலாம். அங்குள்ள சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்ட அனைவரும் நெடுந்தீவுப் பிரசைகளேயாகும்.

1917-ம் ஆண்டு பங்குனி 22-ம் திகதி நெடுந்தீவிலிருந்த வண. பிதா வாஸ் சுவாமிகள் புனித அந்தோனியார் தேவாலயத்திற்கான அடிக்கல்லை நாட்டியுள்ளார். தற்பொழுது அங்கு காணப்படும் கிணறு 1916-ம் வருடம் கட்டப்பட்டது. ஆலயம் கட்டி முடிக்கப்பட்டதும் நோவினைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுச் சிறப்பாக நடைபெற்றுவந்தது. 1922-ல் இராயப்பு ஞானப்பிரகாசம் கோவிலின்மூப்பராகவும் சுவாணி கிறகோரி என்பவர் ஆராதனை முதல்வராகவும் நெடுந்தீவுக் கிறீஸ்தவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதன் பின்னரே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களும் கூட முதன் முதலில் கச்சதீவுக்குச் சென்றனர். நெடுந்தீவு மக்களைத் தவிர இதர பகுதி மக்கள் எவராயினும் கச்சதீவில் கால்களைப் பதித்தது 1922ம் ஆண்டுக்குப் பின்னரேயாகும். 1952 ல் சூசையப்பர் குகை கட்டப்பட்டது. 1955 ம் ஆண்டு வரை இந்தியர்கள் எவருமே கச்சதீவுக்கு வருகை தந்தது கிடையாது.

நெடுந்தீவில் இருந்தவண.சுவாம்பிள்ளை சுவாமியே கச்சதீவுக்கு முதன்முதலில் இந்தியர்களை அழைத்திருந்தார். 1955 ம்வருடம் தொண்டியிலுள்ள வண. பிதா குலாஸ் அவர்களுக்கு விடுத்த வேண்டுகோளின்நிமித்தம் அவரும் மற்றும் 15 கிறிஸ்தவர்களும் முதன் முதலில் கச்சதீவுக்கு வருகைதந்தனர். 1961 ல் எழுந்த கச்சதீவுப் பிரச்சனை காரணமாக இலங்கை இந்திய நாடுகளைச் சேர்ந்த குருமார்கள் அங்கு செல்லாது நிறுத்திக் கொண்டனர். எனினும் கோவிலில் பொறுப்பதிகாரிகளான நெடுந்தீவுக் கிறிஸ்தவர்கள் தொடர்ந்தும் உற்சவத்தை நடத்தி வருகின்றனர். மேற்கூறிய சான்றுகளின் மூலம் கச்சதீவு நெடுந்தீவு மக்களின் சொத்தாக இருந்து வருவது புலனாகின்றது.

அநேக ஆண்டுகாலமாக நெடுந்தீவு மக்களின் கண்காணிப்பின் கீழ் இருந்துள்ள இத்தீவகம் நெடுந்தீவுக்கே சொந்தம் என்பது மறுக்கமுடியாது. நெடுந்தீவைச் சேர்ந்த வேலாயுதம் உடையார் தனது மகள் குஞ்சுப்பிள்ளைக்குக் ''குஞ்சாட்டி'' எனப் பெயர் கொண்ட இத்தீவகத்தின் அரைவாசியைச் சீதனமாக வழங்கியுள்ளார் 'குஞ்சாட்டி' என்பது ''சிறியவளவு'' என்னும் பொருள் கொண்டது. அரசு முறையிலும் இதன் நிருவாகம் இலங்கையைச் சார்ந்ததாகவே அதாவது நெடுந்தீவுக் காரியாதிகாரியின் கண்காணிப்பிலேயே உளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி மலரே உயரப்பற

**கி. அந்தோனிமுத்து**

பழைய மாணவன்

**ஊ**மையர்களாய், செவிடர்களாய், குருடர்களாய் அந்தகாரம் சூழ்ந்திருக்கும் பரந்த உலகிலே வாழும் மக்களை சீரும் சிறப்பும் பெற்று விளங்கிட உன் ஒளி வீசி உயிர்ப்பிக்க வந்த மலரே உயரப்பற.

எல்லையில்லாத நிலப்பரப்பிலே உன் மங்காத புகழ் ஓங்கி உன் ஒளிச் சுடர் விட்டெரிய மாவித்தியாலய மலரே உயரப் பறந்து வா.

உன்வரவை எதிர்நோக்கி இதயம் மகிழ்ந்திருக்கும் இந் நெடுந்தீவு மக்களின் இதய ஆவலை நிறைவேற்ற உன் வண்ணச் சிறகடித்து ஆகாய வானிலே பறந்து வா. தேன்மொழி மதுரத்தமிழோசை தேச மெல்லாம் பரவிட உன் ஒய்யார ஒளியை வீசி எம்மை மகிழ்விக்க வந்த நெடுந்தீவு வெள்ளிவிழா மலரே உயரப் பறந்துவா.

மழை வெய்யில் எனப் பாராத வெண்திரை ஆழ்கடல் வெள்ளி மலரே மனதில் உற்சாகமூட்ட உன் வண்ணச் சிறகடித்துப் பறந்துவா.

பற்பல அழகிய கட்டுரை, கவிதைகள் உன்னில் இடம் பெறவும் புதுப் புதுப் பெயர் பெறவும் உன் வண்ணச் சிறகால் உயரப்பறந்துவா.

மனிதன் மனிதனுக சமூக ஊழல்களை நீக்கி வாழ்விலே ஒரு புதுமையும், புகழும், அன்பும் அறனும் செழிப்புற்று ஓங்கிவளர எங் களின் மாணவ மங்கா ஒளிவிளக்கே உன் அழகிய கட்டுரைகளை வாசித்து சீர் திருந்த மலரே உயரப்பறந்துவா.

மாலை, காலை வேளையில் வேலையற்று வீண் கதைகளை வீதியிலே சம்பாஷித்துக் கொண்டிருக்கும் மக்களின் மத்தியிலே புதிய மலர்ந்த வெள்ளி மலரை வாசித்து உன் அழகிய கோலத்துடன் உன் புகழ் ஓங்க ஒய்யாரமாக உயர வீசிப்பறந்துவா.

உயரப்பறக்கும் மங்காத மணிவிளக்கே உன் அகத்தில் பொங் கும் கவிதைகள் புகழும் நாவல்கள் நளின நகைச்சுவைகள், அத் தனையும் பிரகாசித்து இன்றுடன் என்றும் இதய மலராய் வீச இரு ளாத சுடர் விளக்காய் எங்கும் பறந்துவாடா என் இதய வெள்ளி மலரே! நாமெல்லாம் கரங்களிலே எம்மாலே தீட்டப்படும் அலங் கார மலரை வளர்த்து செழித்து செழுமையுற தீங்காரம் செய்வோமா.

வாழட்டும் எம் வெள்ளிமலர்
ஓங்கட்டும் எம் மாவித்தியாலயம்
பறக்கட்டும் பரணி எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு மகாவித்தியாலயம் 25-ம் ஆண்டு வெள்ளி விழா
கொண்டாடுவதை இட்டு எங்கள் உளம் கனிந்த வாழ்த்துக்கள்

"உண்மையான அன்பை வாய்ச்சொல் வெளிப்படுத்தாது
சேவைதான் வெளிப்படுத்தும்" — மகாத்மா காந்தி

45 வருடங்களாக மக்கள் மனதில் மங்காப்

புகழ் பெற்றுள்ளது

# மில்க் வைற் சோப்

இலங்கைக்கு முதன் முதலாக நீலசோப்பை
அறிமுகப்படுத்தியவர்கள்

மில்க் வைற் ஸ்தாபனத்தாரே

மில்க்வைற் நீல சோப் மேலுறைகளில் திருக்குறள் அச்சிட்டு
வெளிவருவதால் மேலுறைகளை சேகரித்து பரிசுகளைப்பெறுங்கள்

*மில்க் வைற் தொழிற்சாலை,*

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



***The Girls' skipping events***
**மாணவிகளின் கயிறடித்தல் நிகழ்ச்சி**



***The Senior boys' Mile race in progress***
**ஒரு மைல் ஓட்டப் போட்டி நிகழ்ச்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Editor Speaks

Today we proudly celebrate the Silver Jubilee of our institution.

Our area, which was an economically backward one was languishing for want of educational facilities, when in 1946 a ray of light appeared on the horizon. Under the educational scheme drawn up by the Father of the Free Education, Dr. Kannangara, this institution was set up. An energetic, go-getting youngster, Mr. Navaratnasingham, was appointed the first Principal. His devotion and skill helped to build up the institution and produce several talented youngsters. He will always live in the hearts of the pupils who were fortunate enough to pass through his hands.

When our school was founded, it had no permanent building or land of its own. Mr. S. Nagendra, the former V. C. Chairman generously offered his help to overcome these shortcomings.

Nor can we ever forget the devoted service renderd by pioneer teachers like Pandit N. Kandiah, Mr. M. A. Kandappu and Mr. K. Selliah. This is not to be little the services rendered by the other teachers who succeeded them.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Special credit should be given to our illustrious and God fearing pioneers who so planned the whole structure of the school that as one enters the premises the profound emphasis given to religion is marked by the solemn prayer hall for the Hindu children and the beautiful Grotto of Our Lady of Lourdes for the Christians.

Originally only Arts subjects were taught in our school. Today Science subjects, Commerce and Handicrafts are also taught here. We have classes from the 1 st standard to the University Entrance. There are 22 teachers on our staff today.

Our past pupils are rendering distinguished service in different parts of the world. When we think of the doctors, engineers and teachers produced by our school, we cannot but bow our heads in grateful homage to our Alma Mater.

We are gladdened at the thought that an Old Boy is the Head of the institution today. Most of the present teachers are themselves Old Boys.

A heavy burden has been cast upon me as Editor. One to limitations of space I have been reluctantly competed to exclude several excellent contributions.

My thanks are due to all the contributors, all those who have lavishly given financial help for the publication of this Souvenir, all our advertisers, our block-makers Gnanams studio, and last but not least, our printers, Aseervatham Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Reflections

*C. V. E. Navaratnasingam*
*Our founder Principal*

It is with a profound sense of happiness that I send a small account of my reflections on a period, I consider, the best in my life-eighteen and a half years in Delft - on this joyous occasion of the twenty-fifth anniversary celebrations of Delft Maha Vidyalaya. It was my privilege to start this Institution as a Government Junior School under the Kannangara Free Education scheme and subsequently to have it raised to the status of a Maha Vidyalaya. Nostalgic memories come flooding to my mind - indelible memories of the island and its people, of the school and its teachers & students

In *1946*, Delft was a different place. Here was a large isolated island, almost cut off from the mainland, accessible only by a tedious and hazardous sea-route. The climate was unfavourable and the natural resourses limited. Here was a people who were surviving with the bearest minimum of facilities as regards food, health care, transport and education. They were enduring all their hardships, patiently suffering in silence. But they were a good, friendly and simple people who welcomed visitors with open arms. They also hungered for one thing-decent school where their children could be educated.

It was a challenge to me, challenge that I took up with pleasure, because I realised that all the ingredients essential for success were already there. The people were intelligent and the youngsters were talented. Their talents had to be tapped and had to be shown and guided in the right direction. It is said that education has for its object the formation of character. With this in mind, and with the ideals of religious training, hard work, discipline, sportsmanship and team work as keynotes, I set out promptly to tackle the task that was ahead.

Our work bore fruit soon and our hopes were realised. One by one the talented youth of Delft began to excel in every field studies, sports, music, dance and agriculture. And today this institution can count among its Alumni, Doctors, Engineers, Accountants, Veterinary Surgeons, Graduates in Science, Arts, Music and Dancing, Trained Teachers, Clerical Servants and Agriculturalists - men and women of character. All this could not have been accomplished but for the tremendous help that I received from the Government which helped to erect buildings and equip them, the people who pitched in to help when ever they were called took a keen interest in the school, the staff who toiled unceasingly and gave their fullest co-operation and the students who drank deep of the fountain of knowledge that were opened to them-they sometimes walked five miles to school, wore tattered clothes, went without lunch-but they did not cease for a moment in their search for knowledge. As I sit here and reflect on these twenty-five years, I am filled with a deep sense of satisfaction.

Now I take this opportunity to address the people of Delft, the Old Boys, the Staff and the Students of Delft Maha Vidyalaya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The enterprising people of Delft will go far, but they must make more sacrifice, so that their children may prosper.

The Old Boys must never forget their Alma Mater and must return at least once an year to the Institution and contribute to the well-being of their old school.

The teachers, whose function is among the noblest, must always remember the saying, "A teacher affects eternity; he can never tell where his influence stops".

As for the students, I say, "Have faith in your school–specially now the Principal–your man, an Old Boy of this school, a member of the staff for several years–knows what is best for you; be proud of your school; do not feel bad that your school is not among the biggest or oldest schools in the country. If you do your part well, you will find that your school is as good as any other and you will be proud to claim that you were associated with Delft Maha Vidyalaya–as I do today.

★

வட இலங்கையில் பிரபல பிடவை
ஸ்தாபனங்களில் சிறந்த இடம்

கணேசன் ஸ்ரோர்ஸ்.

63, K. K. S. Road, Jaffna.

78, K. K. S. Road, Jaffna.

திருமண வைபவமானாலும்
சரி இன்னும் தேவை பல
வகையிருந்தாலும் சரி
நம்பிக்கையான ஸ்தாபனம்

தந்தி : கணேசன்ரெக்ஸ்'

தொலைபேசி : 7169

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Person who served us most

### *By an old boy*

Delft, oh!. it was a place for punishment to our Government Departments; inconvenient island to work for 'self–convenice seeking'; idle place for 'actives'; poor island for 'fortunates'. But to Navaratnasingam, popularly known as 'Navam', it was a place to work, it was an island to serve, it was a piece of land to develop and it was a place to teach for eighteen long years.

He came to our island in 1946. Since then, he was no more an outsider. He was a friend of every home; a teacher of every youth; a pioneer of every development; an architect of every major industry; and a guide to every one. To any outsidder who thought of visiting Delft, there was also one Navaratnasingam to receive him and to look after his interests; to any local man there was the 'influencial master' to help him. To all his pupils he was the proverabial friends. To his teachers he was father - like in his advices and friendlike in his movements. If it was a function in one of his associate's home, oh! he was the hero of the day.

He was the embodiment of various lessons to his pupils and staff. With his simple half - sleeve shirt and verty, he taught simplicity to the true sense of the word. The appearance of the Head Master of the old Junior school housed in temporary 'cadjan Koddil' and the Principal of the new Mahavidyalayam housed in a spacious and beautiful buildings was the same. Changes occured in every aspect but not in his philosophy of life in the school. He respected 'man' but not the 'rank'.

Sense of duty is yet another lesson he taught by way of his living. Many a time he missed the once-a-day service launch and crossed the sea of Delft in 'Katamarams' to keep in touch with the Department of Education. It was well known at least to the Examination Department how he crossed the rough sea when a storm was expected and was about to risk his own life, in a simple fishing boat to be punctual at an examination centre. When there were Government servants seekining aeroplane serviee to discharge their duties, there was a school master in an isolated island, in the name of Government servant, seeking the services of Katamarams and fishing boats to discharge his duties.

His life is Gandhian in character with Garibaldian boldness. He did everything in the name of God. He thought twice before he plunged into any action. Such actions will always be successful.

Some get pleasure in 'drinks'; some get pleasure in 'smoke'; yet some others get pleasure in cinema etc. But these pleasures did not attract Navam. The money which others smoked and drank was spent on educating several intelligent youths. When he started educating them, the only relationship he had with the youth was their intelligence. His keen observations on every pupil made many mischievous truants Government servants. Had he limited his relationship with his pupils within the four walls of the school, the mischievous truants might have been turned out to be law-breakers rather than Government servants. Their intelligence would have

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

been more concentrated on law-breaking than on studies. He presumed himself as a missionary in the god's mission of teaching and hence he was true to his job. As such his name would certainly go among the names of the galaxy of great school masters.

When we the people of Delft, look back our developments and advancements we come to a conclusion that the Maha-vidyalayam has played a great role in them. So who was responsible for it? Was it not the head of the school who steered it towards this direction? Indeed he was the silverliving in the clouded atmosphere of Delft in latter forties and early fifties. Hence during that period of 18 years, he was the hero of our literature, the leader of our literature, the leader of our movements, the beacon of our English education and his name will certainly go down into our history and his services will be ever green in the memory of the faithful people of Delft.

★


வெள்ளி விழா மலர்
சிறப்புற எமது நல்லாசிகள்.

உங்கள் தேவைகளுக்குகந்த சாறிகள்,
வர்ணஜால வனப்புறு பிடவைகள்,
சேட்டுகள், சூட்டிங்குகள் றெடிமேட் ஆடைகள்,
நிதான விலையில் விற்பனவு செய்துவருகின்றோம்.
யாழ்நகரில் பிரபல பிடவை வியாபாரிகள்:

கணேசானந்தாஸ்
சில்க் பலெஸ்
15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
[மின்சார நிலைய வீதி]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Cooperation
# The Key To Human progress

*by*

**P. Kathiravelu,** *S. C., J. P. U. M.*
*President, Pungudutivu M. P. C. S.*

Wise men everywhere are agreed that it is the Co-operative Movement alone which holds the key to human progress.

The Ceylon Co-operative Movement is about 60 years old. It originated as the Credit Movement aimed at relieving rural indebtedness. In course of time it expanded into other fields like agriculture, marketing, consumer service and industrlal production. Today the Government's declared policy is to make Co-operation the instrument of economic and social development.

The Co-operative Movement is the sole one capable of bringing about an economic and social revolution peacefully, without bloodshed. It also aims, above all at. a spiritual and moral revolution. Each for all and all for each is its motto. That is why it has been truly called a 'dharma', a way of life.

Under the Co-operative reorganisation scheme carried out by the Government, the large multipurpose Co-operative is intended to be a people's organisation serving the people's economic, social, cultural and moral needs.

If the new large primaries fulfil the aims of reorganisation, they will usher in the era of **jana sakti**–people's power

The Government's Five Year Plan has assigned a key role to the Co-operative movement. Regional Development Schemes (to be implemented through the District Development Councils) Co-operative Farms, Agricultural Devlopment, Small Industrics, Fisheries Housing Schemes these are some of the major obligations cast on the Cooperative movement by the Five-Year Plan. It goes without saying, therefore, that the new mutlipurpose societies have been cast in the star role by the Government's Five-Year Plan. If the members of the Boards of Directors and the employees of these societies serve the people will a sense of integrity and dedication, there is no doubt whatsoever that the people will prosper in every sphere.

It is all important, therefore, that the Co-operative Movement progresses and flourishes Its progress is the progress of humanity.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Rome was not build in a day

*Dr. J. S. A. Jeyaratnam*
B. V. Sc. & A. H. (Pakistan)
(Govt. Veterinary Surgeon, Kayts)

Anyone attempting a task of great magnitude may be beset by two temptations impatience and discouragement. He starts with great hope and enthusiasm but, on finding that the task will take much longer than he thought, he becomes impatient and scamps the work to get it finished. When he sees the numerous difficulties to be overcome, he becomes dis couraged, relaxes his effort or abandons the work as hopeless. As a check to his impatience and as a cheer to his discouragement comes in the old proverb, "**Rome was not built in a day**". To build this great city it took several centuries. In the same way a task really worth doing cannot be done quickly or easily. Slow progress must not make us impatient and even a mountain of difficulties must not discourage us.

A youth is ambitious to become a fine athlete. He is of opinion that a few days practice will make him a first-class bat or a dynamic centre-forward.

But when he realizes that it will take him months and months of practice and hard training, he becomes impatient and discouraged. To such a youth the proverb says, "**Be patient. Rome was not built in a day**".

Another youth makes up his mind to become a great scholar. He devotes himself in real earnest to his studies. But the more he learns, the more does he realize that he has still more to learn. As he proceeds with his studies, the subject enlarges and the difficulties faced become more and more insurmountable. He now understands that it will take him several years of hard mental toil to reach his goal. He becomes disheartened Then the same old proverb has for him this word of cheer, "Be not discouraged, for **Rome was not built in a day**"

This proverb is never meant to imply encouraging laziness or procrastination. The idler, when remonstrated for his lack of progress, may gaily reply, "Ah, well! What more can you expect of me? **Rome was not built in a day**".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



SHIELD WINNER FOR THE CHAMPION HOUSE



CHAMPIONS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Delft and Development

*A. C. Sebanayagam, C. A. S.*
*D. R. O. Delft.*

To put the subject in proper perspective it would not be inappropriate to mention here briefly the historical aspects that led to the need for development of the country rapidly to avert the unprecedented social and economic crisis that is fast approaching.

Till now our economy depended mainly on a tripod tea, rubber and coconut a legacy left by our colonial masters It worked well for a time when these export crops fetched a fair price in the world market, There was enough profits to import the country's requirements of food and other articles. There was not much of unemployment The population was manageable.

However due to a cumbination of adverse trends in world trade and the rapidly expanding population with mounting unemployment created many complex problems which had reached crisis proportions. The moment of truth had come. Either we decide to work hard on a planned programme or we perish There is no alternative. The whole country must develop according to the availability of resources. The five year plan was drawn up and placed before the people in the hope that there would be full participation by the people.

Development should conform to the genius of a people. Each area has its own special features. It is with this in view each village committee area is made a Development council area. The Development council which consists of represetatives of local bodies, co-operatives, rural development societies, cultivation committees etc is given the responsibility of formulating proposals for development of the area taking into considerations the availability of local resources like Land, Labour, raw materials and other special skills.

As far as Delft is concerned the development council has to contend with certain serious inherent limitations like lack of water resources and agricultural land. Hence a number of schemes proposed could not satisfy certain conditions stipulated and therefore rejected as not economically viable projects. However there is nothing to despair. There are other ways of developing the island provided there is reorientation in the traditional thinking and values what is necessary is the inculcation into the minds of the younger generation the dignity of labour and the willingness to do any job that comes their way.

There is no indication of any serious scientific survey of the islands topography, its soil and other mineral resources having been done by competent persons which could have been helpful to the Development council. However from a Layman's point of view one cannot fail to absorve the sea around and hence the vast potential for its development. The government has given high prority for the development of fisheries and it is a matter for great satisfaction that Delft has been selected by the government as one of the few primary society areas in the country. Work is proceeding at a fast pace in this direction. The

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

government has already appointed a Fisheries Inspector exclusively for Delft.

Yet another area of development would be a planned programme of planting more palmyrah and coconut palms. The soil is ideally suited for these two palms. If every student takes upon himself the responsibility of planting and caring for one each of these palms every year for the next five years in his own home they can collectively transform the economy of this island within a generation. It is most unfortunate that the people have still not realised the potential of these great palms.

There are also others who opine that an industry based on the lime stone found here could make a viable enterprise. The results are awaited from CISIR on the samples of lime stone sent for analysis. One should be cautious in starting such industries as continuos supply of lime stone should be ensuredto feed the in dustry lest they become white elephants.

The territorial engineering service is now working on a scheme to exclude the sea water during floods and high tide from getting into the land through the various channels right round the island by a system of sluice gates. Simultaneously they are also deepening the tarks to conserve rain water. By this twin method they hope to level up the water table so that it could be possible to cultivate the lands close to the tanks by reducing progressively the salinity content of the soil.

Animal husbandry is already an established occupation of the people here. However it is not being done systematically. The animals are not properly cared for. Quite a large number of them are left to fend for themselves becoming victims of stray dogs and causing problems for other people. A sustained effort should be made to develop more pasture land and grassland. It might be possible to do this once the salt water exclusive scheme becomes a reality.

Though the development council could not formulate acceptable proposals due various limitations the service of the various departmental officers are available to advice the people on the management and maintenance of their individual enterprise on modern scientific methods.

It is the youth who should increasingly shoulder the responsibility of developing their own island. The teachers could do a great service in guiding their charges to channel their energies in the proper direction.

These are therefore some of the prospects facing the people of Delft What is necessary is the coordinated and co-operative endeavour of the whole community to develop their own island according to their own genius. With dedication and hard work success is assured.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Religion and Man

***P. Benedict***
*(Teacher—Palaly)*

Let me at the very outset define Religion. Religion is the bond uniting man and God. It is a bond that entails many mutual relationships.

To understand more easily the role of religion in man's life, let us observe the phenomenon of religion. We can say that religion is as old as man himself. Man has always been conceiving of a being superior to himself, Supreme Being. The primitive man considered natural forces like thunder, wind and fire as Gods. That was because his mind was but infantile. But as he became more civilized in the course of time, his mind grew more mature and his conceptions of God evolved. His God was no more the impersonal forces of nature but a personal super-natural being, an absolute being. Consequently his attitudes towards God-in other words, his religious life-changed from servile fear to loving union. What is interesting about this phenomenon is that whenever human communities existed, however cut away they might have been from one another, there existed also religions.

What shall we say about this phenomenon, this innatetendency in man. Can we discard it as a mere illusion or imagination? The denial of a universal natural experience of man would amount to the denial of the reality of man's existence itself. We have only one judgement to make. Religion is so natural to man that it is necessary for him.

A moral code without religion has no solid foundation. It crumbles under the ultimate question 'why'. Social life then becomes impossible. The individual will no more be a person endowed with moral freedom, but a mere number. Justice would have no place in the struggle for existence. The guiding principles would be "Might is right" and "Survival of the fittest"—which principles befit only the irrational world.

The lives of people who deny God and religion might seem contradictory to what we have just said. But ultimately they too have a religion. They are committed to an absolute value, if not to an absolute person, Therefore in the heart of hearts even they have some sort of religion.

Man is a complex being. Besides his body he has spiritual faculties. like intellect and will. There is in him a hierarchy of values in which the spiritual reality is superior to the physical. No amount of physical joys can quench this spiritual thirst. The lives of the sages and saints of various religions bear witness to this truth. Only religious experience can do it.

Modern psychology supports the idea of religion. On one hand it reveals the growing consciousness of the individual about the importance of his being a 'person'. On the other hand, it has discovored that the individual self is open to 'the other'. This openness is an infinite capacity which is perfected by giving

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the self to the 'other' and receiving from the other. The finite 'other'. is incapable of exhausting this infinite capacity. Only an Infinite other can give it a total perfection.

This is actually what religion does. Let us consider the greatest religions like Hinduism and Christianity. Hinduism presents three 'Margas' to reach the Infinite: Karma marga-the way of action; Gnana marga - the way of knowledge; Bhakthi marga - the way of devotion. Christianity presents Christ -marga, the way of Christ, namely equality, brotherhood, love and service. They all aim at the same thing Moksa- union with the Infinite.

Without religion, human life would be meaningless, impossible and a big void.

★

A. K. S. & SONS

RENOWNED FOR QUALITY JEWELS
IN MODERN DESIGNS

"JEWEL HOUSE"

63, 65, KANNATHIDDY, JAFFNA.

Dial : 519

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Hero of the Space-Age

***P. M. J. Antony**, B. Sc.*

"That's one small step for me, but one giant leap for mankind".

The three men of the apollo *11* chosen for the moon voyage were Neil Alden Armstrong, Edwin Eugene Aldrin and michael Collins. Two of them Armstrong and Aldrin had actually walked on the moon. The commander of the apollo-11 spacecraft was Neil Armstrong. I have selected him as my most unforgottable character ever in my life.

Neil Armstrong, a quiet, thoughtful man with a sense of humor; and is known as a man of few words; He was born on the 5th of August *1930*; near a small town Wapakoneta, Ohio, in the middle west of the United States. Armstrong's love for flying developed early in his life. When he was six years old, he went for a airplane-ride with his father. Next year he began to build model airplanes, and this activity continued for several years.

He shone well in his school too, and advanced quickly, doing especially well in science and mathematics. He worked at Wapakoneta's small airport, paying for his own flying lessons. He obtained his pilot's permit even before he received his permit to drive a car. Besides these activities, Neil was looking at the stars through a neighbours telescope. At the age of *17* Neil went to Purdne University in Indiana, and left after two years to become a pilot, with the United States Navy. At the age of 19, he has gone on many military flights during the Korean War.

Two nights before the launching of apollo - 11, he made his final public appearance on National Television. He was asked questions by four news reporters selected from the *3*,000 present. Neil appeared slightly nervous, choosing his words with care. Asked if he had any fears about the flight, he replied, that though fear was not an unknown emotion to him, he had no fear of begining the apollo - *11* flight

Before the journey Neil had spent many hours in models of the command Module and Lunar Module. Thus he was able to practice every part of the *8* day flight-launching, earth-orbit operations, rocket firing entry into lunar-orbit, landing on the moon, launching from the moon and return to earth.

When the lunar module approched the landing area of the moon, at a speed of 20 feet a second, until it was almost directly. over the selected spot ("sea of Tranquility") at a height of 300 feet, neil discovered the moon surface was full of large rounded rocks For about *90* seconds Armstrong searched for a clear spot to land In the descent engin, with little fuel left, he had only a few seconds left to make his landing or to return, by firing the ascent rocket to the Command Module. He was very calm, as he continued to look for a place to land. He eased the Lunar Module down slowly, until a blue light on the instrument board flashed to indicate that the five-foot long feelers on thre of the legs had touched the surface.

Although Armstrong is known as a man of few words, his heartbeats told of his excitement upon leading man's first landing on the moon. At the time of descent rocket firing his heartbeat was recorded at 100 beats a minute (*77* is normal for him) and it increased to 156 at the time of the landing.

Neil had proved that the moon was now within man's reach and when he placed his first foot-print on the moon he uttered the long awaited words, which are certain to live in history.

"That's one small step for me but one giant leap for mankind."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெலிபோண் இல.: 7157

# ஐ. சின்னத்துரை அன் சன்ஸ்

"பலசரக்கு வியாபாரம்"

## 13, பஜார் லேன், யாழ்ப்பாணம்.

**உள்ளூர் உணவு உற்பத்திப் பொருட்கள்**

மொத்தமாகவும் !

சில்லறையாகவும் !

மலிவாகவும் !

பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கர பந்தாட்டக் குழுவினர் **VOLLEY BALL TEAM**



உதைபந்தாட்டக் குழுவினர் **FOOT BALL TEAM**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Report of the Delft Mahavidyalaya

## TEACHERS' GUILD-1972

It is our proud privilege to present to you the Report of the Mahavidyalaya Teachers' Guild for the year 1972. This year we have teachers most of whom are from our Island Delft and from our neighbouring towns. This Guild has altogether twenty-two members since the begining of the year 1972. The election of the Executive Committee of the Teachers' Guild took place very early in the acadamic year under the distinguished patronage of our Principal Mr. R. Sinnathamby, B. A., Dip. in Ed.

President: Mr. P. M. J. Antony B. Sc.
Secretary: Mr. S. Sivanayagamoorthy
Treasurer: Mr. A. Subramaniam
Recreation Secretary: Mr. S. Gnanarajah.

The activities of the Teachers' Guild conducted efficiently and effectively so far were of varied nature. During this acadamic year, four members were being transferred to other schools, and for them we gave warm farewells. To mention some of them especially, we had a farewell function on 16th March 1972 for our Madura Pandit S. Pasupathy when he was transferred as Head Master to Saivapragasa Vidyalaya of Delft. On 30th March this year we the members of the Teachers' Guild and the school children together celebrated the farewell function for our ex-principal Mr. N. Kurunathan, B. A. Dip. in Ed. When he was transferred to Mann's College, Uduvil. Subsequently four new members were transferred to our school to fill the vacancies and hence we had also the opportunity of conducting the welcome parties for them.

The opening of the School Canteen, stands out prominently, in addition to the very many rewarding activities of our routine. At this juncture we are proud to say, that this is the first canteen opened within the premises of our school, since its birth. Almost all the children and staff of our school, benefit greatly in many respects, because of its presence. The following students are in the Supervising Committee of the Canteen:

Students:- Mast. S. Tharmaratnam, 10-A.
,, S. Sivasambu, 1st Year Ad/L.
,, S. Kanapathypillai, Ad/L.
Miss. A. Daisy Mariapushpam, Ad/L.
,, M. Yogeswary, 10-A.

The recreation Branch of the Teachers' Guild is active since the commencement of the Union. We conduct recreational programmes, at the end of every term and we get together with the happy brother-hood. This provides the members, with brighter and happier moments from the monotony of the daily activities.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

On behalf of the members of the Teachers' Guild we extend our sincere thanks to our patron, who is not only a source of guidance and inspiration but also is kind enough to render timely advice and lesson the burden of the executive committee.

Our thanks are due to the Lady teachers for having done their best in the kitchen in making the dinners enjoyable.

Finally we thank wholeheartedly all the members of the Guild for their best Co-operation rendered to us in all affairs of the Union and pray that the Almightly God will bless this Union, so that it may grow from strength to strength.

Thanks to you all.

**P. M. J. Antony**
*President*


**S. Sivanayagamoorthy**
*Secretary*


நெடுந்தீவு மாவிலித் துறைமுகத்தில்
வனப்புடன் அமைந்திருக்கும் மகத்தான நிலையம்
வருவார் போவாரை ஆதரிக்கும் வள்ளன்மை மிக்க மா நிலையம்
தாகசாந்தி செய்யும் தனிப்பெரும் நிலையம்
புனித சிற்றுண்டிவகைகள்
தரங் குறையாத பலவித சாமான்களைத் தாங்கி வரும் நிலையம்
எந்நேரமும் உதவி செய்ய ஆயத்தமாக இருக்கும்
இனிய நிலையம்


# சாந்தி நிலையமே

மாவிலித்துறை
மத்தியாஸ் பெனடிக்ற்
நெடுந்தீவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**S. Sivanayagamoorthy Esq.**
(Hony Secretary P. T. A.)



**M. Benedict Esq.**
(Treasurer P. T. A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பகுதி

## சங்கே முழங்கென்று கும்மியடி

கும்மியடி பெண்ணே கும்மியடி - இன்று
குங்குமப் பொட்டிட்டுக் கும்மியடி
—கும்மியடி

வெண்திரை சூழும் நெடுந்தீவில் இன்று நல்
வெள்ளி விழாவென்று கும்மியடி -என்றும்
மங்கல மாக மகாவித்தி யாலயம்
எங்கும் புகழ்வீசக் கும்மியடி
—கும்மியடி

ஆலயங் கள்தோறும் சங்கும ணியோசை
சேர ஒலிக்குது கேளுங்கடி — இன்று
பாரினில் யாரும் கூடிம கிழ்ந்திடச்
சிருடன் கும்மிய டியுங்கடி
—கும்மியடி

எட்வேட் நவரட்ண சிங்கமே எம்மின்
எழில் முதல்வரென்று கும்மியடி - அவர்
கட்டடம் ஆலயம் சோலைகள் மேடை
அமைத்தவ ரென்றின்று கும்மியடி
—கும்மியடி

கடமை கண்ணியம் கட்டுப்பா டென்பதை
காட்டிவைத் தாரவரைத் தொடர்ந்து-மேலாம்
ஆசிநா தர்குரு நாதர் அவர்களும்
ஆக்க மளித்தனர் சொல்லுங்கடி
—கும்மியடி

மாவுறை தீவின்ம கன்சின்னத் தம்பியும்
தாயகம் சேர்ந்தனர் கும்மியடி- அவர்
பாரினில் யாமென்றும் பண்புடன் வாழப்
பழக்கி வைப் பாரென்று கும்மியடி
—கும்மியடி

இந்து கிறீஸ்தவர் பற்பல சாதியர்
என்றுமி ணைந்தனர் பாருங்கடி — அவர்
பல்கலை பெற்றென்றும் பண்புடன் வாழ்ந்திட
பாடிக் கும்மிய டியுங்கடி
—கும்மியடி

எண் எண்கலைகளும் எங்கள்கல் லூரியில்
என்றும் வளர்ந்திடக் கும்மியடி — இன்னும்
பொங்கும் தமிழ் மணம் எங்குமே வீசிட
சங்கே முழங்கென்று கும்மியடி
—கும்மியடி

வை. இராஜேஸ்வரன்
*பல்கலைக்கழக புகுமுக வகுப்பு*
*(1-ம் வருடம்)*

## இன்றைய இளைஞர்

*"இளைஞர் சமுதாயத்தை எங்களிடம் வர விடுங்கள் இப் பூவுலகையே தேவுலகாக மாற்றித் தருவோம்'' எனறு சூளுரைத்தனர் அறிஞர்கள். எழுச்சி மிகுஇளைஞர் தம் ஆற்றலைப் பலவற்றுலும் ஏற்றமுற ஊக்குவிக்கும் விழுமிய எண்ணமே இன்றைய இளைஞர் இயக்கத்தின் எழுச்சிமிக்க அடித்தளமாகும்.*

*''இளமையை மகிழ்விக்கும் இறைவனுக்காக'' என்னும் மொழிவழியே ஒளி நிறைந்த வருங்காலத்தை உருவாக்கப் பெரு விருப்பு நிலவுகின்றது. இன்று வெள்ளம் போல் இளைஞர் கூட்டம் வீறு கொண்டு எழும்போதெல்லாம் பக்குவம் என்னும் அணையால் பயிற்சி என்னும் மதகைப் பயன்படுத்திஞல் இளைஞர் பேரணியை ஊக்கி ஆக்கப்பணிகளை ஊக்குவிக்கலாம்.*

*அறியாமை என்னும் நோயையும் அவநம்பிக்கை என்னும் தீயையும் பசிப்பிணி என்னும் பாவியையும் அகற்ற ஆர்த்தெழ வேண்டியிருக்கிறது. அஞ்ஞான இருள் நீங்கி மெஞ்ஞான அருள்ஒளி ஓங்கவேண்டும். இளைஞர் சமுதாயம் இந்தப் பணிக்கு ஆற்றல் பெற்றிருத்தல் இன்யமையாதது.*

*இளைஞர் பற்றி யார் பேசிஞலும் வலிமை, உண்மை, மகிழ்ச்சி வருங்காலத்தை வெற்றிகொள்ளும் ஊக்கம் ஆகியவை பற்றியே பேசுகின்றனர். குடியரசு என்னும் சொல்லுக்கு உண்மையான உயர்ந்த பொருளை இளைஞர்கள் வழங்குகின்றனர். மனிதனின் மதிப்பினை உயர்த்துவது குடியரசு, எல்லோருடைய ஏற்றத்திற்காகவும் குறிப்பாக ஏழை எளியோர் நலனுக்காகவும் உடன் பிறப்பு உணர்வோடு உழைக்கத் தூண்டுவது அது.*

*இளைஞரிடையே தோன்றும் மறுமலர்ச்சியும் புத்துணர்ச்சியும் நாட்டை வளமுறுத்தும் வகையில் பயன்தர அனைவரும் கருத்தூன்றவேண்டும். நாட்டுப் பற்றும் இறைப்பற்றும்நாணயத்தின்இருவிளிம்புகள் போல் இணைந்திருப்பவை. ஒரு புறம் தேய்ந்தாலும் நாணயம் தன் செல்வாக்கை இழந்து செல்லாக் காசாகி விடும். அது போன்று ஊருக்குழைப்போர் இரு பற்றுக்களையும் ஒருங்கே பெற்றிராவிட்டால் உருப்படியான பணிகளைச் செய்ய இயலாது போய்விடும்.*

சா. அசெம்ராக்கமலா
10 ''B'' Science

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பை வியந்திடுவோம்

1. ஈழமணித் திரு நாட்டின் புதல்வியாய்
இலங்கு நெடுந்தீவே—நீ
வாழிய என்றுனை வாயார வாழ்த்துவோம்
வாழிய வாழிய வே.

2. சதிராடும் கடல் மகன் தாவிப்பிடித்திடும்
கன்னி நெடுந்தீவே—அவன்
கையாற் சொரிந்தநற் சங்கையும் முத்தையும்
சாற்றி மகிழ்ந்திடுவாய்.

3. ஆவினங்க ளெல்லாம் அன்புடன் சென்றிடும்
அழகு நெடுந்தீவே—எம்
அன்னை "பசுந்தீவு" என்றுனை வாழ்த்துவோம்
வாழிய வாழியவே.

4. பாரியிலும் சற்றே மேலான தங்கப்
பனைகளைத் தந்தவளே—அவை
வாரி வழங்கிடும் வகைதனை நாளுமே
வாயார வாழ்த்திடுவோம்.

5. தென்றல் தவழ்ந்திடும் தீங்கனிச் சோலையில்
தேமாங் குயில்பாட—அங்கு
வண்டின மெல்லாம் மகிழ்ந்தே குலாவிடும்
வகைதனை வாழ்த்திடுவோம்

6. பண்புட னுடவர் பெண்டிர்கள் சேர்ந்தே
பக்குவமாய் வாழும்—தமிழ்(ப்)
பண்பாடு சற்றும் தவறுத நல்ல
பண்பை வியந்திடுவோம்.

க. அரசரத்தினம்
விஞ்ஞானப் பகுதி
2-ம் வருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாக நீள் நகர்

இற்றைக்கு முன்னே ஈராயிர வாண்டில்
அற்றை உலகத்தார் அறிந்த பெரு நகரம்
நம்மவரின் நாவாயும் யவ்வனத்துக் கப்பல்களும்
நாடிப் பொருளெடுத்த நல்ல பெரு நகரம்
அன்னுடு யாதென்று அறியத் துடிக்கின்றீர்.
அன்னுட்டு நிலைசொல்லி அதுயா தென்கிறேன்
எடுப்பாரே இல்லாமல் இன்றிருக்கும் பெரியதுறை
எடுப்பான துறைமுகமாய் இருந்ததொரு பெரிய துறை
பீமுனையாய்க் கிடக்கின்ற புகு முனையோ
பீதாம் பரங்களுடன் பிறபொருளும் வந்தமுனை
மரியாத்தை கல்லென்று மருவிக் கிடக்கின்ற
மறியாற்றுக் கல்லெனும் மாண்புமிகு இயற்கை அணை
பாரதத்தின் தென்கரைக்குப் பாலேற்றிச் சென்ற நகர்
பாரோர்கள் வாயினிலே பசுத்தீவு என்ற நகர்
இத்தனையுங்கொண்ட நகர் இலங்கியது எங்கு
இன்றந்த நகரெங் கென்றறி வீரோ?
நாக நீள் நகரென்று நல்லோர்கள் சொன்ன நகர்
நாம் பிறந்த நல் நெடுந் தீவன்றே.

சி. குகதாஸ்
விஞ்ஞானப் பகுதி
3-ம் வருடம்

## பணம்

பணம் என்பது எல்லோராலும் விரும்பக்கூடியதும். சுலபமாகக் கைமாற்றம் செய்யக் கூடியதும், கொடுக்கல் வாங்கல் செய்யக் கூடியதும், கடன்களைத் தீர்க்கக் கூடியதாகவுமுள்ள ஓர் பண்டமாற்று ஊடகமாகும். ஆதியில் மக்கள் தமது தேவைகளைப் பண்டமாற்று மூலம் பூர்த்தி செய்து கொண்டார்கள். ஆனல் இப் பண்டமாற்று முறையில் பல கஷ்டங்கள் இருந்தமையால் அவற்றை நீக்கிப் பொருட்களை இலகுவாகக் கொடுக்கல், வாங்கல் செய்வதற்கு ஒரு பொருள் வேண்டியதாயிற்று. இதுவே பணம் எனப்பட்டது. நாம் இன்று பாவிக்கும் பணம்போல் ஆரம்ப காலத்தில் பணம் இருக்கவில்லை. ஆரம்ப காலத்தில் எப்பொருள் இலகுவாகச் சந்தைப்படுத்தக் கூடியதாக இருந்ததோ அதுவே பணமாகப் பாவிக்கப்பட்டது.

இவ்வாருகப் பணமாகப் பாவிக்கப்பட்ட பொருட்கள் காலத்திற்குக் காலம், நாட்டுக்கு நாடு வேறுபட்டிருந்தது. அக்காலத்தில் கால் நடைகள், அவற்றின் தோல், உப்பு, சிப்பி போன்றவை பணமாகப் பாவிக்கப்பட்டன. எனினும் இவற்றிலும் பல குறைபாடுகள் காணப்பட்டமையால், இவற்றைப் பணமாகப் பாவிப்பதை விட்டுப் பவுணையும். வெள்ளியையும் பணமாகப் பாவிக்க மக்கள் ஆரம்பித்தனர். இவ்விரண்டு உலோகங்களும் நல்ல பணத்திற்குரிய குணதிசயங்கள் இருந்தமையால் அவை நீண்ட காலம் பணமாகப் பாவிக்கப்பட்டன. இவ்வாறு பணம் தோன்றிய பின்னர்தான் பொருளாதார முன்னேற்றங்களும், வியாபார அபிவிருத்தியுமேற்படத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பணம் பலவகைத் தொழில்களைச் செய்கின்றது. பண்டங்களைக் கைமாற்றம் செய்யும் சாதனமாகவுள்ளது.

அடுத்து ஒருவர் தனது தேவைக்கு மிதமிஞ்சிய பொருட்களைப் பணத்துக்கு விற்றுத் தனக்குத் தேவையான வேறு பொருட்களைப் பணத்தின் மூலம் வாங்கக் கூடியதாகவிருக்கிறது, எனவே பணம் விரும்பிய பொருளை வாங்குவதற்கு உதவி செய்கிறது. மேலும் பணம் பிற்போடப் பட்ட கடனைத் தீர்க்க உதவுகின்றது. அன்றியும் பணம் இருப்பில் வைத்துக் கொள்ளக்கூடியதாகவுள்ளது. ஏனெனில் பணம் உறுதித் தன்மையுள்ளது.

இலகுவாகக் காவிச்செல்லக் கூடியதாகும் பணத்துக்கு உறுதித்தன்மையிருத்தல் வேண்டும். மேலும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் பிரிக்கக் கூடிய தன்மையுள்ளதாகவும், ஒரே தன்மையுள்ளதாகவும், இலகுவில் அறிந்து கொள்ளக்கூடியதாகவும், சலன மற்ற பெறுமதியுள்ளதாகவும், இலகுவாகப் பிரித்து அறியக்கூடிய தன்மையுடையதாகவுமிருக்க வேண்டும்.

நாணயங்களைப் பாவிப்பதில் அதிக கஷ்டங்கள் இருந்தன. அக்கஷ்டங்களை நீக்குவதற்காகத் காசுத்தாள் புழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இத்தாட் காசின் தோற்றத்திற்கு மூலகாரணமாகவிருந்தது வங்கிகளால் கொக்கப்பட்ட பற்றுச் சீட்டுக்களாகும். நாளடைவில் தாட் காசை வெளியிடும் அதிகாரத்தை மற்றைய வங்கிகளிடமிருந்து எடுத்து மத்திய வங்கிக்குக் கொடுக்கப்பட்டது. தாட் காசுகளில் பொறிக்கப் பட்டுள்ள பெறுமதிக்குப் பெறுமதியற்றதாகையால் அடையாளக் காசு எனப்படும். தாட் காசைக் கொடுத்து அதிற் குறிப்பிட்டுள்ள பெறுமானத்திற்கு உலோகங்கள் பெற முடியுமாயின் அதை மாற்றக்கூடிய தாட் காசு என்பர். அவ்வாறு மாற்றமுடியாதிருப்பின் மாற்ற முடியாத தாட் காசு என்பர். தாட் காசு ஒரு முழுச் சட்டப் பணமாகும்.

அடுத்து வங்கிப் பணத்தை எடுத்துக் கொள்வோம். மேற்கூறப்பட்டுள்ள வகைப் பணங்களைத் தவிர வங்கியிலுள்ள வைப்புக்களும் பணமாகப் பாவிக்கப்படும். கொடுக்கல் வாங்கல்களுக்குப் பணத்தைக் கொடுப்பதற்குப் பதிலாகக் காசோலைகள் மூலம் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்றது. காசோலை ஓர் சட்டமுறைப் பணமில்லை.

மேற் கூறப்பட்டவைகளிலிருந்து பணம் என்றால் என்ன, பணத்தின் அவசியம், அதன் தொழில்கள், அதன் குணங்கள், அதன் வகைகள் என்பவற்றைத் திட்டவட்டமாக அறிந்தோம். வர்த்தகம் விருத்தியடைந்து, பணம் மக்களிடையே ஓர் செல்வாக்கைப் பெற்று வருகிறது என்பதில் சற்றும் ஐயமில்லை.

**ச. பத்மநாதன்**
வர்த்தக வகுப்பு (க. பொ. த.)
(2-ம் வருடம்)

## கல்வியும் விளையாட்டும்

ஒரு சாதாரண மனிதன் சுகதேகியாகவும், நீடித்த காலத்திற்கும் வாழ்பவனாக இருந்தால், அவன் இளமையிலேயே, அதாவது பாடசாலைச் சிறுவனாக இருந்த பொழுதே அவன் நல்லுணர்வூட்டும் கல்வியையும், உற்சாகத்திற்தளைத்தோங்கிய உடலுறுதியையும் அதாவது விளையாட்டையும் அவன் தக்க முறையில் பயின்றிருக்க வேண்டும். ஆகவே நாம் பிற்கால வாழ்க்கையை எண்ணும் போதுங் கூட கல்வி வாழ்க்கை மட்டும் ஒருவனை முழு மனிதனுக்காது. அத்துடன் உடற் பயிற்சியும் முக்கிய தேவை என்பது புலனாகிறது. எனவே நாம் கல்விபயிலும் எப்பாடசாலையிலும் கல்விமட்டுமன்றி உடற் பயிற்சிக்கும் நேரம் ஒதுக்கப்படல் வேண்டும்.

முதலிற் கல்வியை எடுத்துக்கொண்டோமாயின் ஒரு மாணவன் கல்வியைக் கற்குந்தோறும் அதிலுள்ள நன்மைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்து அதன்படி ஒழுகிக்கொள்வானாயின் அவனது மனத்திலுள்ள குறைபாடாகிய அறியாமை தானாகவே நீங்கிவிடும்.

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தற்கு
கற்றனைத் தூறும் அறிவு'

என்றார் வள்ளுவர். எனவே நாம் கற்குந் தோறும் பொருளுண்மைகளை அலசி ஆராய்ந்து ஆழமாகக் கற்க வேண்டும். அதே வேளையில் நம்மை உருவாக்கிய ஈசனையும் தொழுதல் வேண்டும். இதனை விளக்குவதற்கு

'கற்றதனா லாய பயனென் கொல் வாலறிவான்
நற்றாள் தொழாஅர் எனின்'

என்றார் வள்ளுவப் பெருந்தகை.

அடுத்தபடியாக நமது உடற் பயிற்சியை எடுத்துக் கொண்டோமாயின் அது எத்துணை உதவி செய்கிறது என்று பார்ப்போம். கல்வியினால் மட்டும் வாழும் மனிதன் ஒரு போதும் சுகதேகியாக வாழவே மாட்டான். சோம்பியே திரிவான். அத்துடன் கல்வியையும் சரியான முறையிற் கற்கமாட்டான். எனவே உடற் பயிற்சி அவனுக்கு அத்தியாவசியம். ஏனெனில் உடற் பயிற்சியானது ஒருவனின் உடற்குறைபாட்டை நீக்கி உடல் வளர்ச்சியைக் கொடுக்கிறது. அத்துடன் மன உச்சாகத்தையும் சுறு சுறுப்பையும் அவனுக்கு அழிப்பதுமல்லாமல் அவனது உடல் முழுவதும் குருதிச் சுற்றோட்டம் நிகழ்ந்து கொள்ள அவனது மூளை விருத்தியடைகிறது. எனவே ஞாபகசக்தி மனவலிமை ஆகியனவும் அவன் உள்ளத்தைக் குடி கொள்கின்றன.

எனவே ஒருவன் கல்வி கற்குந் தோறும் கல்வியே முதற்படியென்றெண்ணாது அதன் பகுதியில் ஒன்று உடற் பயிற்சி என்பதையும் எண்ண வேண்டும். இளைஞர்கள் இவ்விரண்டையும் நல்ல முறையிற் கற்பார்களேயாயின் ஒரு முறையில் நாட்டின் அறிஞர்களாகவும். இரண்டாவது முறையில் நாட்டின் வீரர்களாகவும் விளங்குவார்கள். ஆகவே மாணவர்களாகிய நாம் கல்வியையும் விளையாட்டையும் இரு கண்கள் போல் மதிக்க வேண்டும்.

அத்துடன் ஒலிம்பிக் விளையாட்டுக்களான மேல் நாட்டு விளையாட்டுக்களையும் நாம் பயின்று நவநாகரீக வீரராக வாழவேண்டும். இதன் நோக்கமாகத் தான் அன்று எத்தனையோ கல்வியறிவுடைய மாணவர்கள் வீரராக மாற வேண்டுமென இலங்கையில் இருந்து மேல் நாடுகளுக்குச் சென்று வீரம் பொருந்திய வீரர்களாகத் திரும்பியுள்ளார்கள் என்றால் அவர்களது பெருமை எத்தகையது.

அத்துடன் உடற்பயிற்சியினால் (விளையாட்டினால்) மேலும் ஒரு நன்மையுண்டு. என்னவெனில் ஒருவனுக்கு விளையாட்டுப் பண்பு ஏற்படுகிறது அத்துடன் கட்டுப்பாடு, உண்மை என்பனவும், விளையாட்டில் தலைமை வகிக்கும் ஆற்றலும் அவனிடத்தில் ஏற்படுகிறது. எனவே அவனுக்குக் கல்வியிலும் ஒருவித நற்பண்பாடும், பேச்சாளனாகத் தலைமை வகிக்கும் ஆற்றலும், அவனுக்கு ஒருங்கே கை கூடுகிறது. ஆகவே ஒரு மனிதனின் வாழ்க்கையில் கல்வியும் விளையாட்டும் அத்தியாவசியம் என்பதை உறுதிப் படுத்துகிறேன்.

**பெ. மாசில்லாமணி**
9 A (Sc)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் மாவித்தியாலயம்

பல்வளந் தரூஉம் நல்நெடுந்தீவில்
நல்புகழ் கொண்டெம் நடுவண் இலங்கும்.
மாகலைக் கோயில் எம் மாவித்தியாலயம்
மாசிலீர் பத்தொடு ஐந்தாண் டளவாய்
பல்கலை ஈந்து நம் நாட்டவர் நயம்பெற
சொல்புகழ் பரப்பித் தூய வாழ் வளித்து
எண்டிசை எங்கணும் இசை மிக எழுப்பிக்
கண்டிடும் விழாநாள் காண்டலும் இனிதே

கலையொடு ஒழுக்கம் கண்ணியம் என்று
நிலைபெறும் பயிற்சிகள் அத்தனையும் தந்து
இதம்பெறு தகைமைகள் எத்தனை எத்தனை
விதம் விதமாக நன் மறை வழிப்பாங்குடன்
நித்திய வாழ்க்கையில் நிலவிட வென்றே
உத்தம கிறீஸ்தவ ஒழுக்கமுமீந்து
சுத்த நற்சைவ மத பத்தி நெறியோடு
முத்தி நெறிகாட்டிய எங்கள் கலாசாலை நீடுவாழி

நற்றமிழ் மொழித்திறனில் பரிசு பல சுமந்தே
நாடகம் சேர் மேடையினில் நல்ல புகழ் பெற்றே
கற்றவர்கள் கண்டு களிகொண்டு இசையுற்றே
காணாத நாட்ட வரும் கேட்டு மகிழ்வுற்றே
நவரட்ண சிங்கத்தின் பின்னர் நல்ல
ஆசிகுருநா தருடன் வல்ல சின்னத் தம்பி
நாயகர்கள் தலைமைதாங்கு நல்ல கலைக் கூடம்
நாளெல்லாம் வாழ்கவென நன்று கூறுவோமே.

ஜே. மேரி மாகிறேற்
10 D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**NET BALL TEAM** வலைப் பந்தாட்டக் குழுவினர்



1946-ம் ஆண்டு தொடக்கம் எம் மாவித்தியால யத்திற்குச் சேவையாற்றவரும் ஆசிரியர்கட்கும், ஏனைய வர்கட்கும் "செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருந்து" உண்டி கொடுத்தல் மூலம் உயிர் கொடுத்து ஆதரிக்கும் அன்னையும் தந்தையுமான திரு. நா. குட்டிப் பிள்ளை அவர்களும் பாரியார் திருமதி. கு. செல்லமுத்து (சின்னக்கா) அவர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசிப்பிணி மருத்துவர்

வானம் பொழிந்ததம்மா
வயல்கள் நனைந்ததம்மா
மானம் காக்கவென்றே
மண்ணிற் பயிரிடுவோம்
வயலை உழுதிடுவோம்
வரம்பு கட்டிடுவோம்
பசளை பெய்து மண்ணைப்
பதமாய் ஆக்கிடுவோம்

நெல்லை விதைப்போமம்மா
நீரைக் காப்போமம்மா
கொல்லும் களை கிருமி
கூடாது போற்றிடுவோம்
வளர்ந்து முதிர்ந்த செந்நெல்
வாளால் அரிந்தெடுத்து
உயர்ந்த சூடாக்கியதும்
உள்ளம் குதி கொள்ளும்

நாடு செழிக்குமம்மா
நலங்கள் வளருமம்மா
மாடு வரிசை கட்டி
வைக்கோல் பிரித்து விட்டால்
நசிக்கும் பசி போக்க
நாளும் பயிர்வளர்க்கும்
பசிப்பிணி மருத்துவர்க்கு
பாரில் நிகருண்டோ அம்மா.

ப. நிர்மலாவதி
9 A

## நாயர்நான்

முற்ரு சின்ன இளங்கன்று
முதிரா நல்ல மான்கன்று
பற்றை மறைவில் ஒளித்திருந்தே
பாயும் நல்ல முயல்குட்டி
புற்றில் வாழும் உடும்புமுதல்
புவியில் வாழும் அத்தனையும்
சற்றும் என்னிடம் வாலாட்டா
தகைமையுடைய நாயர் நான்.

நன்றியுள்ள மானிடரின்
நட்பை மேலும் பெருக்கிடவே
என்றும் எந்தன் வாலாட்டி
இருத்தல் எனது கடமை; அதை
நன்றி கொன்ற மனிதர்க்கும்
நக்கற் காக நாளுட்டில்
நன்றியுள்ள நாயென்றே
நவில்வார் என்ன உலகமிது.

நன்றி கெட்ட மனிதரைப்போய்
நன்றி கெட்டோர் சொல்லிடுவார்
நன்றி கெட்ட நாயென்றே;
நானும் கேட்டுப் பொறுத்திருப்பேன்
நன்றி கெட்ட நாயா? நான்
நாளும் இல்லை; நாயென்ருல்
நன்றி யென்றே செப்பிடுவார்
நல்லோர், கேட்டு மகிழ்ந்திடுவேன்.

சு. கலாநாயகி
9 C (கலை)

## வித்தியாலயத்தில் சமயம்

மாவித்தியாலய புகு வாசலின் கிழக்குப்புறமாக ஸ்ரீமன் கத்தோலிக்க குகைப் பீடமும், எதிரே கிறிஸ்துவ கோவிலும் மேற்குப் புறமாக இந்துக்களின் திருப்பணி மண்டபமும் காட்சியளிக்கின்றது. 1946-ல் ஆங்கிலப் பாடசாலை ஆரம்பமாகிய போது ஸ்ரீ மான் எட்வேட் நவரட்ணசிங்கம் அவர்கள் அதிபராக கடமையாற்ற வந்த நாட் தொடக்கம் சமய பக்தி ஆரம்பமாகியது. வெள்ளிக்கிழமை காலை பாடசாலை தொடங்கிய நேரங்களில் சமயப்பக்தி அனுஷ்டிக்கப்பட்டு அந்நாட் தொடக்கம் ஒவ்வோர் மாணவ மாணவிகளுக்கும் தமது சமய வழிபாட்டுக்குரிய இடம் கொடுக்கப்பட்டு பாடசாலை சமய வளர்சியும் அவரவர் பக்திவளர்சியும் உண்டாகுகின்றது.

பாடசாலை ஆரம்பத்திலும் முடிவிலும் கத்தோலிக்க மாணவர்கள் ஒன்று திரண்டு செப ஆராதனைகளும், சைவ மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று இரண்டு தேவாரபாடல் பக்தியும் அனுட்டித்து வருகின்றனர். வெள்ளிக் கிழமைகளில் அவரவர் கோவில்களில் ஆராதனைகளும் சமயவளர்ச்சிச் சிற்றுரை களும் நடைபெற்று வருகின்றன. சமய அறிவும் அவ்வவ்வகுப்புகட்கு ஏற்ற சமய ஆசிரியர்களாலேயே படிப்பிக்கப்பட்டு வருகின்றது. மாதமொரு முறை சமய சங்கம் கூட்டப்பட்டு சமய வளர்ச்சி அடிக் கடி அடிகோலப்பட்டு வருகின்றது.

வருடமொருமுறை கத்தோலிக்க கிறிஸ்து இராசா தினமும், சரஸ்வதி பூசையும் மிகவும் சிறந்த முறையில் அவ் வச் சமய ஆசிரியர் மாணவ மாணவிகளால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வரு கின்றது.

இவ்வித்தியாலயம் நெடுந்தீவில் சகல சாதி சமய வேறுபாடற்ற முறையில் செயற்படும் ஓர் சிறந்த கல்லூரியாகும்.

கொ. தேன்மதி டொறத்தியா
8 A

## மரவேலை

மரவேலையைப்பற்றி ஆராயுமிடத்து இது மூளைவிருத்திக்கு ஆதாரமாகவுள்ளது. இதனால் இப்பொழுது பாடசாலைகளில் 6ம் வகுப்பில் இருந்தே மரவேலைப்பாடம் கற் பிக்கப்பட்டு வருகின்றது. இக்கல்வி எங் களிடையே பொருட்களை நுட்பத்துடனும் திறமையுடனும் செய்ய ஆவலை உண்டாக்கி வளர்க்கின்றது. மரவேலையானது ஒருமாண வனுக்கு செயலாற்றுந் தன் நம்பிக்கை, வேலையைத் திறம்படச்செய்து முடிக்கும் திருப்தி, அறிவையும் திறனையும் ஒருங்கு சேர்த்துத் தொழிற்படுந் திறமை, சமூகத் திற்கு உதவும் தன்மை முதலியவற்றை விருத்திசெய்கிறது. இத்தொழில் வருவாய் பல தருவதனால் அதில் ஈடுபடுவதற்கு துணிச்சல் ஏற்படுகின்றது. மரவேலையைப் பயிலும் மாணவன் அதிற்திறமை பெறு வதில் எல்லாக் காரியங்களையும் செய்யும் திறமை பெறுகின்றான். இதனால் வாழ் நாளிலே வேலைகளைச் செய்வது இலகு வாகின்றது. தசைநார்கள் தகுந்த முறை யில் வித்தியடைகின்றது. மூளைவளர்ச்சிக்கு உதவுகின்றது உடல், உள்ளம், சமூகம் பொருளாதாரம் முதலியவற்றிற்கு வழி காட்டியாக அமைகின்றது அத்துடன் அவன் முழுமனிதனாக விளங்க உதவு கின்றது. மரவேலை பயிலும் மாணவன் உடல், உள, கணிப்பினும் மதியுடனும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். அங்ஙன மாயின் அதே செயல் அவன்தன் வாழ்க் கையைக் கொண்டு நடத்த சிறுவயதில் இருந்தே கற்றுக்கொள்கின்றான். நல்ல தொரு பாடசாலையில் மரவேலைப்பாடம் பயிலும் மாணவனுக்குப் புத்திக்கூர்மையை ஏற்படுத்துவதே முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது. முற்காலக்கல்வி முழுதும் புத்தகத்தையே அடிப்படையாகக் கொண் டன, ஆனால் இன்று செய்கை முறையும் அதைப்பற்றிய அனுபவமுமே அடிப்படை யாகக் கொண்டுள்ளது. மாணவனுடைய அறிவு கற்பனையில் மாத்திரம் நின்று விடா மல் செயல்களாக வெளிவருகின்றன. இதைவிட மாணவன் திருப்தி அடை வதற்கும் மரவேலைப்பாடம் உபயோக மளிக்கின்றது. சிறந்தமுறையிற் திட்ட மிட்டுச் செயலாற்றும் மரவேலைக்கல்வித் திட்டம் மனிதனுக்கு ஓர் வாக்கை வழி காட்டியாக உதவுகின்றது.

நா. இராசேந்திரம்
வகுப்பு 8 B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வாழ்க்கை

குறுகுறு நடை நடந்து குதலைமொழி பேசும் குழந்தைப்பருவம் ஆருண்டு கழிகின்றது. முற்றும் தாய் தந்தையின் சூழ்நிலையிலே வாழ்ந்த குழந்தைகளுக்கு ஓர் புதிய உலகம் வரவேற்பளிக்கின்றது. ஏழாம் வயதின் ஆரம்பத்திலே சிறிய குடும்பத்தில் இருந்து பெரிய குடும்பமான பாடசாலை வாழ்க்கைக்கு வரவேற்புக் கிடைக்கின்றது. அவ்வாழ்க்கைக்கு காலடிவைக்கும் குழந்தைகள் பலருக்கும் குதூகலமே உண்டாகின்றது. ஒரு சிலருக்கு மட்டுமே பாடசாலை வாழ்க்கை கடினமான, வாழ்க்கையாக அமைந்து விடுகின்றது. பெரும்பாலும் பாடசாலை வாழ்க்கை ஆரம்பத்திலே பெரும் பாலாஞேருக்கு மகிழ்ச்சி ஊட்டும் காலம் என்று தான் கூறவேண்டும்.

பாடசாலை வாழ்க்கை ஆரம்ப நன்னுள் ஒரே விதமாகத் தோன்றுவதில்லை. ஒவ்வொரு குழந்தையினதும் மனே நிலைமை, குடும்ப நிலை, சூழ்நிலை என்பன பலவிதமாக தோன்றுவதும் உண்டு. முதல் நாளிலே புதுப்புது முகங்களைக் காணும் வாய்ப்புகுழந்தைகளுக்கு ஏற்படுவதினுலேயே ஒரு புறம் திகைப்பும் மறுபுறம் மகிழ்வும் ஏற்படுகின்றது. புதிய நிலையிலே ஆசிரியர் வகுப்பறை ஆகியன பீதியையும் வளர்ப்பதுண்டு. எது எப்படி ஆயினும் பழகப் பழகப் பாடசாலை வாழ்க்கை கரும்பு போன்று இனிக்கவல்லது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. அவ்வாழ்க்கைதான் ஒவ்வொரு குழந்தையின் எதிர்காலத்தையும் நிர்ணயிக்கின்றது. ''தமக்கும் பிறருக்கும் பயன்பட வாழ்வதே வாழ்க்கை'' எப்படியும் வாழலாம் என்பது வாழ்க்கை அன்று. இப்படித்தான் வாழ வேண்டும் என்பதை நிலை நாட்ட அடிப்படையாக அமைந்தது தான் பாடசாலை. வாழ்க்கைக்கும் பாடசாலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தாய் தந்தையின் குடும்பத்திற்கும் வழிகாட்டியாக அமைகின்றது பாடசாலை. ஆசிரியர் சகல மாணவ மாணவிகளுக்கும் நல்ல அனுபவங்களைக் கொடுக்க, குழந்தைகள் தங்களைப் பூரண வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துகின்றன.

இத்தகைய பூரண வாழ்விற்கு ஆதாரமான கல்வி பாடசாலை வாழ்க்கையிலே அமைவதனுற்ருன் எல்லா நாடுகளிலும் பதினுன்கு வயது மட்டும் பிள்ளைகள் படித்தே ஆக வேண்டும் என்ற சட்டம் நடைமுறையில் இருக்கின்றது. தொழிலிலே கடமை, உணர்ச்சி என்பன பாடசாலை வாழ்கையிலே தான் தோற்றம் தருகின்றது.

காலப்போக்கிலே குடும்பத்திற்கும் கிராமத்திற்கும் நாட்டிற்கும் உத்தமனுக உலகப் பெரியாராக விளங்கக் காரணம் பாடசாலை வாழ்க்கையே. காந்தி, நேரு, அவர்களின் வரலாற்றிலும் இது உண்மைத் தோற்றம் அளிக்கின்றது. அகிலம்போற்றும் அமரர் அண்ணு தமக்கும் பிறருக்கும் பயன் தரவாழ்ந்து அமரத்துவம் பெற்றமைக்குக் காரணம் பாடசாலை வாழ்க்கை அல்லாமல் வேறுஒன்றுமில்லை.

பாடசாலையிலே கட்டாயமாகச் சமயக் கல்வி போதிக்கப்படவேண்டும். சமய ஞானம் அற்ற கல்வி வெறும் கற்கள் என்பதே கல்விமான்களின் முடிவு. எனவே மாணவர்களாகிய நாம் பாடசாலை வாழ்க்கையிலே கடமை. கண்ணியம் கட்டுப்பாட்டுக்கமைந்து எமது பிற்கால வாழ்கைக்கு வழிவகுப்போமாக.

கு. சோதிராசா
வகுப்பு 8 ''B''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுத்தம்

சுத்தம் சுகம் தரும். சுத்தம் சோறிடும் என்பது ஆன்ரோர் வாக்கு. நாம் இவ்வாக்கின் படி நடந்தால் தான் சுத்தமாக வாழ முடியும். நாம் எமது உடலை சுத்தமாக வைத்திருப்பது உடல் நன்நிலையில் இருப்பதற்கு ஏதுவாகும். சுத்தம் ஒருவரின் வாழ்வுக்கு மலர்ச்சியைக் கொடுக்கும். சுத்தமில்லாமல் அழுக்குடைகளை அணிந்து அவலட்சணமாக தோற்றம் அளிப்பவர்களை ஒருவரும் விரும்பமாட்டார்கள் நண்பர்கள் உறவினர்களும் வெறுப்பார்கள்.

சுத்தம் என்னும் போது நாம் நமது உடம்பில் ஒவ்வொரு உறுப்பையும் சுத்தமாக வைத்திருப்பதோடு நாம் உண்ணும் உணவு, படிக்கும் இடம், அணியும் உடை என்பனவும் கவனிக்க வேண்டும். ஒருவர் சுத்தமாகத் தன்னை அழகுபடுத்தி இருந்தால் நல்ல உடல் உளவிருத்தியுடையவராக எல்லார் முன்னிலையிலும் தோற்றம் அளிப்பார். நாம் பாடசாலைக்குச் செல்லும் போதும் கோவிலுக்குச் செல்லும் போதும் வேலைத்தலத்திற்குச் செல்லும் போதும் சுத்தமாகச் சென்றுற்தான் அங்கு அவருக்கு நன்மதிப்புத் தோன்றும். தானும் மனச் சந்தோசம் அடைவார். சுத்தமாக இருப்பதற்கு உடற்பயிற்சியும் செய்தல் வேண்டும். அசுத்தமாக ஒருவர் இருந்தால் அவருக்குப் பல நோய்கள் உருவாகும் நம் உடம்பின் உறுப்பாகிய கைகளை எடுக்கும்போது கைகளில் உள்ள நகங்கள் மட்டமாக வெட்டாவிட்டால் அந் நகங்களுக்குள் கிருமிகள் சென்று நாம் உண்ணும் உணவுடன் உடலுக்குள் சென்று விடுகின்றது. இக்கிருமிகள் மூலம் தைபோயிட்டுக் காச்சல், வாந்தி பேதி, வயிற்றுளைவு ஆகிய கொடிய நோய்கள் ஏற்பட்டு நாம் இறக்க நேரிடும். தோலையும் நாம் சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

நாம் நம்மை மட்டுமன்றி எமது சூழலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அப்படி வாழ்வோமானல் எள்ளளவும் நோயால் பாதிக்கப்படமாட்டோம். சுத்தம் எமக்கு உயிர் நாடியாகத் திகழ்கின்றது. நாம் எமது வாழ்க்கையை "சுத்தம் சுகம்தரும் அசுத்தம் நோய்தரும்" என்ற மொழிக்கு இணங்க அமைத்து வாழ வேண்டும்.

தி. கங்காதரன்
6 A வகுப்பு

## நாம் அறிந்திருக்கவேண்டும்

நாம் நம்மைப் பெற்று வளர்த்த தாய் தந்தையருக்குக்கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். பெரியோரைக் கனம்பண்ண வேண்டும். நம்மைப் பார்த்து மற்றவர்கள் இவனைப் பெறுவதற்கு இவனுடைய தந்தை என்ன தவம் செய்தானே என்று போற்றத்தக்கதாக வாழ வேண்டும்.

"மகன் தந்தைக்காற்றும் உதவி -
இவன் தந்தை
என்னோற்றான்கொல் என்னும் சொல்"

மற்றவர்களுடன் அன்பாகப் பேச வேண்டும். நாம் இனிமையான சொற்களிருக்க அவற்றைப் பேசாது கடுமையான சொற்களைப் பேசுவது ஒரு மரத்திலே நல்ல இனிமையான பழங்களிருக்க அவற்றைப் பறித்து உண்ணுது கயர்ப்புடைய காய்களைப் பிடுங்கி உண்ணுவ்து போலாகும்.

"இனிய உணவாக இன்னுதல் கூறல்
கனியிருக்கக் காய் கவர்ந்தற்று"

நன்றி மறப்பது ஒருதீயசெயல். நன்றியை ஒரு நாளும் மறக்கக் கூடாது' ஆனல் ஒருவர் செய்த தீமைகளை மறந்து விடுதல் வேண்டும்.

"நன்றி மறப்பது நன்றன்று - நன்றல்ல
அன்றே மறப்பது நன்று"

நாம் படிப்பதை நன்ருக விளங்கிப் படிக்க வேண்டும் அதன் படியே ஒழுகவும் வேண்டும்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

நாம் கடவுளை ஒவ்வொரு 'நாளும் வணங்க வேண்டும். கடவுளை நாம் வணங்காவிட்டால் படித்ததினுற் பயனில்லை.

கற்றதனலாய பயனென் கொல்-
வாலறிவன்
நற்ருள் தொழா ரெனின்.

ெ

சலிங்கம்
6 B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் தீவு

என் தீவு யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தீவுகளில் இருந்து தனியாக ஆழ்கடலில் அமைந்துள்ளது. இத்தீவில் ஒரு மாவித்தியாலயமும், 12 வித்தியாலயங்களும் உண்டு. நெடுந்தீவின் சனத்தொகை 7,000ஆகும். ஒரு காரியதிகாரியும், மூன்று கிராமசபையாளரும் கடமையாற்றுகின்றார்கள். இங்கு பொலிஸ் நிலையம், கிராமாந்தர நீதிமன்றம், அரசாங்க வைத்தியசாலை, தபால் நிலையம், ஆகியவை பொது மக்களின் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ளன. தபால் நிலையத்தில் தந்தி சேவை இருந்த போதிலும் தொலைபேசி வசதி அமைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நெடுந்தீவு ஒரு தனிப்பட்ட கிராமசபையைக் கொண்டது. அங்கு 15 வட்டாரங்கள் உண்டு. எனவே இங்குள்ள உள்ளூர் ஆட்சி மன்றத்தில் ஒருதலைவரும், ஒருஉப தலைவரும் 13 அங்கத்தவர்களும் அங்கம் வகிக்கின்றார்கள். நெடுந்தீவில் பஸ் வண்டியும், நான்கு மோட்டர் லோஞ்சுகளும் சேவையில் ஈடுபடுகின்றன. இங்கு பிரயாண சேவைதான் கஷ்டமானது. மோட்டார் லோஞ்சுகள் அடிக்கடி பழுதடைவதால் பல தடவைகள் கடற் பிரயாண சேவை பாதிக்கப்படுகின்றது. இருந்தும் தனியார் மோட்டார் லோஞ்சுகள் கை கொடுத்து உதவுவதால் சேவை துண்டிக்கப்படாது நடைபெறுகிறது.

சரித்திர சம்பந்தமாய் ஆராய்ந்தால் இரண்டு பழம் கோட்டைகளும் மூன்று குதிரை லாயங்களும் உண்டு. இங்கு உள்ள குதிரைகளும் சரித்திரப் பிரசித்தி வாய்ந்தவை.

மு. சாந்தினி
5-ம் வகுப்பு

## எனது பாடசாலை

எனது பாடசாலை அரசினர் மா்வித்தியாலயம். எனது பாடசாலை நெடுந்தீவில் இருக்கிறது. எனது பாடசாலை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவை சிரேஷ்டபிரிவு கனிஷ்ட பிரிவு என்பன. எனது பாடசாலையில் ஆங்கிலம், கணிதம், தமிழ் ஆகிய பாடங்களைப் படிப்பிக்கிறார்கள். சிரேஷ்ட பாடசாலையில் 22 ஆசிரியர்கள் படிப்பிக்கிறார்கள். கனிஷ்டபாடசாலையில் 7 ஆசிரியர்கள் படிப்பிக்கிறார்கள். சிரேஷ்ட பாடசாலையில் 500க்கு மேற்பட்ட பிள்ளைகளும், கனிஷ்ட பாடசாலையில் 100 பிள்ளைகளும் படிக்கிறார்கள். இங்கே ஒரு தலைமை ஆசிரியரும் ஆங்கில ஆசிரியரும். தமிழ் ஆசிரியர்களும் இருக்கிறார்கள். கனிஷ்ட பாடசாலையில் 1 ம் வகுப்புத் தொடக்கம் 5 ம் வகுப்பு வரை இருக்கிறது. இலக்கிய மன்றம் 6-ம் வகுப்புத் தொடக்கம் 8-ம் வகுப்பு வரை மாதம் ஒருமுறை நடை பெறும். இந்த வித்தியாலயம் மத்தியில் இருப்பதால் எல்லா இடங்களிலுமிருந்து மாணவர்கள் வந்து படிக்கிறார்கள். எனவே இது ஒரு கலவன் பாடசாலை.

க. சியாமளா
4-ம் வகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the best Compliments*

*of*

**S. R. S.**

TEXTILES

**S. R. SELLATHURAI**

216, K. K. S. ROAD,

JAFFNA.



*Donated by*

**K. SELVARAJAH & Bros.**

37, KASTHURIYAR ROAD

JAFFNA



சுவையான உணவுவகைகளுக்கும்

சிற்றுண்டிகளுக்கும்

இன்றே விஷயம் செய்யுங்கள்

**பிருந்தாவனம்**

**ஹோட்டேல்**

இங்கே புகையிலை, சுருட்டு

மொத்தமாகவும் ல்லறையாகவும்

பெற்றுக் கொள்ளலாம்

144, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்



மகாவித்தியாலய

வெள்ளி விழாவிற்கு

எமது நல்வாழ்த்துக்கள்

உயர்ந்த ரக கைத்தறி உற்பத்திகட்கு

விஜயஞ் செய்யுங்கள்

**"வர்ண மஹால்"**

கே. கே. எஸ். வீதி

தாவடி

கொக்குவில்

ஐ. குமாரவேலு-வே. சங்கரப்பிள்ளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விநோத உடைப்போட்டி : **Fancy Dress Competition**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Ponies of Delft

Of all the tourists' attractions of the islet of Delft, the ponies are not only famous but also fascinating A few years ago the Government Film Unit focussed its Camera on these ponies and made a thrilling trailer of it. What entralled the audiences through out Ceylon was the equestrian feat of the natives in the art of roping in of fleeing ponies. The hardy ones are usually roped for taming.

The conditions obtaining in Delft are far from ideal for horse-breeding. However the ponies at Delft are viable. There are about thousand ponies whose progenies date back to some two hundred years. They out number the goats and the bovines in Delft. Browsing on sprouts and grass which appear here and there, the ponies have made "Velai" their home. History records that ancient kings of Delft like Meehaman and Vedi Arasan reared large number of horses for military purposes. The ruined bath-place and the pillars which were used as stakes for the horses are still extant. They add credence to the historical reports available

These ponies are a neglected lot for want of foresight from the Ministry of Tourism. The breed could be improved. if the Ministry takes some interest to make Delft a modern tourist resort, Foreign tourists too would be attracted for its very insularity.

The hopless condition of the Launch Service from Kurrikaduvan to Delft via Nainativu is a bane for tourists. The callous indifference shown by successive Governments agniast any improvement of the Launch Service has become a legacy of the past. The pilgrims who trek in to Nainativu go back without visiting Delft. This is a collosal waste to the Tourist Department.

